20

32°c
கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 26°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



கிருபா லேணர்ஸ்
சாரதி பயிற்சியில் நம்பிக்கையை வென்ற நிறுவனம்
216, கண்டி வீதி ,வவுனியா.
(வசந்தம் திரை)
024 2227777, 077 7100444



11 APR 2014



விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 136 வள்ளுவர் ஆண்டு: 2045
பங்குனி 28, வெள்ளி 11.04.2014


# மனித உரிமைகள் விவகாரம் இலங்கையில் கவலைக்கிடம்

## பிரிட்டனிடம் இருந்து மற்றொரு காட்டமான அறிக்கை நேற்று வெளியானது

கொழும்பு , ஏப்ரல் 11

2013ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமைகள் விவகாரம் கவலை தரும் விதத்திலேயே அமைந்திருந்தது என்று பிரிட்டனின் வெளி விவகார மற்றும் பொது நலவாய விவகார அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிக்கை சாடியிருக்கின்றது.

சர்வதேச அரங்கில் மனித உரிமைகளை மேம்படுத்தும் நோக்கில் வருடாந்தம் வெளியிடப்படும் இந்த அறிக்கையில், அக்கறைக்குரிய நாடு - சிறிலங்கா என்ற தலைப்பில் இலங்கையில் 2013ஆம் ஆண்டு இடம்பெற்ற மீறல்கள் குறித்து தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"வடக்கில் தேர்தலை நடத்தியமை, உட்கட்டுமானங்களை மீள உருவாக்குதல் போன்று போருக்குப் பின்னரான விவகாரங்களில் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் பல விடயங்களிலும் ஒட்டு மொத்தப் பார்வையானது பாதகமானதாகவே இருக்கிறது. பத்திரிகையாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்கின்றன" என்று அறிக்கை கூறுகின்றது.

சுமார் 7 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கை, இலங்கையில் இடம்பெற்றவற்றைப் பட்டியலிட்டுள்ளது. தேர்தல்கள், பேசுவதற்கும் ஒன்று கூடுவதற்குமான சுதந்திரம், மனித உரிமைகள் பாதுகாவலர், நீதியையும் சட்டத்தின் ஆட்சியையும் நிலைநாட்டுவதற்கான நடைமுறை, சாவுத் தண்டனை, சித்திரவதை, பொதுமக்களின் பாதுகாப்பும் முரண்பாடும், மதச் சுதந்திரம் அல்லது நம்பிக்கைகளின் சுதந்திரம், பெண்களின் சுதந்திரம், சிறுபான்மையினரின் நம்பிக்கை, குழந்தைகள் நலன் ஆகிய தலைப்புகளின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல், மனித உரிமைகளை மதித்தல் மற்றும் அரசியல் தீர்வு ஒன்றைக் கட்டியெழுப்புதல் என்பன முக்கியமானவை என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது. (உ-5)

## ஆஸியில் தமிழ் இளைஞர் தீக்குளிப்பு

### புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால்

சிட்னி, ஏப்.11

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கேட்டு விண்ணப்பித்திருந்த இலங்கையைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதை அறிந்து தனக்குத் தானே தீ மூட்டி உயிரிழந்துள்ளார்.

பால்மெயின் என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அந்த இளைஞர் தன் மேல் பெற்றோலை ஊற்றித் தீயிட்டுக் கொண்டார். அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், 48 சதவீதம் தீக் காயங்களுக்கு உள்ளாகியிருந்ததால் அவரை மருத்துவர்களால் காப்பாற்ற முடியாது போனது.

குறித்த இளைஞர் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவராவார். கடந்த 18 மாதங்களாக ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் குறித்த இளைஞர், பாதுகாப்பு அடைக்கலம் கோரி குடிவரவு குடியகல்வுத் திணைக்கத்துக்கு அவர் கொடுத்திருந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, மீண்டும் இலங்கைக்குத்

— 23ஆம் பக்கம் பார்க்க


இலங்கை அரசின் இன்றைய போக்கை நாடி பிடித்துப் பார்க்க முயலும் அமெரிக்கா

பக்கம் 14


## நல்லூரில் பாகிஸ்தான் தளபதி



யாழ்ப்பாணம், ஏப்.11

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பாகிஸ்தான் கூட்டுப் படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் நஷாட் மஹ்மூத், நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு வந்திருந்தார். அவரையும்,அவரது குழுவினரையும் நல்லூர் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் படை அதிகாரிகள் வரவேற்றனர்.

23ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரன் பாணியில் சம்பந்தன் உரையா?

### துருவுகின்றது குற்றப் புலனாய்வுத்துறை

யாழ்ப்பாணம், ஏப்.11

2012 ஆம் ஆண்டு மே மாதம் மட்டக்களப்பில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டில், கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் ஆற்றிய உரை

23ஆம் பக்கம் பார்க்க

## தாயும் மகளும் கைது

### தேடப்படும் தேவியனின் வீட்டில் வசித்தவர்களாம்

யாழ்ப்பாணம், ஏப்.11

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டுடன் தேடப்பட்டு வரும் தேவியனின் வீட்டில் தங்கியிருந்தார்கள் என்று கூறி வவுனியாவில் தாய் ஒருவரும், அவருடைய மகளும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் அஜித்

23ஆம் பக்கம் பார்க்க


எம்மைப் பின்தொடருங்கள்...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint


## கவனிப்பாரற்று இருக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி

### வடக்கு மாகாண சபை அசமந்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி இன்னமும் பயன்படுத்தபடவில்லை என்றும், இந்த நிதியை பயன்படுத்துவது தொடர்பில் மாகாணசபை உறுப்பினர்களுக்கு கலந்துரையாடல் நடத்துவதற்குரிய ஒழுங்குகளும் இன்னமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

23ஆம் பக்கம் பார்க்க

## கமலின் வெற்றிடத்துக்கு தவராசா நியமிக்கப்பட்டார்

### வர்த்தமானி அறிவிப்பு வெளியானது

யாழ்ப்பாணம், ஏப்.11

வடக்கு மாகணசபை எதிர்கட்சி உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரனின் வெற்றிடத்துக்கு அந்தக் கட்சியில் போட்டியிட்ட சி.தவராஜா நியமிக்கப்பட்டுள்ளார். அதுகுறித்து தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவினால் வர்த்தமானிப் பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு, அந்தக்

23ஆம் பக்கம் பார்க்க

## விபூசிகா - ஜெயக்குமாரியை ஒன்று சேர்க்கக் கோரிக்கை

### மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம்.ஏப்.11

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட விபூசிகா மற்றும் அவரது தாயான ஜெயக்குமாரி இருவரையும் ஒன்று சேர்ப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமெனக் கோரி கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்

23ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ஆயுதத்துடன் சிக்கியவர்களே உரும்பிராய் கொள்ளையின் சூத்திரதாரிகள்

### அடையாள அணிவகுப்பில் சிக்கிக் கொண்டனர்

யாழ்ப்பாணம், ஏப்.11

வவுனியாவில் போலித் துப்பாக்கிகள், இலக்கத்தகடுகள் மற்றும் கையுறைகளுடன் சொகுசுக் காரில் பயணித்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களுக்கும், உரும்பிராயில் சொகுசுக் காரில் வந்து கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்துக்கும் தொடர்புள்ளமை வெளிச்சத்துக்கு வந்தது.

யாழ்.நீதிமன்றில் நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போதே கொள்ளையில் ஈடுபட்ட இருவர் அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியாவில் கடந்த 28 ஆம் திகதி 5 பேரை சொகுசு காருடன் பொலிஸார் கைது செய்தி

23ஆம் பக்கம் பார்க்க


வளம் சேர்க்கும் முத்துஐயன் குளம்



பக்கம் 15


## ஒரு மாதத்தில் 65 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.11

கடந்த ஒரு மாத காலத்தில் 65 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 10 பேர் பெண்கள் என்று 'உதயனுக்கு' தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண, வடக்கு - கிழக்கில் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் கைது நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவித்தார்.

பளையில் கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி, தமிழீழத்தின் காவலர்கள் என்ற துண்டு பிரசுரம்

23ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நாவின் விசாரணையை விரும்பவில்லை இந்தியா

## இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் கூறுகின்றார்

புதுடில்லி, ஏப்.11
இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை விசாரணைகள் மேற்கொள்வதை இந்தியா விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார் இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங்.

சீ.என்.என். செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அதனை விடுத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தமது வரையறைக்கு அப்பாற்பட்டு இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்ள முனைகின்றது.


சுஜாதா சிங்.

அதனை இந்தியா விரும்பவில்லை. இலங்கையுடன் சிறந்த உறவைப் பேணுவதை இந்தியா தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

அதேவேளை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதையே இந்தியா எதிர்பார்க்கிறது என்பதை இலங்கை நன்றாக அறியும்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

## 4 கடைகள் உடைக்கப்பட்டு நல்லூரில் பெரும் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப்.11
யாழ். நல்லூர் கந்தசுவாமி கோயிலின் பின்புறமாக அமைந்துள்ள 4 கடைகளின் கதவுகள் உடைக்கப்பட்டு பல லட்சம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. மேலும் இரு கடைகளில் திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இந்தத் திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

நேற்றுக்காலை கடை உரிமையாளர்கள் தமது கடைக்குச் சென்றபோதே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது. திருடப்பட்ட கடைகளில் பெரும்பாலானவை புடைவைக் கடைகள். கடைகளின் முன்பக்கக் கதவுகள் உடைக்கப்பட்டு இந்தத் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

ஒரு கடையில் 40 ஆயிரம் ரூபா பணமும் புடைவைகளும் இரண்டாவது கடையில் 7 ஆயிரம் ரூபா பணமும் புடைவைகளும் மூன்றாவது கடையில் 3 ஆயிரம் ரூபா பணமும் புடைவைகளும் நான்காவது கடையில் 4 ஆயிரம் ரூபா பணமும் புடைவைகளும் திருடப்பட்டுள்ளன. மற்றைய இரண்டு கடைகளின் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளன. எனினும் பொருள்கள் எவையும் திருடப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அங்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (ற-4-101)

## அதிக விலையில் அரிசி விற்பனை: வர்த்தகருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஏப்.11
நிர்ணய விலையை பொருட்படுத்தாது கூடுதல் விலைக்கு அரிசியை விற்பனை செய்த 123 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே குறித்த வர்த்தகர்கள் மாட்டிக் கொண்டனர் என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அரிசி வகைகளுக்கான நிர்ணய விலை நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் அரிசியை பதுக்கி வைத்து சந்தையில் அரிசித் தட்டுப்பாட்டினை உருவாக்குவதற்கு எவரேனும் முயற்சித்தால் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையிலேயே கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. (ற)

## தவறான அடையாளம் காணலே மீனவர் தாக்குதலுக்கு காரணம்

### ஆம் ஆத்மி கட்சி கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஏப்.11
தவறான அடையாளம் காரணமாகவே இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ளது இந்தியாவின் ஆம் ஆத்மி கட்சி. தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ள அந்தக் கட்சி, அதனை தவிர்ப்பதற்காக இலங்கை - இந்திய கடற்படையின் கூட்டு ரோந்து மேற்கொள்ளவும் பரிந்துரைத்துள்ளது என்று 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி சகல மாநிலங்களிலும் போட்டியிடுகின்றது. இதனடிப்படையில் அந்தக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் மாநிலங்கள் தோறும் வெளியிடப்பட்டு வருகின்றது. தமிழகத்துக்கான தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதனை அந்தக் கட்சியின் கொள்கைக் குழு உறுப்பினர் கே.ஜெயராம் வெளியிட்டிருந்தார். இதன் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், "இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் என்று தெரிந்து கொண்டுதான் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்கின்றனர். நிலைமை அவ்வாறிருக்கையில் எவ்வாறு தவறுதலாக இடம்பெறுகின்றது என்று கூறமுடியும்? என்று ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு அமைதிகாத்த கொள்கைக் குழு உறுப்பினர், சிறிது நேரத் தின் பின்னர், இது எதிர்காலத்தை மையமாகக்கொண்டு உருவாக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தின் தமிழ் மொழியாக்கம் மேலோட்டமாக செய்யப்பட்டுள்ளமையால், அந்தப் பந்தியை விஞ்ஞாபனத்தில் இருந்து விலக்கிக் கொள்வதாக ஜெயராம் ஊடகவியலாளர்களிடம் உறுதியளித்தாக 'த ஹிந்து' குறிப்பிட்டுள்ளது. (ற-5)

## இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

### படகுகள் சேதம் என்றும் தெரிவிப்பு

சென்னை, ஏப்.11
தமிழகமீனவர்கள்மீதுஇலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என்றும் அதில் தமது படகுகள் சேதமடைந்துள்ளன என்றும் தமிழக மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கச்சதீவுக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களே தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. சுமார் 200இற்கும் அதிகமான படகுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும், அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தம்மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினர் என்றும் மீனவர்கள் கூறுகின்றனர்.

கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகிப் படுகாயமடைந்த மீனவர்கள் 5 பேர் இராமேஸ்வரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுப் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக இராமநாதபுரத்திலுள்ள மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் தாக்குதலில், படகு ஒன்றுக்கு 20 ஆயிரம் முதல் 60 ஆயிரம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது என் றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் மீன்பிடித்துறை அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளனர். (ற-5-14)

## சாதாரணதர விடைத்தாள் திருத்திய கொடுப்பனவு வழங்கப்படவில்லை

### இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.11
கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிவிட்ட நிலையிலும், குறித்த பரீட்சை விடைத்தாள்களை திருத்திய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரையும் வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜெயசிங்கே, 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு குறித்த கொடுப்பனவுகள் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 300 பரீட்சை நிலையங்களில் கடந்த டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் நடைபெற்றது. பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இரு கட்டங்களாக நடைபெற்றிருந்தன. டிசெம்பர் 31 ஆம் திகதி முதல் ஜனவரி 7 ஆம் திகதி வரையிலும், ஜனவரி 16 ஆம் திகதியிலிருந்து 24 ஆம் திகதி வரையிலும் 103 விடைத் தாள் மதிப்பீட்டு நிலையங்களில் பணிகள் இடம்பெற்றிருந்தன. இதில் 11 மில்லியன் விடைத்தாள்களை 40 ஆயிரம் ஆசிரியர்கள் திருத்தியிருந்தனர். அவர்களுக்கான கொடுப்பனவுகளே இதுவரை வழங்கப்படவில்லை.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மஹிந்த ஜெயசிங்கே, "பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் தூர இடங்களிலிருந்து வந்து, ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். அவர்களுக்கான கொடுப்பனவுகள் மூன்று மாதம் கடந்தும் இன்னமும் கொடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்கான கொடுப்பனவுகள் உடனடியாகவே வழங்கப்பட வேண்டும்"- என்று வலியுறுத்தினார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், "சிறியதொரு தாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் திணைக்களம் சகல காசோலைகளையும் அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது"- என்று தெரிவித்தார். (ற-5)

## பிறிமா தொழிற்சாலையில் தீ விபத்து

திருகோணமலை, ஏப்.11
திருகோணமலை சீனன்குடாவிலுள்ள பிறிமா நிறுவனத்தின் புதிய தொழிற்சாலைக்கான கட்டடத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. பெரும் போராட்டத்துக்குப் பின்னர் விமானப்படையின் தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## பொது பல சேனாவிடம் பொலிஸார் விளக்கம்

### ஊடக சந்திப்பில் நடத்திய கலகம் தொடர்பாக

கொழும்பு, ஏப்.11
நேற்றுமுன்தினம் ஜாதிக பல சேனா என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பின் இடைநடுவே புகுந்து குழப்பத்தை ஏற்படுத்தியமை தொடர்பாக விளக்கமளிக்குமாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரருக்கு பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர். எதிர்வரும் 12 ஆம் திகதி பொலிஸ் நிலையத்துக்கு வந்து குறித்த சம்பவம் தொடர்பாக விளக்கமளிக்குமாறு கொம் பனித்தெரு பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜாதிக பல சேனா என்ற அமைப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினர் அங்கு பதற்ற நிலையைத் தோற்றுவித்ததுடன் தேரர் ஒருவரையும் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர். அது தொடர்பான வாக்குமூலத்தைப் பெறுவதற்காகவே ஞானசார தேரருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற)

## போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் பிரிட்டனின் தூதருக்கு ஏன் கரிசனை?

### கேள்வி எழுப்புகின்றது 'த ஹிந்து' நாளிதழ்

யாழ்ப்பாணம்,ஏப்.11
போதைப் பொருள் கடத்தலில் சிக்கிய வெளிநாட்டவர் தொடர்பில், இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதரகம் அதிகளவு கரிசனை எடுத்துக் கொண்டுள்ளமை தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளது என்று 'த ஹிந்து' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் 6 ஆம் திகதி சுங்கத் திணைக்களத்தினர் கொழும்புத் துறைமுகத்துக்கு கடத்தி வரப்பட்ட 35 கிலோ ஹெரோயின் போதைப் பொருள்களைக் கண்டுபிடித்தனர். இதனைத் தொடர்ந்து குறித்த விடயம் மேலதிக விசாரணைக்காக போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் பாரப்படுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக மார்ச் 18 ஆம் திகதி கண்டியில் வைத்து பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார். அந்தப் போதைப் பொருள் அனுப்பட்ட பொதி குறித்த நபரின் விலாசத்துக்கே முகவரியிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி நபர் கொழும்பிலிருந்து கண்டிக்குத் தப்பிச் செல்ல உதவினார் என்ற சந்தேகத்தில் அடுத்த நாள் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார். மூன்றாவதாக இலங்கையர் ஒருவர் கைதானார்.

கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்பட்டிருக்கும் இந்த நபர்கள் குறித்துப் பேசுவதற்காக பொலிஸ்மா அதிபர் என். கே.இலங்கக்கோனிடம் இலங்கைக்கான பிரிட்டன் பிரதித் தூதர் நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டிருக்கின்றார். கைது செய்யப்பட்ட மூவருள் ஒருவர் இந்தியாவில் உள்ள பிரிட்டன் அதிகாரிகளுக்குத் தகவல் வழங்குபவர் என்ற விடயமும் பொலிஸ்மா அதிபருக்குப் பிரிட்டன் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி விடயம் குறித்து விசாரணைகள் நடைபெறுவதால் அதுவரை இந்தச் சந்திப்பை விரும்பவில்லை என்று பொலிஸ்மா அதிபர் கூறிவிட்டார்.

மேற்படி கைது செய்யப்பட்ட மூவரில் இந்தியாவில் உள்ள பிரிட்டன் அதிகாரிகளுக்குத் தகவல் வழங்குபவர் யார் என்பது உறுதி செய்யப்படவில்லை. சந்தேக நபர்களுள் ஒருவரான பாகிஸ்தான் பிரஜையாக அவர் இருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. மேற்படி பொலிஸ்மா அதிபருடனான சந்திப்புக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு பிரிட்டன் தூதரகம் சார்பில் கோரப்பட்டதா, அதற்குக் காரணம் என்ன என்பன போன்ற கேள்விக்கு பிரிட்டன் தூதரகம் பதில் வழங்கவில்லை. ஆனால் நேரம் ஒதுக்கித் தருமாறு கோரப்பட்டமையை பொலிஸ்மா அதிபர் தரப்பு உறுதி செய்துள்ளது என்று அந்தச் செய்தியில் 'த ஹிந்து' சுட்டிக்காட்டியுள்ளது. (ற-5)

# இறால் தொழிலாளருக்கும் நட்ட ஈடு வழங்க வேண்டும்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மற்றும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கும் கோரிக்கை

**கிளாலிப் பகுதியில் மீளக் குடியேறிய 200 குடும்பங்க ளில் சுமார் 80 பேர் வரை இறால் தொழிலில் ஈடுபடுபவர் கள். அவர்கள் கிளாலி, கேர தீவு, ஆனையிறவு கடற்பரப் பில் தொழி லில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.**

வலி.தென்மேற்கு, ஏப்.11
கடந்த வருடம் தேவையான பருவமழை பெய்யாததால் பாதிக்கப்பட்ட காலபோக நெற் செய்கையாளர்களுக்கு அர சால் நட்டஈடு வழங்கப்படு வதுபோன்று மழையின்றி இறாலின் இனப்பெருக்கமில் லாமல் பாதிக்கப்பட்ட மீனவர் களுக்கும் நட்ட ஈடு வழங்கு மாறு கிளாலியில் வசிக்கும் இறால் தொழிலை நம்பி வாழ்ந்து வரும் மீனவர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச செய லரையும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளையும் கோரி யுள்ளனர்.

கிளாலிப் பகுதியில் மீளக் குடியேறிய 200 குடும்பங்க ளில் சுமார் 80 பேர் வரை இறால் தொழிலில் ஈடுபடுபவர் கள். அவர்கள் கிளாலி, கேர தீவு, ஆனையிறவு கடற்பரப் பில் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தி வருகின் றனர்.

வருடந்தோறும் பருவமழை காலப் பகுதியில் நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் மட்டும் இறால் இனப் பெருக் கம் செய்வது வழக்கம். கடந்த வருடம் தேவையான மழை பெய்யாததால் இறாலின் உற்பத்தியில் பெரியளவில் வீழ்ச்சி ஏற்பட் டுள்ளது. இந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து வரும் குடும்பங்கள் போதிய வருமானம் கிடைக்காததால் வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

பருவமழை பெய்யாததால் பாதிக்கப்பட்ட காலபோக நெற் செய்கையாளர்களுக்கு அர சால் நட்ட ஈடு வழங்கப்படுவது போன்று மழை பெய்யாததால் இறால் தொழிலில் பாதிக்கப் பட்ட மீனவர்களுக்கும் நட்ட ஈடு வழங்குமாறு கோரியுள்ள மீனவர்கள் இவ்விடயத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செய லர் மற்றும், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக் கள அதிகாரிகளின் உத விகளையும் நாடியுள்ளனர்.
(வ-115)


புத்தாண்டுச் சந்தையைப் பார்வையிடும் விருந்தினர்கள்

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற புத்தாண்டுச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப்.11
நல்லூர்ப் பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை நேற்று முன்தினம் புதன்கிழமை நல்லூர் மங் கையர்க்கரசி வித்தியாலயத் தில். நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலை மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சில்வேஸ்திரி அலன் டின், பிரதேச செயலர் செந்தில் நந்தனன் ஆகியோர் சந் தையை ஆரம்பித்து வைத்த னர். நல்லூர்ப் பிரதேச செய லக பிரிவில் சமுர்த்தி வாழ் வாதார உதவிகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் நடை முறைப்படுத்தப்பட்ட உற்பத்தி முயற்சிகள் மூலமான உற்பத் திப் பொருள்கள் கொண்ட கடைகள் இதில் இடம்பெற்றி ருந்தன.

உதவித் திட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் , நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.ரவீந்திரதாஸ், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியா லய அதிபர் மகேசன் கஜேந்தி ரன் ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாகக் கலந்து கொண் டனர்.

உள்ளூர் உற்பத்திப் பொருள் களைப் பெற்றுக் கொள் வதில் பிரதேச மக்கள் முண்டியடித் துக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. (வ-7)

## யோகர் சுவாமிகளின் குருபூசையையொட்டி நேற்று நடைபெற்ற பாத யாத்திரை, பேரணி


பாத யாத்திரையாகச் செல்லும் மக்கள்

கொழும்புத்துறை, ஏப்.11
தவத்திரு யோகர் சுவாமி களின் 50 ஆவது குருபூசை தினத்தையொட்டி யாழ்ப்பா ணத்தில் பல்வேறு இடங்களி லும் நேற்று பாத யாத்திரை, பேரணிகள், சிறப்பு சமய வழிபாடுகள், மலர் வெளியீடு என்பன நடைபெற்றன.

கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதிக் கோயில் அமைப்பினரும்,இந்து மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய பாத யாத்திரை நிகழ்வு நல்லூர் கந்தசுவாமி கோயில் தேரடியிலிருந்து காலை 8.30 மணிக்கு சுவாமிகளின் திருவு ருவப் படம் தாங்கியபடி மங் கல வாத்தியங்களுடன் புறப் பட்டது. இதில் பெருமளவு மாண வர்களும், பொதுமக் களும் கலந்து கொண்டனர். கொழும் புத்துறை இந்து மகா வித்தியா லயத்தில் சிறப்பு வழிபாடுகள், சிறப்புரைகள், கலை நிகழ்வு கள் என்பன இடம்பெற்றன.

சமாதிக் கோயிலில் குருபூசை வழிபாடுகள், அன்னதானம் என்பன இடம்பெற்றன.

அகில இலங்கை இந்து மாமன் றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா மணி மண்ட பத்தில் குருபூசை நிகழ்வுகள் நடைபெற் றன. உலக வலம் வந்த சிவ யோக சுவாமிகளின் திருவுரு வம் நல்லூர் தேரடியிலிருந்து வீதி வலமாக எடுத்துவரப்பட்டு குரு பூசை நிகழ்வுகள் இடம் பெற்றன. அதேவேளை சிவ தொண்டன் நிலையத்தின் ஏற்பாட்டில் இலங்கை வேந் தன் கலைக் கல்லூரி மண் டபத்திலும் 50 ஆவது குரு பூசைத் தின நிகழ்வுகள் கொண் டாடப்பட்டன. (வ-135)

## மரத்திலிருந்து தவறி வீழ்ந்த மாணவன் காயம்

தென்மராட்சி,ஏப்.11
குழை வெட்ட மரத்தில் ஏறிய 16 வயது மாணவன் மரத்தி லிருந்து தவறி வீழ்ந்ததில் இடுப்பு எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புலோப்பளை கிழக்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சிறிதரன் விஷ்ணு (வயது-16) என்பவரே பாதிக்கப்பட்ட நிலை யில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## சட்டவிரோத மீன்பிடி 4 பேருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஏப்.11
தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி சட்ட விரோதமான முறை யில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 4 மீனவர்கள் குற் றத்தை ஏற்றுக் கொண்ட தைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நால்வருக் கும் தலா 5,000 ரூபா அப ராதம் விதித்ததுடன் கைப்பற் றப்பட்ட வலைகளை அழிக் குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பள்ளிக்குடா கடற்பரப்பில் சட்ட விரோதமான முறை யில் தடைசெய்யப்பட்ட தங் கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த 4 மீனவர்கள் மீது கிளிநொச்சி மாவட்டக் கடற் றொழில் நீரியல் வளத்துறைத் திணைக் கள அதிகாரிகளால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன் றில் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிவான் முன் னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, 4 மீனவர்களும் குற் றத்தை ஏற்றுக் கொண்ட தைத் தொடர்ந்து அவர்க ளுக்கு தலா 5,000 ரூபா அபராதம் விதித்த நீதி வான் கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்குமாறும் உத்தரவிட்டுள் ளார். (வ-115)

## இதயநோய்த் தவிர்ப்பு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஏப்.11
நொதேன் சென்றல் மருத்துவ மனையில் இலங்கையிலும் ஐக்கிய இராச்சியத்திலும் இயங் கும் தொண்டு நிறுவனமாகிய Oxonian Heart foundation இன் ஆதரவில் இருதய அறு வைச் சிகிச்சையை அறிமுகப் படுத்தும் வகையில் இதய நோய் தவிர்ப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்க வுள்ளார். (க)

## யாழ்.பொது நூலகத்துக்கு அருகில் புத்தாண்டு நடைபாதை வியாபாரம்

கொழும்புத்துறை, ஏப்.11
புத்தாண்டுப் பண்டிகைக்கால நடைபாதை வியாபாரம் யாழ். நகரில் இம்முறை பொது நூல கத்துக்கு அருகிலுள்ள யாழ். திறந்தவெளி அரங்க வளாகத் துக்கு மாற்றப்பட் டுள்ளது.

கடந்த காலங்களில் யாழ்.காங் கேசன்துறை வீதியின் ஓரங் களிலும் கோட்டை முற்ற வெளிப் பகுதியிலும் நடை பாதை வியாபாரம் இடம் பெற்று வந் தது.

இதனால் இந்தப் பாதையூ டான போக்குவரத்தில் பல இடையூறுகள், விபத்துக்கள் என்பன ஏற்பட்டிருந்தன.

தற்போது இதற்கான மாற்று ஒழுங்கை யாழ்.மாநகரசபை மேற்கொண்டு திறந்த வெளி யரங்க வளாகத்தை நடை பாதை வியாபாரத்துக்கு ஒதுக் கிக் கொடுத்துள்ளது.


நடைபாதைக் கடைகளை இங்கு காணலாம்

குறித்த இடத்தில் தென்னி லங்கை மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களும் உள்ளூர் வியாபாரிகளும் கொட்டகை கள் அமைத்து தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்ப தில் ஆர்வம் காட்டி வருகின்ற னர். (வ-135)

## கஞ்சா விற்றவர் கைது

தென்மராட்சி, ஏப்.11
போதைப் பொருளான கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட வரணி வாசியொருவரைச் சாவகச்சேரி பொலிஸார் மீசாலைப் பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

வன்னிப் பகுதியிலி ருந்து கடல் வழியாக கடத்தி வரப்பட்ட கஞ்சா மீசாலைப் பகு தியில் வைத்து விற் பனை செய்யப்படு வதாக பொலிஸா ருக்குக் கிடைத்த தக வலை அடுத்து அந் தப் பகுதியைப் பொலி ஸார் சுற்றி வளைத்த போது விற் பனையில் ஈடுபட்டவர்கள் தப்பி யோட வரணி வாசியொ ருவர் கஞ்சாவுடன் கைது செய்யப் பட்டார்.

குறித்த நபரைப் பொலி ஸார் நேற்று சாவ கச்சேரி பதில் நீதி வான் செ.கண பதிப்பிள்ளை முன்னிலையில் முற் படுத்திய போது தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ-9)

விசா ஆலோசனையில் புத்தாண்டுச் சலுகைகள்
★ ஆஸ்திரேலியா: குடும்பமாகச் செல்லலாம்
★ கனடா : சுகாதார துறைசார்ந்தோர், Electricians சமையலாளர், வெல்டேர்ஸ் IELTS தேவையில்லை.
★ இத்தாலி : இலகுவில் பறக்கலாம்.
★ சைபிரஸ், நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை.
(அனைத்தும் நிபந்தனைகளுடன்)
இன்றில் இருந்து 15.04.2014 வரை அனைத்து விசா ஆலோசனைகளுக்கும் 10% கட்டணக்கழிவு.
புத்தாண்டு அன்றும் திறந்திருப்போம்.
(4680)(5.6)
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
இல.175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி சந்தி,யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 499 3502 / 021 221 9016
www.thisaivisa.com


# வறட்சி காரணமாக குறைந்த நீர்ப்பாசனத்தில் உப உணவு உற்பத்திக்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.11

தற்போது நிலவுகின்ற கடும் வறட்சியை எதிர்கொள்ளும் நோக்குடன் குறைந்த நீர்ப்பாசனத்தில் உப உணவு உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டிய தேவையுள்ளது. அதன் அடிப்படையில் அந்தந்த மாவட்டங்களுக்கு ஏற்ற வகையில் உப உணவு உற்பத்திகள் மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தில் நீர்வற்றிப் போயிருப்பதால், சிறுபோகத்துக்கான நெல் விதைப்பு எட்டாயிரம் ஏக்கரில் இருந்து 800 ஏக்கராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு வறட்சியை எதிர்கொள்ளத் தயாராகும் நாம் இரணைமடு நீர் விநியோகத்திட்டத்தின் பின்னால் உள்ள அரசியலையும் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டத்தை முன்னெடுப்பவர்கள் இதன் பின்னால் அரசியல் இல்லை என்கிறார்கள். அல்லது அரசியலைத் தவிர்த்து விட்டு அபிவிருத்தியை மாத்திரம் பாருங்கள் என்கிறார்கள். அரசியலை அகற்றிவிட்டு அபிவிருத்தியைப் பற்றி மட்டும் பேசுவதற்கு நாம் ஒன்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளோ அல்லது உதவி வழங்கும் நிறுவனங்களின் முகவர்களோ அல்ல. நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசின் பிரதிநிதிகள்.

மகாவலி அபிவிருத்தித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, விவசாயத்துக்கு நீர்ப்பாசனம் வழங்குவதும், மின்சக்தி பிறப்பிப்பதும் அதன் நோக்கங்கள் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டது. ஆனால் அதன் உள்ளார்ந்த நோக்கம் தமிழர்களின் வாழ்விடங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதாக இருந்தது. ஒப்புக்குக் குடியேற்றப்பட்ட சொற்ப தமிழ் மக்களும் கூட கால்வாயின் கடைக்கோடியில் குடியமர்த்தப்பட்டு முன்வாய்க்காலில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களையே தண்ணீருக்காகச் சார்ந்திருக்கச் செய்யப்பட்டார்கள்.

இவையெல்லாம் வெளியே தெரிந்துவிடக்கூடாது என்பதில் அரசு கவனமாக இருந்தது. மகாவலிக்கரையை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மலேரியா தொடர்பான கல்வி ஆய்வுகளைக்கூட மகாவலி அதிகார சபையின் கண்காணிப்புக்கு உட்படுத்தியது. தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையே இனமுரண்பாடுகள் கூர்மையடைவதற்கு மகாவலித்திட்டம் ஒரு காரணம் என்பதை அந்த திட்டத்துக்குக் கடனுதவி வழங்கிய நிறுவனங்கள் தாமதமாகத்தான் தெரிந்து கொண்டன.

இதனால்தான் இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டம் தொடர்பாகவும் நாம் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டியுள்ளது. இதன் மூலம் சமூகங்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றிவிடக்கூடாது. அதுமாத்திரம் அல்லாமல் எமக்கான உணவு உற்பத்திக்காகவும், குடிதண்ணீருக்காகவும் தங்களை நாம் சார்ந்திருக்க வேண்டும் என்ற அரசின் மறைமுக அரசியலுக்குள்ளும் நாம் மூழ்கிவிடக் கூடாது.

இவற்றின் அடிப்டையிலேயே இரணைமடுக்குளம் புனரமைப்பையும், குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத்தையும் ஒருங்கிணைத்த திட்டமாக மேற்கொள்ளாது, தனித்தனித்திட்டங்களாகப் பரிசீலிக்கும்படி இதற்கு நிதியுதவி வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். மாகாணசபை இவ்வாறான ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கும் நிலையில், இந்தத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று கோருபவர்களின் பின்னால் உள்ள அரசியலைப் பொதுமக்கள் புரிந்து கொள்வது அவசியமாகும்.

எனவே தற்போதைய வறட்சிக்காலத்துக்கு ஏற்ப உப உணவு உற்பத்திகளை மேற்கொள்வது விவசாயிகளுக்கு நன்மை தரும். அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நிலக்கடலை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" - என்றார். (வ-14)

# வேலையற்ற கலைப் பட்டதாரிகளை பதிவு செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்.11

அரச, தனியார் துறைகளில் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏதுவாக வேலையற்றிருக்கும் யாழ். பல்கலைக்கழக கலைப் பட்டதாரிகளை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் அரச,தனியார் துறைகளில் காணப்படும் வெற்றிடங்கள், தகுதி வாய்ந்த கலைப் பட்டதாரிகள் இல்லாமையால் நிரப்பப்படாமல் இருப்பதாகவும்,தகுதி வாய்ந்த கலைப் பட்டதாரிகள் இருப்பின் அவர்களுக்கு அரச, தனியார் துறைகளில் பொருத்தமான பதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் உறுதி அளித்துள்ளார்.

எனவே அதற்கு ஏதுவாக யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வேலையற்றிருக்கும் கலைப் பட்டதாரிகள் தமது பெயர் விவரங்களை பிரதான வளாகத்தில் அமைந்திருக்கும் ஆசிரியர் சங்கக் காரியாலயத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை காலை 9.30- 12.30 மணி வரையும்,பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணி வரையும் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஏ.இராசகுமாரன் கேட்டுள்ளார். (ஜ-400)

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.11

பல்வேறு இடங்களில் இடம்பெற்ற திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 8 பேரையும் எதிர்வரும் 23 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து இதுவரை முழுமையாக 5 மோட்டார் சைக்கிள்களும் பாகங்களாக ஒரு மோட்டார் சைக்கிளும் மற்றும் மடிக்கணினியும் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரம்ப விசாரணைகளில் 11 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் தாவடியில் இரகசியமாக கராஜ் நடத்தி திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை பாகங்களாக்கி விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் கைதான 7 பேர் உட்பட 8 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வெளிப்படையாக கறாஜ் நடத்தி வந்தவர் உட்பட மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உட்பட 11 பேரும் எதிர்வரும் 23 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.



கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் இடமிருந்து வலமாக பொலிஸ் உத்தியோகஸ்தர்களான குமார, பிரதீப், பொலிஸ் பொறுப்பதிகாரி துஷ்மந்த, தேவதயாளன் மற்றும் நிஹால் ஆகியோர்.

ஏனைய விடயங்கள் பின்னர் தெரியவரும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4-86)

# பனைசார் உற்பத்தியாளர்கள் 411 பேருக்கு உபகரணங்கள்

பனைசார் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் பனைசார் உற்பத்தியாளர்கள் 411 பேருக்கு கடந்த வாரம் தொழில் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பனைசார் உற்பத்தியாளர்களுக்கு வாழ்வின் எழுச்சித் திட்டத் தின் கீழ் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றில் யாழ்.மாவட்டத்தில் 60 பயனாளிகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 60 பயனாளிகளுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 98 பயனாளிகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் 25 பயனாளிகளுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 168 பயனாளிகளுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

# ஆச்சிரமம் திறப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.11

சித்தன்கேணி மஹா கணபதி பிள்ளையார் ஆலயத் தெற்கு வீதியில் அமைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர் ஆச்சிரமத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 3மணிக்கு இடம் பெறவுள்ளது.

த. குகபரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வாழ்த்துரைகளை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும், வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி ஐங்கரன் நாகரஞ்சினியும் நிகழ்த்துவர்.

நினைவுப் பேருரையை சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் நிகழ்த்துவார். அதேவேளை அறமும், ஆன்மிகமும் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சிறப்புரை நிகழ்த்துவார். (ஜ-400)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 03 . 06 . 1944



மறைவு 14 . 03 . 2014

### அம்மையப்பிள்ளை சிவநாதன்

(சைக்கிள் கடை நாதன் அண்ணா)

14.03.2014 அன்று காலமாகிய அன்னாரது அந்தியேட்டி கிரியைகள் இன்று (11.04.2014) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புண்ணிய தீர்த்தத்தில் இடம் பெற்று (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.

சோந்தம்பை (சிங்கம் கடை அருகில்) கிம்பர் மலை, வல்வெட்டித்துறை.

077 5099111 (சிவகுருநாதன்), 077 8870749 (சிவனேஸ்வரி), 077 9265906 (சிவகுமாரன்), 077 4530788 (சிவரூபன்)



உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111



## மரண அறிவித்தல்

### திருமதி குணபூசணம் கதிரேசநாதன்



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மருதானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணபூசணம் கதிரேசநாதன் நேற்று முன்தினம் (09.04.2014) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - மாருதப்புரவீகவல்லி தம்பதியரின் மூத்தபுதல்வியும் குமாரசிங்கம் - தங்கப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் கதிரேசநாதனின் (இளைப்பாறிய உத்தியோகத்தர் அரச மரக்கூட்டுத்தாபனம்) அன்புமனைவியும் இந்திராணி (ஆசிரியர் பம்பலப்பிட்டி புனித மரியாள் வித்தியாலயம்), மகேந்திரராஜா (சத்திரசிகிச்சை நிபுணர் மாவட்ட வைத்தியசாலை களுத்துறை) ஆகியோரின் பாசமிகு தாயும் முனீஸ்வரன் (இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்), வாசுகி (வைத்தியர் சீமாட்டி ரிஜ்வே) ஆகியோரின் மாமியும் இரதிதேவி, சிவலோகநாதன், பத்மநாதன் (மலேசியா) ஆகியோரின் சகோதரியும் தயானி, கஜன், சாம்பவி, காயத்திரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிமுதல் பி.ப 6 மணி வரை பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று 12 மணியளவில் பொரளை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: கதிரேசநாதன் (கணவர்), மகேந்திரராஜா (மகன் - 077 7393250), முனீஸ்வரன் (மருமகன் - 071 4417207)



## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் துரைராஜா



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் துரைராஜா நேற்று (10.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - சிவகாமி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சண்முகசுந்தரத்தின் சகோதரனும் காலஞ்சென்ற ஞானப் பூங்கோதையின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான மோகனதாஸ், யசோதரா மற்றும் தேவகி (ஓய்வு பெற்ற ஆய்வு கூட உதவியாளர்), வாசுகி (பிரான்ஸ்) காலஞ்சென்ற கண்ணதாஸ், துளசிதாஸ் (பெல்ஜியம்), ராமதாஸ் (ஆசிரியர் தொண்டமனாறு வீ.ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாயாசோதி (மட்டக்களப்பு), சற்குணராசா (பிரான்ஸ்), ஆனந்தி, சார்ள்ஸ்பென்லி (கொழும்பு), மதிவண்ணன் (பிரான்ஸ்), ஆனந்தி (பெல்ஜியம்), ரேணுகா (ஆசிரியை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் பிரசாத் (டோகா), பிரசன்னா (மட்டக்களப்பு), ராஜ்தரன் (பிரான்ஸ்), சுஜித்தா, விபுஸன் (கனடா), ஆஸ்வி (கனடா), சாளினி, டனோஜன், கபிலன், வாகீசன், லக்ஸ்மன் (பிரான்ஸ்), சந்தோஸ் (பெல்ஜியம்), சங்கீர்த் (பெல்ஜியம்), சியாமளன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2014) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி

தகவல்: ராமதாஸ் (மகன்) 0776454699

## வெங்காய உற்பத்தி நெடுந்தீவில் வீழ்ச்சி


யாழ்ப்பாணம், ஏப்.11

உரிய வேளையில் மழை பெய்யாததால் தற்போது நிலவும் வறட்சி காரணமாக நெடுந்தீவில் இந்தமுறை வெங்காய உற்பத்தி மிகக் குறைந்த அளவிலேயே இடம்பெற்றுள்ளது.

மேற்கு சாராப்பிட்டி, கோட்டைக்காடு பகுதிகளில் வழமையாக 25 ஏக்கர் நிலப்பரப்பில் வெங்காயம் உற்பத்தி செய்யப்படுவதோடு ஒரு ஏக்கருக்கு 15 அந்தர் வெங்காயம் அறுவடை செய்யப்படுவதுண்டு.

எனினும் இந்தமுறை வறட்சியை அடுத்து 15 ஏக்கரிலேயே செய்கை இடம்பெற்றதுடன் ஏக்கருக்கு 7 அந்தர் வரையிலேயே அறுவடை செய்யப்பட்டுள்ளது.

வெங்காயச் செய்கையில் ஈடுபடத் தாம் தயாராக இருந்த போதிலும் மழையின்மை காரணமாகவே அதனை நிறுத்தி விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். அதேவேளை இப் பகுதியில் தற்போது ஒரு கிலோ வெங்காயம் ரூபா 100 இற்கு விற்பனையாகின்றது. (வ-7)



கோப்புப்படம்

# நிரந்தர ரயில் கடவை அமைக்கப்படுமா?

## சப்பச்சிமாவடி ஆலய வீதிக்குச் செல்லும் மக்கள் கேள்வி

தென்மராட்சி, ஏப்.11

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் வீதிக்குச் செல்வதற்கு நிரந்தர ரயில் கடவை அமைக்கப்படுமா என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

முன்னைய காலத்தில் குறித்த வீதியூடாகச் செல்வதற்கு நிரந்தர ரயில் கடவை இருந்ததால் சுமார் 4 கிலோமீற்றர் தூரமான வீதியை மக்கள் தமது அன்றாட தேவைக்குப் பயன்படுத்தி வந்தனர்.

புதிதாக ரயில் பாதை அமைக்கப்பட்ட போது இந்த வீதிக்கு நிரந்தரக் கடவை அமைக்கப்படாமல் அருகில் உள்ள மீனாட்சி அம்மன் கோயில் வீதி, விநாசித்தம்பி வீதி ஆகியவற்றுக்கு நிரந்தரக் கடவை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தமது வீதிக்கும் நிரந்தரப் பாதை அமைக்குமாறு வீதியைப் பயன்படுத்தும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதே வேளையில் ஏ-9 வீதியில் வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடிவிட்டுச் சென்றார். மறுநாள் தற்காலிகமாக கற்கள் பறிக்கப்பட்டு பாதையாகப் பயன்படுத்தப்பட்டது. பளை ரயில் நிலையம் திறந்த வேளையில் குறித்த வீதியை நிரந்தர வீதியாக அமைத்துத் தருமாறு மக்கள் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதன்முதலாகரயில்பளைவரை பயணம் மேற்கொள்ளும் நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இந்திய அரசின் உயர் அதிகாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி மக்களிடம் பெற்ற மனுவை நிகழ்வில் கலந்து கொண்ட போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமவிடம் பளையில் வைத்து கையளித்த போது குறித்த வீதிக்கு நிரந்தரக் கடவை அமைக்குமாறு அமைச்சர் ரயில்வே பொதுமுகாமையாளருக்கு உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை ரயில் பாதையின் தண்டவாளங்களுக்கு இடையில் பறிக்கப்பட்ட கற்கள் இயந்திரம் மூலம் இறுக்கமாக்கும் பணிகள் இடம்பெற்றதை அடுத்து தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த வீதி முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதன் பின்னர் ஏனைய வீதிகள் கற்கள் போட்டு போக்குவரத்துக்கு சீர் செய்யப்பட்டுள்ள போதிலும் குறித்த வீதியில் எந்தவொரு வேலைகளும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்த மக்கள் இந்த வீதி மக்களின் பாவனைக்கேற்ற விதத்தில் புனரமைக்கப்படுமா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். (வ-9)



அரியாலை கிழக்கு பூம்புகார் கட்டடி வீதியில் சுமார் 200 மீற்றர் வரையான வீதியின் ஒரு பகுதி வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டு வருவதைக் காணலாம். (வ-14-21)

## வாழ்வின் எழுச்சி புத்தாண்டு சந்தை

வலி.தெற்கு பிரதேச செயலக சமுர்த்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் உடுவில் பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்தில் பிரதேச செயலளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலகத் திட்டப் பணிப்பாளர் திருமதி ரஞ்சினி மோகனேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எதிரணித் தலைவர் சிவகுரு பாலகிருஷ்ணன், உதவிப் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார், திட்டமிடல் பணிப்பாளர் ரதி நகுலேஸ்வரன், கணக்காளர் ஞானசேகரம்பிள்ளை லோகநாதன், கௌரவ விருந்தினராக பாடசாலை அதிபர் இராஜா ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (வ-86)

* * *

அச்சுவேலி, ஏப்.11

வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவு வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் இன்றும் நாளையும் இரு தினங்கள் நடைபெறுகின்றது. வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெறும் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-11)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் புத்தாண்டுச் சந்தை இடம்பெறவுள்ளது. யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இந்தச் சந்தை இடம்பெறவுள்ளது. இந்தச் சந்தையில் மக்களுக்குத் தேவையான சகல பொருள்களும் சலுகை விலையில் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-135)

## புலனாய்வாளர் எனக் கூறி சைக்கிள் அபகரிக்க முயற்சி

தென்மராட்சி, ஏப்.11

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு புதிதாக வந்துள்ள புலனாய்வு உத்தியோகத்தர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் அறிமுகப்படுத்திக் கொண்டு வீதியில் சைக்கிளில் சென்ற ஒருவரது சைக்கிளில் ஏறிச் சென்ற நபரொருவர் இடை வழியில் சைக்கிள் உரிமையாளரை இறக்கி விட்டு அவரது சைக்கிளை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்ற வேளையில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை நுணாவிலில் இடம் பெற்றது.

கல்வயலைச் சேர்ந்த விவசாயி எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் வாங்கிக் கொண்டு புறப்பட்ட வேளையில் தன்னை ஏற்றிக் கொண்டு சென்று பொலிஸ் நிலையத்தில் இறக்கி விடுமாறு அந்த நபர் கேட்டுள்ளார்.

அதனையடுத்து அந்த நபரையும் தனது சைக்கிளில் ஏற்றிக் கொண்டு செல்கையில் நுணாவில் சந்தியில் பொலிஸ் நிலையம் இருப்பதை அறிந்து அங்குள்ள ஒழுங்கை ஒன்றில் சைக்கிளை செலுத்துமாறு கூறியுள்ளார். ஒழுங்கைக்குள் சென்றதும் சைக்கிளை நிறுத்துமாறு கூறிய அந்த நபர் சைக்கிளைப் பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளார்.

இது தொடர்பாக உறவினர்களுக்குத் தெரியப்படுத்தவே அவர்கள் மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்றனர். சைக்கிளை அடையாளம் கண்ட உறவினர்கள் அருகே சென்று விசாரித்த போது தாம் சைக்கிள் திருடனை தேடிக் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

அந்த வேளையில் சைக்கிளைப் பறி கொடுத்தவர் ஏனையோருடன் மோட்டார் சைக்கிளில் வந்து சேரவே அந்தத் திருட்டு நபரின்குட்டுவெளிப்பட்டு முறையான கவனிப்பின் பின்னர் பொலிஸ் நிலையத்தில் அந்த நபரைஒப்படைத்துள்ளனர். (வ-9)

## மத்தியஸ்த சபை மூலம் விவசாய கடன் நிலுவையை வழங்க ஏற்பாடு

### தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் வங்கித் தீர்மானம்

தென்மராட்சி, ஏப்.11

கடந்த 2012 ஆம் ஆண்டு கால போக நெற் செய்கைக்கென கடன் வழங்கிய வங்கிகள் அதனைத் திரும்பச் செலுத்தாதோரிடமிருந்து மத்தியஸ்தர் சபை மூலம் அறவிட மத்தியஸ்தர் சபைக்கு முறைப்பாடுகளை அனுப்பிவைத்துள்ளன.

2012 ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கை காலத்தில் பயிர் செய்யும் நெல் வயலின் பரப்பளவின் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் வங்கிகளால் அந்தந்த விவசாய சம்மேளனங்கள் ஊடாக சுமார் 500 இற்கு மேற்பட்டோருக்கு விவசாய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

கடன் பெற்றவர்களில் சிலர் கடனை மீளச் செலுத்தாததால் கடனை அறவிட வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனற்றுப் போனதால் சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை மூலம் அறவிடுவதற்கு வங்கிகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. (வ-9)

## ஆலயக் கட்டடப் பணிகள் ஆரம்பம்

வடமராட்சி, ஏப்.11

பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த வடமராட்சி கிழக்கு மண்டலாய் பிள்ளையார் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான கட்டடப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்தகாலப் போர் நடவடிக்கையின்போது இந்தக் கோயில் முற்றாகச் சேதமடைந்தது. எனினும் இடப்பெயர்வின் போது ஆலயத்தின் எழுந்தருளி எடுத்துச் செல்லப்பட்டு புலோலி மேற்கு வத்தனைப் பிள்ளையார் கோயிலில் வைத்து பாதுகாக்கப்பட்டு வந்தது.

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியேற்றம் ஆரம்பமானதைத் தொடர்ந்து இந்த ஆலயத்தில் சேதமடையாது இருந்த மூல மூர்த்திக்கு பிராயச்சித்தம் செய்யப்பட்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

இந்தக் கோயிலைப் புனரமைப்புச் செய்வதற்கு சுமார் ஒரு கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து புனரமைப்புப் பணிக்கான கட்டட வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ்.மண்டலேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார். (வ-173)

## ஆலயத்துக்கு மின்சாரம் வழங்க வேண்டுகோள்

வரணிப் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற புராதன குருநாதர் ஆலயத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேச மக்கள் பலர் கையொப்பமிடப்பட்ட மனு ஒன்று மின்விநியோகம் தொடர்பான 'வடக்கின் வசந்தம்' திட்டமின் பொறியியலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. குறித்த ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் இடம் பெற்ற நிலையில் ஒளி வசதிகள் ஏதுமில்லாத நிலையில் பூசைகள் இடம் பெற்று வருகின்றன. (வ-122)

## நெடுந்தீவு கிழக்குக்கான நீர்விநியோகம் இடை நடுவில் நிறுத்தம்

### அந்தப் பகுதி மக்கள் கவலை

யாழ்ப்பாணம், ஏப்.11

ஆலமாவனக் கிராமம் உட்பட நெடுந்தீவு கிழக்குப் பகுதி வரையான நீர்விநியோகத் திட்டம் தீர்த்தக் கரைப் பகுதியுடன் நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நீர் வடிகாலமைப்புச் சபை நீர் வழங்க நடவடிக்கை எடுத்து விநியோகக் குழாய்களை அமைத்து வந்தபோதும் ஆலமாவனக் கிராமத்துக்கான பகுதிக்கு விநியோகக் குழாய்களை அமைப்பதற்கான வாய்க்கால்களை வெட்ட முடியாத நிலை காணப்படுகிறது.

பொதுமக்கள் இதற்கான வாய்க்கால்களை அமைத்துத் தந்தால் பணிகளைத் தொடரமுடியும் என்று குழாய்கள் புதைப்பதற்கான ஒப்பந்தகாரர்கள் தெரிவிப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர். (வ-7)




## பேஸ்புக் பயன்படுத்துவோர் இந்தியாவில் 10 கோடி பேர்

புதுடில்லி,ஏப் 11

இந்தியாவில் பேஸ்புக் பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கை 10 கோடியைத் தாண்டியதுசமூக இணையத் தளமான, பேஸ்புக்கைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை இந்தியாவில் 100 மில்லியனைத் தாண்டியிருக்கிறது என்று பேஸ்புக் நிறுவனம் கூறுகிறது.

பேஸ்புக் பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கையில், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை இந்தியா பெறுகிறது.

இந்தியாவில் கையடக்கத் தொலைபேசி எண்ணிக்கை பெருகுவதே இந்த வளர்ச்சிக்குக் காரணம் என்று கூறும் இந்த நிறுவனம், இந்தியாவில் இணைய சேவை நாடு முழுவதும் ஓரளவு நல்ல முறையில் இருப்பதும் மற்றொரு காரணம் என்கிறது.

பேஸ்புக் நிறுவனம் எதிர்கொள்ளும் அடுத்த சவால் என்பது இந்தியாவில் பயன்பாட்டாளர்கள் எண்ணிக்கையை எப்படி 100 கோடி என்ற எண்ணிக்கையை எட்டுவது என்பதுதான் என்று அது கூறுகிறது.

உலகெங்கும் 123 கோடி பயன்பாட்டாளர்களைக் கொண்ட பேஸ்புக் நிறுவனம் ஆசியா உட்பட வளர்ந்து வரும் சந்தைகளில் தனது வளர்ச்சிக்கு புதிய இடங்களைத் தேடிக் கொண்டிருக்கிறது. (கு)

# தி.மு.க விலிருந்து மிக விரைவில் வெளியேற்றப்படுவார் கருணாநிதி

### அ.தி.மு.கவுடன் ஐக்கியமான ரித்தீஷ் பேச்சு

சென்னை,ஏப் 11

தி.மு.கவில் உட்கட்சி ஜனநாயகம் செத்துவிட்டது. தி.மு.கவில் ஸ்டாலின் அதிகாரம் அதிகமாக உள்ளது. கருணாநிதியின் ஆள்கள் எல்லாம் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். விரைவில் கருணாநிதியும் தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்படுவார் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் ரித்திஷ் தெரிவித்தார்.

இராமநாதபுரம் தொகுதி தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் ரித்திஷ், நேற்று சென்னையில் அ.தி.மு.க பொதுச் செயலாளரும், முதல்வருமான ஜெயலலிதாவை அவரது போயஸ் கார்டன் இல்லத்தில் சந்தித்து அ.தி.மு.கவில் இணைந்தார்.




நேற்று அ.தி.மு.க வில் இணைந்த ரித்தீஷ்

பின்னர் வெளியே வந்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார். தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ரித்திஷ், தற்போதைய மக்களவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படாததால் அதிருப்தியில் இருந்தார்.

இதை அடுத்து, அ.தி.மு.கவில் நேற்று இணைந்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

தி.மு.கவில் உட்கட்சி ஜனநாயகம் செத்துவிட்டது. தி.மு.கவில் ஸ்டாலின் அதிகாரம் அதிகமாக உள்ளது. கருணாநிதியின் ஆள்கள் எல்லாம் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். விரைவில் கருணாநிதியும் தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்படுவார். அழகிரி மிகவும் தாமதமாக முடிவெடுத்துள்ளார். நான் அவரிடம் சொல்லிவிட்டுத்தான் இங்கு வந்தேன். என்னைப் போல் பலர் தி.மு.கவில் இருந்து வெளியேறி அ.தி.மு.கவில் இணைவார்கள். விரைவில் நடைபெறும் மக்களவைத் தேர்தலில 40 தொகுதிகளிலும் அ.தி.மு.கவு[illegible] ஆதரவாகத் தீவிர பிரசார[illegible] செய்வேன்- என்றார். (கு)



டில்லியில் வாக்குப் பதிவு செய்த பின்னர் தன் கணவருடன் செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் மகள் பிரியங்கா. (கு)

## இந்திய மக்களவைத் தேர்தல்; தமிழகத்தில் 845 வேட்பாளர்

சென்னை,ஏப் 11

மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் 845 வேட்பாளர்கள் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதிக பட்சமாக தென் சென்னையில் 42 பேரும் குறைந்த பட்சமாக நாகபட்டினம் தனித் தொகுதியில் 9 பேரும் போட்டி யிடுகின்றனர். இந்த நிலையில் தமிழகத்தின் 39 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் ஆறாவது கட்டமாக எதிர்வரும் 24 ஆம் திகதி வாக்குப் பதிவு இடம்பெறவுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பித்து ஏப்ரல் 5 ஆம் திகதி நிறைவடைந்திருந்தது.

39 தொகுதிகளிலும் 1261 பேர் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது. [illegible]

## பெண் வாக்காளர்கள் தமிழகத்தில் அதிகரிப்பு

### தலைமைத் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

சென்னை,ஏப் 11

முதல் முறையாகத் தமிழகத்தில் ஆண் வாக்காளர்களை விடப் பெண் வாக்காளர்கள் அதிகமாக உள்ளதாகத் தமிழக தலைமைத் தேர்தல் ஆணையாளர் பிரவீண் குமார் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய பிரவீண் குமார், தமிழகத்தில் இந்தத் தேர்தலில் தான் முதல் முறையாக ஆண் வாக்காளர்களை விடப் பெண் வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர். 2 கோடியே 75 லட்சத்து 21 ஆயிரத்து 570 பெண் வாக்காளர்களும், 2 கோடியே 75 லட்சத்து 8 ஆயிரத்து 336 ஆண் வாக்காளர்களும் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அதன்படி, ஆண்களை விட 13,234 பெண் வாக்காளர்கள் தமிழகத்தில் அதிகமாக வாக்களிக்கவுள்ளனர்.

ஏப்ரல் 24 ஆம் திகதி தமிழகத்தில் நடைபெறும் மக்களவைத் தேர்தலில் ஒட்டு மொத்தமாக 5.5 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்று தெரிவித்தார். (கு)

# புதிய கட்சிகளை பொருட்படுத்தாதீர்

## கருணாநிதி கூறுகிறார்

சென்னை,ஏப் 11

தமிழகத்தில் நாள்தோறும் உருவாகும் கட்சிகளைப் பொருட்படுத்தாமல் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் நேற்று நடைபெற்ற பிரசாரப் பொதுக் கூட்டத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி பேசியதாவது:-

இந்தியாவை எந்தக் கட்சி ஆட்சி செய்ய வேண்டும் என்ற முடிவையும், மதசார்பற்ற ஆட்சி அமைய வேண்டும் என்ற முடிவையும் நாங்களும் தோழமைக் கட்சிகளும் எடுத்துள்ளோம். அந்தத் தீர்மான முடிவை நிறைவேற்ற உங்களைச் சந்திக்க வந்துள்ளோம். தமிழ்நாட்டில் நாள்தோறும் உருவாகும் கட்சிகள் தங்களைப் பெரிதாக காட்டிக் கொள்கின்றன. அவர்களைப் பொருட்படுத்தாமல் புறக்கணித்து அலட்சியபடுத்த வேண்டும்.



கருணாநிதி

தமிழக மக்களுக்குப் பயன்படக் கூடிய பல திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ் மக்களுக்காகப் பாடுபடும் ஒரே கட்சி தி.மு.க என்பதை மனதில் கொள்ளுங்கள்.

எனவே, இந்தத் தேர்தலில் தி.மு.கவின் வெற்றிக்கும், தோழமைக் கட்சிகளின் வெற்றிக்கும் ஆதரவளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை மக்களையும், பாட்டாளி மக்களையும் வாழவைக்கும் கட்சிதான் திமுக. அவர்கள் நல்வாழ்வுக்காக ஆயிரக் கணக்கானோர் இந்த வெயிலிலும் கூடியிருக்கிறீர்கள். அதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்றார் கருணாநிதி. (கு)

## தேர்தலில் வாக்களிக்க தவறினார் மீராகுமார்

புதுடில்லி,ஏப் 11

பீகார் மாநிலம் சசாரம் தொகுதியில் போட்டியிடும் மக்களவைச் சபாநாயகர் மீரா குமார் நேற்று டில்லியில் தனது வாக்குரிமையைப் பயன்படுத்தத் தவறினார். சசாரம் தொகுதியிலும் நேற்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதன் காரணமாக, டில்லியில் அவர் வாக்குப்பதிவு செய்யவில்லை. டில்லி நியூ பிரண்ட்ஸ் கொலனி வாக்காளர் பட்டியலில் மீராகுமார் பெயர் இடம் பெற்றுள்ளது.

சசாரம் தொகுதியில், மீராகுமாரை எதிர்த்து பா.ஜ.க சார்பில் செட்டி பஸ்வானும், ஐக்கிய ஜனதா தளம் சார்பில் கே.பி.ராமைய்யாவும் போட்டியிடுகின்றனர். (கு)



உக்ரைன் விவகாரம் தொடர்பில் அந் நாட்டு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்று பின்னர் கைகலப்பில் முடிந்தது. விவாதம் மிகவும் சூடாகிய நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் சபைக்குள்ளேயே மோசமாக மோதிக்கொண்டனர். (த)

# விமானம் விரைவில் கண்டுபிடிக்கப்படும்

## தேடுதல் குழுவினர் நம்பிக்கை

பேர்த் .ஏப் 11

காணாமற்போன மலேசிய விமானத்தை எதிர்வரும் ஓரிரு தினங்களில் கண்டுபிடித்து விட முடியும் என்று தேடுதல் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். குறித்த விமானத்தின் தரவுப் பதிவுப் பெட்டியில் இருந்து அனுப்பப்பட்டதாக நம்பப்படும் சமிக்ஞைகளைத் தொடர்ந்து, விமானம் தேடும் பிரதேசத்தின் அளவு குறுக்கப்பட்டுள்ளது.

தற்போது 57 ஆயிரத்து 923 சதுர கிலோ மீற்றர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பி.பி.சி தெரிவித்துள்ளது.

எனினும் தேடுதல் பிரதேசம் தற்போது 40 ஆயிரம் சதுர கிலோ மீற்றர்களுக்குக் குறைக்கப்பட்டிருப்பதாக ஆஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் விமானத்தை தேடும் பணிகள் இறுதி நிலையை எட்டி இருப்பதாகத் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது 14 விமானங்களும், 13 கப்பல்களும் இதனைத் தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளன. மலேசியாவின் எம்.எச். 370 விமானம் கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி 239 பேருடன் காணாமற் போனது.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த விமானம் இந்தியாவின் தென் சமுத்திரத்தில் விபத்துக்குள்ளாகி இருக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. (த)

# செயலிழந்த முதுகுத் தண்டுவடம் மின் தூண்டுதலால் செயற்படுகிறது

நியூயோர்க்.ஏப் 11

பாதிப்புக்கு உள்ளான முதுகுத் தண்டுவடத்தில் மின்சாரம் பாய்ச்சி, அதன்மூலம் செயலிழந்த கால்களை மீண்டும் செயற்படவைக்க முடியும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் விபத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்டு, அதன் விளைவாகக் கால்கள் செயலிழந்துபோயிருந்த நான்கு பேரின் முதுகுத் தண்டுவடத்தில் பாதிக்கப்பட்ட பகுதிக்குக் கீழாக மருத்துவர்கள் மின்சாரம் பாய்ச்சி முதுகுத் தண்டுவட நரம்புகளைத் தூண்டிவிட்டனர். அதைத் தொடர்ந்து அந்த நான்கு பேரின் கால்களும் செயற்பட ஆரம்பித்துள்ளன. அவர்கள் தங்களின் கால்களை அசைக்கவும், முட்டியை மடக்கவும், கட்டைவிரலை அசைக்க வும் முடிந்திருக்கிறது. அதே சமயம் அவர்களால் இன்னமும் சுயமாக நடக்க முடியவில்லை.

பிரெய்ன் என்கிற மருத்துவ ஆய்வு சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஆய்வின் முடிவுகளின்படி, முதுகுத் தண்டுவடத்தில் அளிக்கப்பட்ட மின்சாரத் தூண்டுதல் மூலம் மூளையில் இருந்து அனுப்பப்படும் மின்காந்த சமிக்ஞைகள் மூளையில் இருந்து முதுகுத் தண்டுவடத்தின் மூலம் கால் நரம்புகளுக்கு செல்கிறது என்று மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த முக்கிய கண்டுபிடிப்பின் மூலம் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிர்காலச் சிகிச்சை முறைக்குப் புதிய வழி பிறந்திருப்பதாக ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கார் விபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக மார்புப் பகுதிக்குக் கீழே உடல் செயலிழந்த பேஸ்போல் ஆட்டக்காரர் ராப் சம்மர்ஸுக்கு இது போல மின் தூண்டுதல் அளித்ததன் விளைவாக அவரது கால்களை அவரால் அசைக்க முடிந்தது என்பதை மருத்துவ விஞ்ஞானிகள் நிரூபித் திருந்தனர். தற்போது மேலும் மூன்று பேரை அதே முறையில் கால்களை அசைக்கச் செய்திருக்கிறார்கள் மருத்துவர்கள்.

இதன் மூலம் மின்சாரத் தூண்டுதலைப் பயன்படுத்தி முதுகுத் தண்டு வடத்தின் மின்காந்த சமிக்ஞைகளைக் கடத்தும் செயற்பாட்டை மீண்டும் செய்ய வைக்க முடியும் என்கிற நம்பிக்கை மருத்துவ விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. (த)

# விமான தேடுதல் பணிக்கு 575 கோடி ரூபா செலவு

## விமானப் போக்குவரத்து வரலாற்றில் அதிகூடிய செலவினமான தேடுதல் இது

239 பேருடன் காணாமல் போன மலேசிய விமானத்தினை தேடும் பணிக்காக 44 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 575 கோடி ரூபா) செலவு செய்யப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இது விமானப் போக்குவரத்து வரலாற்றிலேயே அதி செலவினமான தேடுதலாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

"ஆஸ்திரேலியா, சீனா, அமெரிக்கா, வியட்நாம், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளின் நீர்மூழ்கிகள், கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடிக்கும் ரோபோடிக் சாதனம், விமானம் மற்றும் கப்பல்கள் தேடுதலில் தற்போது ஈடுபட்டுள்ளன.

மார்ச் மாதம் 8ஆம் திகதி மர்மமான முறையில் காணாமல்போன எம்.எச். 370 விமானத்தினைத் தேடும் பணியில் 26 நாடுகள் இணைந்து 100க்கும் அதிகமான விமானம் மற்றும் கப்பல்களை வழங்கியதுடன் நீர் மூழ்கிக் கப்பல் மற்றும் செய்மதிகள் என்பனவற்றையும் சர்வதேச முயற்சிக்காகப் பயன்படுத்தின. இதில் பல்லாயிரக்கணக்கான டொலர்கள் செலவு செய்யப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் கூறுகின்றது.

விமானம் இந்து சமுத்திரத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக நம்பப்படும் நிலையில் விமானத்தின் பாகங்கள் மற்றும் கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆஸ்திரேலியாவின் பேர்த் நகருக்கு அண்மையில் ஆஸ்திரேலியாவின் தலைமையில் தேடுதல்கள் இடம்பெறுகின்றன.

ஆஸ்திரேலியா, சீனா,அமெரிக்கா, வியட்நாம், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளின் நீர் மூழ்கிகள், கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடிக்கும் ரோபோடிக் சாதனம், விமானம் மற்றும் கப்பல்கள் தேடுதலில் தற்போது ஈடுபட்டுள்ளன. (த)

# அமெரிக்கப் பாடசாலை ஒன்றில் கத்திக் குத்தில் 22 பேர் படுகாயம்



கத்திக் குத்தில் இருந்து தப்பிய மாணவி ஒருவர்

நியூயோர்க்.ஏப் 11

அமெரிக்காவின் பென்சில் வேனியாவிலுள்ள உயர் நிலைப் பாடசாலையொன்றில் 22 பேர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளனர்.

இரண்டு கத்திகள் மற்றும் ஆயுதத்துடன் பாடசாலைக்குள் புகுந்த ஒருவர் 21 மாணவர்களையும் பாதுகாப்பு ஊழியர் ஒருவரையும் கத்தியால் குத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் 16 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஆட்கொலைதொடர்பில்நான்கு பிரிவுகளிலும் தாக்குதல் தொடர்பில் 21 பிரிவுகளிலும் அவருக்கு எதிராகக் குற்றச் சாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

14 வயது மாணவர்களே கத்திக்குத்து காரணமாகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள போதிலும், அனைவரும் காப்பற்றப்பட்டுள்ளனர்.

எனினும் இந்தச் சம்பவத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (த)

# மத்திய ஆபிரிக்க குடியரசில் மோதல்

## 30 பேர் வரை பலி

டெக்கோவா.ஏப். 11

மத்திய ஆபிரிக்க குடியரசில் இடம்பெற்ற மோதலில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடியரசின் டெக்கோவா நகரிலேயே அதிக அளவான மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ மக்களை இலக்கு வைத்து, முஸ்லிம் செலேகா போராளிகள் இவ்வாறான தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

மத்திய ஆபிரிக்காவில் காணப்படும் இஸ்லாமிய அரசுக்கு எதிராகக் கடந்த டிசெம்பர் மாதம் முதல் எதிர்ப்புகள் எழ ஆரம்பித்ததில் இருந்து, அங்கு வன்முறைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. (த)

# சுமார் 65 லட்சம் வாகனத்தை திரும்பப் பெறும் டொயோட்டா

ரோக்கியோ,ஏப் 11

கார் தயாரிப்பு பெரு நிறுவனமான டொயோட்டா சுமார் 65 லட்சம் வாகனங்களைத் திரும்பப் பெறுகிறது.

கார் தயாரிப்பு வரலாற்றில் இந்த அளவுக்கு ஒரு நிறுவனம் தனது தயாரிப்புகளை திரும்பப் பெறுவது இதுவே முதல் முறை.

உலகின் மிகப்பெரும் கார் தயாரிப்பு நிறுவனமான டொயோட்டா, தனது யாரிஸ், அர்பன் க்ரூய்ஸர், றேவ் 4 மற்றும் ஹைலுக்ஸ் ரக வாகனங்களையே இப்போது திரும்பப் பெறுகிறது.

இவற்றில் 30 லட்சம் வாகனங்களில், விபத்துக்கள் ஏற்படும்போது பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ள காற்றுப் பைகளில் பிரச்சினைகள் இருப்பது கண்டறியப்பட்டது. விபத்து ஏற்படும்போது அவற்றில் காற்று நிரம்புவதில் பிரச்சினைகள் இருந்தன.

மேலும் இருக்கைகள், ஸ்ரியரிங் மற்றும் வாகனத்தை இயங்கச் செய்யும் மோட்டர்கள் ஆகியவற்றிலும் பிரச்சினைகள் இருந்தன.

எனினும் இந்தப் பிரச்சினைகள் காரணமாக விபத்துக்களோ, காயமோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்பட்டதாக தாங்கள் அறியவில்லை என டொயோட்டா கூறியுள்ளது.

கடந்த சில மாதங்களில் ஐந்தாவது முறையாக இவ்வாறு குறைபாடுகள் காரணமாக டொயோட்டா தமது வாகனங்களைத் திரும்பப் பெறுகிறது. (த)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**A/L CHEMISTRY**
2014 - Inorganic Chemistry (மீட்டல்)
Mon - Fri - 06.00 am - 07.00 am
2015 - அவத்தை சமநிலை Paper Class
Mon - Fri - 06.00pm 07.00 pm
2016 - ஒட்சி ஏற்றம் தாழ்த்தல்
ஆசிரியர்: Mr.S.Sureshkumar Bsc (Hons)
THE SCIENCE CORNER (46670) (12.6)

**வைத்தியம்**
சித்த வைத்தியர் Dr.R.Sivagurunathan ஐ சனி (12/04), ஞாயிறு (13/4) தினங்களில் நல்லூரில் சந்திக்கலாம். அனைத்து வலி, நோக்கள் வருடக் கணக்கில் துன்ப்ப்படுபவர்களுக்கான விசேட சிகிச்சை, ஆஸ்த்துமா, கடி, சொறி, குழந்தை இன்மை சம்பந்தமான அனைத்து விடயங்களுக்கும் தெளிவான சிகிச்சை. (சி/13329)(7.6)
077 730 1669 சந்திப்பு இலவசம்.

**சோதிடம்**
கல்வியில் சித்தியுண்டா? உத்தியோகம் கிட்டுமா? வியாபாரம் விருத்தியாகுமா? வெளிநாடு போகலாமா? விவாகம் நடைபெறுமா? நோய் நீங்குமா? கேட்டுப்பாருங்கள்!
ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞான மூலமாக பலன்கள் சொல்லப்படும்.
வீடு கட்டுவதற்கான நிலையம் வகுத்துத்தரப்படும்.
"சிவா சோதிட நிலையம்"
100, அரசடி வீதி- நல்லூர், யாழ்./இந்து மகளிர் கல்லூரியடி.
T.P:077 899 6281 (46658) (3.6.4)

# சிறைக் கைதிகளுக்கு தொலைபேசி வசதி

கொழும்பு.ஏப்.11
சிறைக் கைதிகளுக்குத் தொலைபேசி அழைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைக்குள் அமைக்கப்படவுள்ள விசேட தொலைபேசிக் கூடத்தில் சிறைக் கைதிகள் அழைப்புகளை எடுக்க முடியும் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திர ரத்ன பல்லேகம தெரிவித்தார்.

சிறைக்குள் இருந்து கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த இந்தத் திட்டம் உதவும் என்று அவர் குறிப்பிட்டார்.

உறவினர்களுடன் உரையாட வாய்ப்பு இல்லாததால் கைதிகள் சட்டவிரோதமான முறையில் கைத்தொலைபேசி பயன்படுத்துகின்றனர் என்றும் அவர் கூறினார். இந்தத் திட்டத்தின் ஆரம்பமாக இன்று வெள்ளிக்கிழமை வெலிக்கடைச் சிறையில் தொலைபேசிக் கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.(ச)

**மணமகள் தேவை**
யாழ். கிறிஸ்தவ கௌரவ, 1978, கார்த்திகை 3 ஆம் பாதம், 1 இல் செவ்வாய், 28½ பாவம், லண்டன் PR மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
இந்துக்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொ.பே:077 711 1041 (46663) (3.6.4)

**A/L CHEMISTRY**
வெளிவந்துவிட்டது....
M.C.Q 1999 - 2013 விளக்க உரையுடன் கூடிய நூல்
கிடைக்குமிடம்
THE SCIENCE CORNER
ஆசிரியர்
Mr.S.Sureshkumar Bsc (Hons)
T.P:077 555 9028 (46671) (12.6)

**காசாளர் தேவை**
சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எமது உணவு விற்பனை நிலையத்திற்கு பெண் காசாளர் தேவை. அந்தந்தப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
ஆச்சி ஹொட் பூட்
117, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
021 222 2092, 077 329 4341 (சி/13481) (7.6)

## மூவகைப் பயன்களை தருவது தவம்

இம்மை, மறுமை, வீடு என்னும் மூவகைப் பயனையும் மக்களுக்குத் தருவது தவமே ஆகும். மறுமையும் வீடுமேயன்றி இம்மைப் பயனும் தவத்தாலேயே ஆகும் என்பது பெரியோர் நம்பிக்கை.

இத்தகைய தவப்பேற்றை எமக்கு அளிப்பன சமய வாழ்க்கையே ஆகும். அறிவினால் ஆகிய பயன் நல்லதன் நலனையும் தீயதன் தீமையையும் அறிவதும் பாவ புண்ணியங்களைப் பகுத்துணர்வதுமாகும். அதற்காகவே சமய வாழ்வை நம் முன்னோர் நமக்குக் காட்டிச் சென்றனர். உண்மைச் சமயி வாழ்க்கையின் அடிநிலையை அறிந்துணர்பவனாவான். அந்த அறிவு தன்னை ஆராயச் செய்து தலைவனை அறிய வைக்கும். இறைவன் எமக்கு மானுடப் பிறவியை தந்ததின் நோக்கம் இதற்காகவேயாகும். மானுடப் பிறவியின் பயனை இறை வழிபாட்டின் மூலமும் நாம் பெறலாம்.

நன்றி-அருள்ஒளி

## பட்டமேற்கல்வி டிப்ளோமா

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தால் நடத்தப்படும் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2013 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்று கடமையாற்றும் அதிபர், பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரிய கல்வியாளர், ஆசிரிய ஆலோசகர் மற்றும் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் இந்தக் கற்கை நெறிக்காக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை 03.05.2014 வரை யாழ்.பிராந்திய நிலையத்திலும் 155 ஆம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)

**தெல்லிப்பழை பஸ்நிலைய புதிய கடைத் தொகுதிகள் வாடகைக்கு விடுவதற்கான**

# கேள்வி அறிவித்தல் 2014

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி | : | 28.04.2014 திங்கட்கிழமை பி.ப 3.00மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி | : | 29.04.2014 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணி வரை |
| கேள்விகள் திறக்கப்படும் திகதி | : | 29.04.2014 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00மணி |

| இல | கடை இலக்கம் | மாத வாடகை ரூபா | ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூபா | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) ரூபா | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல - 01 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 02 | கடை இல - 02 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 03 | கடை இல - 03 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 04 | கடை இல - 04 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 05 | கடை இல - 05 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 06 | கடை இல - 06 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 07 | கடை இல - 07 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 08 | கடை இல - 08 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 09 | கடை இல - 09 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 10 | கடை இல - 10 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 11 | கடை இல - 11 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 12 | கடை இல - 12 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |
| 13 | கடை இல - 14 | 2000.00 | 1,000,000.00 | 25000.00 | 1000.00 |

குறிப்பு:-

- கடைக்கான மாத வாடகை உடனடியாக ரூபா 2000/= வும், பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
- கடை இலக்கத்தினை நேரடியாக கடைத்தொகுதியில் பார்வையிடலாம் அல்லது அலுவலகத்திலுள்ள வரைபடத்தில் பார்வையிடலாம்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்து அதன் போட்டோப் பிரதியை சமர்ப்பித்து தெல்லிப்பழை உப அலுவலகத்திலிருந்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், தெல்லிப்பழை உப அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
11.04.2014

சோமசுந்தரம் சுகிர்தன்.
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்).

(C/13480)(2.6)

**பெயர் மாற்றம்**
42, பெரிய கமம், எழுத்தூர், மன்னார் எனும் முகவரியைச் சேர்ந்த
**முகமது இசாதீக் இனாமூல் கசன்**
ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை
**முகமது இசாதீக் நிதேஷ்**
எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
M.I.நிதேஷ்
(46673)(12.6)

**நிலா ஹாட்வெயர்ஸ் மற்றும் கட்டட பொருள் விற்பனை நிலைய திறப்புவிழா அழைப்பு**
இல. 171, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணத்தில்
எதிர்வரும் 2014 ஏப்ரல் 13ஆம் நாளன்று
மு.ப.09.30 மணி – 11.00 மணி
வரையான சுபவேளையில்
நிலா ஹாட்வெயர்ஸ்
திறப்பதற்கு இறைவன் திருவருள் கூடியுள்ளது.
இந்த திறப்புவிழாவுக்கு அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வருகை தந்து ஆசி கூறி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
இல.171, மூத்த விநாயகர் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம். 076 675 7572
இராசையா தனேந்திரகுமார் குடும்பம்.
நிலா ஹாட்வெயர்ஸ்.

**தமிழ் புத்தாண்டு**
**சிறப்பு மலிவு விற்பனை**

உங்கள் நெஞ்சங்களை மனம்மகிழ வைக்கும்
மிகக் குறைந்த விலைக்கு... தரமுயர்ந்த புத்தாடைகள்
எங்கும் தேட முடியாத அற்புத தெரிவுகள் எவராலும் தரமுடியாத குறைந்த விலைகளில்
அலையென திரண்டுவந்து அள்ளிச் செல்ல வாருங்கள்

கனடா ஜெயசாஜி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Phone : 021 221 9393
(2500 ரூபாவிற்கு மேற்பட்ட சாறிகள், சல்வார்களுக்கு நெக்லஸ் மற்றும் காப்பு இலவசம்)
09.04.2014 தொடக்கம் 13.04.2014 வரை மட்டுமே...
காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை (33479) (7.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




யா/பாஷையூர் சென் அன்ரனீஸ் றோ/க மகளிர் பாடசாலையில் கல்வி கற்று 2013 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற




யூட்சன் ஜெனற் சலோமி 8A, C
ஜெய் லாப்தீன் பாத்திமா சாலினா 6A,2B, S

இம் மாணவிகளை பாராட்டி வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகம்,
யா/பாஷையூர் சென் அன்ரனீஸ் றோ/க மகளிர் பாடசாலை. (46669) (3.6.4)

# வலி.மேற்கு பிரதேச சபையில் நடைபெற்ற உலக நீர் தினம்



யாழ்ப்பாணம்,ஏப்.11

உலக தரிசன நிறுவனத்தின் உதவியுடன் உலக நீர் தினம் வலி.மேற்கு பிரதேச சபையில் பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நேற்று முன் தினம் இடம் பெற்றது.

உலக நீர் தினத்தின் கருப் பொருளாக "நீர் இன்றி அமையாது உலகு" என்பது அமைந்திருந்தது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் முகாமையாளர் ஜ.மைக்கல், தென்மராட்சி வேள்ட் விஷன் நிறுவனத்தின் முகாமையாளர் அ .கி. றொசைறோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையைப் பிரதேச சபை செயலாளர் திருமதி உருத்திர சாம்பவன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஆசியுரையை யாழ்ப்பாணம் சின்மயாமிசன் ஜாக்ரத் சைத்தன்யா சுவாமிகளும், தென் இந்திய திருச்சபையின் போதகர் வண செபஸ்ரியன் அன்ரனியும் வழங்கினர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீட சமுதாய மருத்துவத்துறை தலைவர் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமார், யாழ். பல் கலைக் கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரை யாளர் இ. இராஜேஸ்கண்ணன், யாழ் பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பிரதீபா விபுலன் ஆகியோரும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ-21-115)




## வலிகாமம் வலயத்தில் ஐந்து பாடசாலைக்கு அதிபர்கள்

வலி. வடக்கு. ஏப். 11

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட 5 பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்துள்ளார்.

பன்னாலை வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அதிபராக சிறுவிளான் கனகசபை வித்தியாலய அதிபராக இருந்த ஸ்ரிபன் றெக்ஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை குணபால வித்தியாலயத்துக்கு அதிபராக நவாலி அட்டகிரி சைவ வித்தியாலய அதிபராக இருந்த திருமதி அம்பிகை சிவஞானம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்துக்கு அராலி இந்துக் கல்லூரி அதிபர் எ. பேரின்பநாயகம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கீரிமலை வலித்தூண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சு.செல்வரத்தினம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்துக்கு சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலய அதிபர் ஆ.குமரகுருபரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (வ-86)

## உளவள பணியாளர்களுக்கான பயிற்சி மன்னாரில் ஆரம்பம்

உளவள பணியாளர்களுக்கான 4 மாத பயிற்சி நெறி மன்னார் திருமறைக் கலாமன்றத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை மன்னார் திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்றது. இதற்கெனத் தெரிவு செய்யப் பட்ட 25 மாணவர்கள் பயிற்சி களில் பங்குபற்றி பயனடைய வுள்ளதோடு உளவள சேவையில் இணைக்கப்பட்டு பணி யாற்றவுள்ளனர்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திருமறை கலாமன்றத்தால் முன்னெடுக்கப் பட்டுவரும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக 90 பெண்கள் பனை ஓலையைப் பயன்படுத்தி உற்பத்தி பொருள்கள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்று தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உழைத்து வருகின்றனர். அவர்களில் தெரிவு செய்யப்பட்ட 25 பெண்களே குறித்த உளவள பயிற்சி நெறியை பயின்று பயன டையவுள்ளனர். குறித்த உளவள பயிற்சி நெறிக்கு வளவாளராக திருப்புமுனை நிறுவனத்தின் பணிப்பாளர் அருட் தந்தை வின்சன் பற்றிக் பயிற்சிகளை நெறிப்படுத்தவுள்ளார். (வ)



பயிற்சியில் கலந்துகொண்ட உளவள பயிற்சியாளர்கள்....

## நீர்ப் பற்றாக்குறை தொடர்ந்தால் நாம் சூழல் அகதிகளாகும் நிலை ஏற்படும்

### உலக நீர் தின நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

நாம் இன்று எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் நீர் பிரச்சினை மிக முக்கிய பிரச்சினையாக உள்ளது. சுத்தமான குடிதண்ணீரை பெறுவதற்கு நாம் மிக கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முன்னர் புத்தகங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடம் ஆபிரிக்கா என்றும், அங்கு நீரைப் பெறுவதற்குப் பல மைல் தூரம் நடக்கவேண்டி உள்ள நிலை இருந்ததாகவும் படித்திருக்கிறோம். ஆனால் இன்று அந்த நிலைமையை நாம் இங்கு காணக் கூடியதாக உள்ளது. மிக மோசமான வகையில் குடிதண்ணீர் பிரச்சினையை நாம் எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது- என்று வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்தார்.

உலக நீர் தினம் குறித்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வலி. மேற்கு பிரதேச சபையில் உலக தரிசன நிறுவனத்தின் உதவியுடன் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறுகையில்:-

இயற்கையின் தாக்கம் ஒரு புறம் இருக்க மனித நடவடிக்கைகளும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது. இந்த நிலை தொடருமானால் சூழல் அகதிகள் என்ற நிலை ஏற்படுத்தப்படும். நீர் இல்லாத நிலையில் நாம் வாழும் இந்தப் பிரதேசத்திலிருந்து நாம் வெளியேறவேண்டிய நிலை உருவாகும். உலகிலுடைய நாகரிகங்கள் யாவும் நீர் நிலைகளுக்கு அருகிலேயே உருவாகின. அந்தக் காலப் பகுதியில் நீரை உரிய முறையில் தேக்கி வைத்து அதன் வாயிலாகவே மனிதர்கள் நிலைபெற்றனர்.

சிகிரியாவை ஆண்ட காசியப்பன் தனது தந்தையாகிய தாதுசேனனிடம் செல்வத்தை வழங்குமாறு கேட்ட போது அருகிலுள்ள கலாவாவிக்கு அழைத்துச் சென்று வாவியின் நீரை தனது கைகளால் அள்ளி இதுவே செல்வம் எனக் குறிப்பிட்டார். இந்த அளவுக்கு அந்தக் காலத்தில் நீரின் முக்கியத்துவம் பேணப்பட்டது. இதிலும் ஒரு முக்கிய விடயம் ஓடும் நீரை அள்ளிக்காட்டாது குளத்து நீரை அள்ளி அதன் வாயிலாக தெளிவுபடுத்தப்பட்ட விடயம் நீரின் சேமிப்பு மிக அவசியமான ஒன்று என்பதாகும். இந்த வகையில் நோக்கும்போது நாம் எத்தனை பேர் எமது பிரதேசக் குளங்களைப் பற்றிச் சிந்தித்திருக்கின்றோம். நிலத்தடி நீரைப் பெறுவதற்கு நாம் பல முயற்சிகள் எடுக்கின்றோம். ஆனால் அவ்வாறு பெறுகின்ற நீரை சேமித்து வைக்கக்கூடிய சாத்தியமான வழிமுறைகள் குறித்து நாம் ஆராய்வதில்லை. நாள் ஒன்றுக்கு எத்தனை ஆயிரம் லீற்றர் நீரை வீணாக்குகின்றோம். ஒரு கிராமத்துக்கு ஒரு குளமாவது அமைக்க முயற்சிக்க வேண்டும். மக்கள் தாமாக முன்வந்து குளங்களை ஆழமாக்கும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். இந்த நிலை உருவாகும் போது நீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இயலும். முன்னைய காலங் களில் குளங்களில் தாமரை, அல்லி போன்ற தாவரங்கள் காணப்பட்டன. இது இயற்கையாகவே நீரின் ஆவியாக்கத்தை கட்டுப்படுத்தக் கூடிய வழிமுறையாகும். இவற்றை நாம் மேற்கொள்ளும் போது எமது பிரதேசத்தை நாமே பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். வெறுமனே நீர்ப் பற்றாக்குறை, நீர் மாசடைகின்றது என்று கூறுவதில் அர்த்தமில்லை. இதற்கான மாற்று நடவடிக்கையை ஏற்படுத்துவதற்கு தயாராக வேண்டும். ஏற்கனவே உள்ள நீர் நிலைகளை புனரமைப்புச் செய்ய முயற்சிக்க வேண்டும். இந்த வகையில் எமது பிரதேசத்தில் நீர் விநியோகப் பணிகளில் ஈடுபட்ட "வேள்ட் விஷன்" நிறுவனத்தினருக்கு மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்களது உயர்வான சேவையினால் எமது பிரதேசத்துக்கு இரு நீர் விநியோகத்திட்டங்கள் கிடைத்துள்ளன. இவ்வாறே மக்களுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளத்தக்கதான இரு நீர்த்தாங்கிகளும் கிடைத்துள்ளன. இதன் வாயிலாக நாளாந்தம் சராசரியாக 30 ஆயிரம் லீற்றர் நீர் விநியோகம் நடைபெறுகின்றது. எமது பிரதேச மக்களின் குடிதண்ணீர்த் தேவைகளை நாம் பூர்த்தி செய்யக் கூடிய நிலை தற்போது காணப்படுகின்றது- என்றார். (வ-115)




## கடை உடைத்து திருட்டு



வவுனியா, ஏப்.11
வவுனியா ஹொரொவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள கடையொன்றில் கடந்த எட்டாம் திகதி அதிகாலை திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடையை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணம் மற்றும் பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த திருட்டுத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-402)

## பொதுக் கூட்டம்

கிளிநொச்சி, ஏப்.11
கிளிநொச்சி மாவட்ட ஆயுள் வேத பாதுகாப்புச் சபை பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் வைத்தியர் கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கரைச்சிப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வட மாகாண சுதேச வைத்தியத்துறை அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் எஸ். சிவநேசனும் கலந்து கொள்வார்.

இந்த கூட்டத்தில் ஆயுள்வேத வைத்தியத்துறையின் வளர்ச்சி, தேவைப்பாடு, வளங்கள், எதிர்நோக்கும் சவால்கள் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ-426)

## கட்டாக்காலி நாய்களால் ஆபத்து

கிளிநொச்சி, ஏப்.11
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் கடும் வெப்பம் காரணமாக நாய்களுக்கு பரவலாக விசர் நோய் ஏற்பட்டுள்ளதால் அவதானமாக இருக்கும் படியும் ஒட்டுசுட்டான் பிரதேச ஆயுள் வேத வைத்தியர் நா. வன்னியசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கற்சிலைமடு கிராமத்தில் அதிகமான கட்டாக்காலி நாய்கள் உலாவுகின்றன. அதனோடு விசர் நாய்களும் உலாவுவதால் மக்கள் வெளியில் நடமாட அஞ்சுகின்றனர். ஒட்டுசுட்டான் பிரதேச சபை இவ்விடயத்தில் கவனம் செலுத்திச் செயற்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (ஐ-500)



முல்லைத்தீவு மாவட்ட அரச செயலகத்துக்காக அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் முடிவுறும் நிலையை எட்டியுள்ளன. (ஐ-102)

# கிளிநொச்சியில் வாரச் சந்தை அமைக்கப்படுவது அவசியம்

### வட மாகாண எதிரணி உறுப்பினர் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.11
உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சந்தைகள் மூலம் விற்பனையாளர்களும் நுகர்வோரும் எதிர்கொள்ளும் சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு வாராந்தச் சந்தைகள் அமைக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கண்டாவளைப் பிரதேசத்தில் வாழ்வின் எழுச்சி புது வருடச் சந்தையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

உற்பத்தியாளர்கள் இலகுவாகப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கும் பாவனையாளர்கள் அவற்றை இலகுவாகக் கொள்வனவு செய்வதற்கும் ஏற்ற வகையில் சந்தைகள் இயங்க வேண்டும்.



திறக்கப்பட்ட புதுவருடச் சந்தையில் மக்கள் முண்டியடித்து கொள்வனவில் ஈடுபடுகின்றனர்.

கிளிநொச்சியில் பெரும் சவால்களுக்கு மத்தியில் காணி பெறப்பட்டு மிகப் பெருந் தொகையான நிதியைச் செலவு செய்து பொதுச் சந்தை அமைக்கப்பட்டபோதும், அதைச் சீராக இயங்க வைப்பதில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

எனவே இவ்வாறான நெருக்கடிகளைத் தவிர்க்கும் பொருட்டு வாராந்த சந்தையை இயங்க வைக்க வேண்டியது தற்போதைய தேவையாகவுள்ளது.

வாராந்த சந்தைகளின் உருவாக்கத்தின் மூலம் போட்டித் தன்மையை உருவாக்கி சந்தையைத் திறம்பட செயற்பட வைக்க முடியும்- என்றார்.

கண்டாவளை புளியம்பொக்கணைச் சந்திப் பகுதியில் வாழ்வின் எழுச்சி புது வருடச் சந்தை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு தினாங்கள் விற்பனைகள் நடைபெற்றன. (ஐ-18)

## தமிழ் மொழி திறன் போட்டி

கிளிநொச்சி, ஏப்.11
கிளிநொச்சி வலயத் தமிழ் மொழித் திறன் போட்டிகள் எதிர்வரும் புதன்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் காலை 8.30 மணிக்கு இப்போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் கரைச்சி, கண்டாவளை, பளை ஆகிய கல்விக் கோட்டங்களிலிருந்து வலய மட்டத்துக்கு தெரிவான போட்டியாளர்கள் கலந்து கொள்வர். (ஐ-18)



கோப்புப்படம்

## வீதியை புனரமைக்க கோரிக்கை

வவுனியா, ஏப்.11
ஓமந்தை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள அரச முறிப்பு மற்றும் பெரிய விளாத்திக்குளம் கிராமங்களுக்கான வீதி அண்மையில் புனரமைக்கப்பட்ட போதும் அது தற்போது சேதமடைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின் றனர்.

ஓமந்தை ரயில் நிலையம் கடந்த ஆண்டு புதிதாக திறக்கப்பட்டதையடுத்து குறித்த கிராமத்துக்கென முன்னர் பயன்படுத்தப்பட்ட வீதி மூடப்பட்டு புதிதாகப் பாதை அமைக்கப்பட்டது. எனினும் குறித்த வீதி தற்போது பாவனைக்கு உதவாத நிலையில் சேதமடைந்து உள்ளது.

எனவே குறித்த வீதியை மீளப் புனரமைத்துத் தருமாறு அப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (ஐ-402)



கோப்புப்படம்

## மணல் ஏற்றுவோர் மீது பொலிஸார் நடவடிக்கை

முல்லைத்தீவு, ஏப்.11
அனுமதியின்றி மணல் ஏற்றிச் செல்பவர்களைக் கைது செய்வதில் ஒட்டுசுட்டான் பொலிஸார் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தினமும் அனுமதியில்லாது பெருமளவு மணல் அகழ்ந்து எடுக்கப்பட்டு ஏற்றிச் செல்லப்படுகின்றது.

உழவு இயந்திரத்தின் உதவியுடன் ஆற்றிலிருந்து மணலை வாரிக் குவித்து ஏற்றி வருபவர்களை இனங்கண்டு அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் பணியிலும் பொலிஸார் தீவிரமாக உள்ளனர். கடந்த வாரம் இவ்விதம் மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கை ஒளி உதவி

கிளிநொச்சி, ஏப்.11
பாதிக்கப்பட்ட மக்களை இனங்கண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை நம்பிக்கை ஒளி நிறுவனம் செய்து வருகின்றது. இவ்வாறு தெரிவித்தார் அதன் இணைப்பாளர் எஸ்.சுபாஸ். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

**முல்லைத்தீவு போன்ற பல இடங்களில் தெரிவு செய்யப் பட்ட பலருக்கு உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.**

பாடசாலை மாணவர்களை முதன்மைப்படுத்தி எமது நிறுவனம் உதவிகளை வழங்கி வருகிறது. பயனாளிகளை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் உதவியோடு இனங்கண்டு அவர்களுக்கு உதவி வழங்கி வருகின்றோம். விசுவமடு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு போன்ற பல இடங்களில் தெரிவு செய்யப்பட்ட பலருக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்டு கல்வியைத் தொடர முடியாது இடர்களை எதிர்கொள்ளும் குடும்பங்களை முதன்மைப்படுத்தி உதவிகளை வழங்கி வருகின்றோம் - என்றார். (ஐ-500)

## வன்னேரிக்குளம் கிராமத்தில் குடிதண்ணீருக்கு நெருக்கடி

கிளிநொச்சி, ஏப்.11
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளம் கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடி நிலவி வருகின்றது.

வன்னேரிக் குளம் கிராமத்திலுள்ள குஞ்சுக் குளம் பகுதியில் சுமார் 70 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

குஞ்சுக்குளம் கிராமம் உவரடைந்ததால் இங்கு வசிக்கும் மக்கள் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்று குடிதண்ணீரைப் பெற வேண்டிய நெருக்கடி நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உவர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள முக்கிய கிராமங்களில் வன்னேரிக் குளம் முதன்மை வகிக்கின்றது.

இதேவேளை வன்னேரிக் குளம் போன்று அயல் கிராமமான ஆனைவிழுந்தான் குளம் கிராமமும் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. (க-18)





துப்புரவு செய்யப்பட்டது பொதுக்கிணறு

# கிழக்கில் நிலவும் வறட்சியால் பொதுக்கிணறுகள் துப்புரவு

அம்பாறை.ஏப்.11

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சிநிலையைக் கருத்தில் கொண்டு சவளக் கடை பொலிஸாரும், நாவிதன் வெளி பிரதேச சபை உத்தியோகத்தர்களும் இணைந்து 15ஆம் கொலனி கம்பிக் காலை பிரதேசத்திலுள்ள பொதுக் கிணற்றை நேற்றுமுன்தினம் புதன்கிழமை துப்புரவு செய்துள்ளனர்.

பிரதேச மக்களின் அன்றாட குடிதண்ணீருக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே துப்புரவு செய்யும்பணி முன்னெடுக்கப்பட்டது. சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எஸ். பத்திரணவின் வழிகாட்டலின் கீழ் கிணறு துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. (ச)

# முன்னாள் போராளிகள் ராணுவத்தில் இணைப்பு

## கிழக்கில் படையினர் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என்கிறார் கலையரசன்

எருவில்,ஏப்.11

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி புனர் வாழ்வு அளிக்கப்பட்டு அவர்களது குடும்பங்களுடன் இணைக்கப்பட்ட போராளிகளை இலங்கை இராணுவத்தில் சேர்ப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் தீவிர நடவடிக்கையில் படையினர் இறங்கியுள்ளனர்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் கூறினார்.

முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேறி தற்போது தங்களது குடும்பங்களுடன் இணைந்திருக்கும் போராளிகளை அண்மைக்காலமாக இராணுவத்தில் சேருமாறு விடுக்கப்படும் எச்சரிக்கை தொடர்பாக கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்திலே அண்மையில் புலிப் பூச்சாண்டி காட்டிய அரசு தற்போது அதனொரு பகுதியாக கிழக்கு மாகாணத்திலும் அவ்வாறானதொரு தோற்றப்பாட்டை உருவாக்கிக்காட்டி மீண்டும் தமிழர்களை அச்ச நிலைக்கு உட்படுத்தும் செயற்பாடாகவே இதனைப் பார்க்க வேண்டி இருக்கின்றது.

> "தமிழ் இளைஞர்களையும் இராணுவத்தில் சேருமாறு நிர்ப்பந்தித்து வருவதன்மூலம் இனியும் ஓர் இருண்ட யுகத்துக்கு எம்மினம் தள்ளப்பட்டு விடுமோ என்ற நிலைப்பாட்டினையும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்திலே திருக்கோவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சில இடங்களில் தமிழர்கள் மர்மமான முறையில் காணாமற்போயிருக்கின்றார்கள்.

அதன் பின்னரும் அந்தப் பிரதேசத்தில் இருந்து கால்நடை வளர்ப்புக்காகச் சென்றிருந்தவர்களைக் காட்டுக்குள் வைத்து கறுப்புச் சீருடை அணிந்த ஆயுதம் தாங்கிய நால்வர் பிடித்து மரத்தில் கட்டி வைத்து அவர்களைத் துன்புறுத்தியிருக்கின்றார்கள்.

அந்தப் பாதையால் சென்று கொண்டிருந்தவர்களைப் பார்த்து இவர்கள் கூக்குரல் இட்டதன் மூலமே அவர்கள் அந்த இடத்தில் இருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றார்கள்.

அதன் பின்னர் தாக்கப்பட்டவர்கள் உடனடியாகத் திருக்கோவில் பிரதேச பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தமது முறைப்பாட்டைச் செய்திருக்கின்றார்கள்.


இந்தச் சம்பவம் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான நியாயமற்ற வேலைகளைச் செய்பவர்கள் யார் என்பதனை இது வரைக்கும் கண்டறியாமல் இருப்பது பெரும் கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது.

தமிழ் மக்கள் பல அழிவுகளைக் கண்டவர்கள். அழிவுகளால் நேரடியாகப் பாதிப்புக்களுக்கு உள்ளானவர்கள் அந்த வலியினை உணர்ந்ததன் காரணமாக இனி மேலும் அந்த அழிவு என்ற பாதைக்குப் போகாமல் ஜனநாயக வழியிலே எமக்கான விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்றுதான் இன்று அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இராணுவத்தினரால் புனர் வாழ்வு அழிக்கப்பட்டு தங்களது குடும்பங்களுடன் இருப்பவர்களையும், ஒன்றுமே தெரியாத அப்பாவி தமிழ் இளைஞர்களையும் இராணுவத்தில் சேருமாறு நிர்ப்பந்தித்து வருவதன்மூலம் இனியும் ஓர் இருண்ட யுகத்துக்கு எம்மினம் தள்ளப்பட்டு விடுமோ என்ற நிலைப்பாட்டினையும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான கசப்பான சம்பவங்கள் பெரிதும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப் போல் வேதனை தருவதாக உள்ளது-என்றார். (ச-31)



வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஊழியரிடம் விசாரணை நடத்திய பொலிஸார்.

# சம்பள முரண்பாட்டால் ஏற்பட்டது கைகலப்பு

## இரு ஊழியர்கள் வைத்தியசாலையில்

வாழைச்சேனை,ஏப்.11

வாழைச்சேனை கடதாசி ஆலை ஊழியர்கள் எவருக்கும் கடந்த சில மாதங்களாக சம்பளம் வழங்கப்படாத நிலையில் குறிப்பிட்ட தொரு தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு மட்டும் நேற்றுமுன் தினம் சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் தொழில் சங்கங்களின் உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் இரண்டு ஊழியர்கள் பாதிக்கப்பட்டு வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் பதினொரு பேருக்கு மாத்திரம் சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மற்றைய இரு சங்கங்களின் உறுப்பினர்களும், சம்பளம் பெறுவதானால் எல்லோரும் ஒன்றாகப் பெறவேண்டும் இல்லாவிட்டால் எவருமே சம்பளம் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று கூறியதால் ஊழியர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் தாக்கியதில் இரண்டு பேர் காயமுற்று வாழைச் சேனை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)



புது வருடத்தை முன்னிட்டுக் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர் மருத்துவ முகாம் ஒன்றை நேற்று வியாழக்கிழமை காக்காச்சிவட்டை விஷ்ணு மகாவித்தியாலயத்தில் நடத்திய போது. மக்கள் அதில் கலந்துகொண்டு சிகிச்சைகளைப் பெற்றுப் பயனடைந்தனர். (ச-31)

# சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டவர் கைது

அம்பாறை,ஏப்.11

அம்பாறை,நாவிதன்வெளி பிரதேச சபைக்குட்பட்ட சாளம்பைக்கேணி பிரதேசத்தில் சட்டவிரோதமாக மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவரைச் சவளக்கடைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

நாவிதன்வெளி பிரதேச சபைக்குட்பட்ட செறிக்கல்முனை - 3 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மண் அகழ்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை வைத்துக் கொண்டு சாளம்பைக் கேணி - 5 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சட்டவிரோதமாக மண் அகழ்வு செய்து கொண்டிருந்த போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

# 25 வீடுகளுக்கு குழாய்க் கிணறுகள்

மட்டக்களப்பு.ஏப்.11

மட்டக்களப்பு. காத்தான்குடி. கல்லடி ஆகிய பிரதேசங்களில் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள 25 தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்களின் வீடுகளில் இலவசமாக குழாய்க்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜனாபா சல்மா ஹம்சாவின் வேண்டுகோளுக்கமைய, அல்ஹிம்மா நிறுவனத்தினால் குழாய்க்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (ச)

# காட்டு யானை தாக்குதலால் அச்சத்துடன் வாழும் மக்கள்

## பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டார் மாகாணசபை உறுப்பினர்

மட்டக்களப்பு,ஏப்.11

மட்டக்களப்பு,போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் யானைகளின் தாக்குதல்களால் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், பயன் தரு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

யானைகளின் தாக்குதலால் பொது மக்கள் அச்ச நிலையில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட காந்திபுரம், ஆலையடிமடு,பிளாலிவேம்பு ஆகிய பிரதேசங்களுக்குள் புகுந்த காட்டு யானைகள் பல வீடுகளையும் சேதப்படுத்தியுள்ளன.

இந்தப் பிரதேசங்களுக்குச் சென்ற மாகாணசபை உறுப்பினர் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டுள்ளார்.



யானை தாக்குதலால் பாதிக்கப்பட்ட வீட்டை பார்வையிட்டார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்.

யானைகளினால் ஏற்படும் பாதிப்புகளுக்கான அனைத்து பொறுப்புகளையும் வன ஜீவராசி திணைக்களத்தினரே ஏற்க வேண்டும்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் தலையிட்டு உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-31)

# அகழ்வாராய்ச்சிகளில் ஈடுபடப் போவதில்லை

## மேதானந்ததேரர் தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.11

எதிர்வரும் காலங்களில் தாம் அகழ்வாராய்ச்சிப் பணிகளில் ஈடுபடப் போவதில்லை என்று எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெரும் மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளேன்.

எனவே எதிர்வரும் காலங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகளில் ஈடுபடப் போவதில்லை.

மிக முக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதில் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்துவதில்லை.



எல்லாவல மேதானந்த தேரர்

சகலவிதமான அகழ்வாராய்ச்சிப் பணிகளிலிருந்தும் விலகிக் கொள்கின்றேன்.

அகழ்வாராய்ச்சிப் பணிகளிலிருந்து விலகிக் கொள்வது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்-என்றார். (ச)

# இனவாத அமைப்புகளை ஊக்குவிக்கின்றது அரசு

## மக்களுக்கு தொடர்ந்து நெருக்கடி என்கிறார் சுனில் ஹந்துனெத்தி

கொழும்பு.ஏப்.11

அரசு இனவாதத்தைத் தூண்டி வருகிறது. இனவாத அடிப்படையில் செயற்படும் தரப்பினருக்கு அரசு ஆதரவளித்து வருகிறது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.



சுனில் ஹந்துனெத்தி

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்று நுகர்வுப்பொருள்களுக்கு மூன்று வீத வரி அறவீடு செய்யப்படுகின்றது. இதன் மூலம் அரசு எந்தப் பக்கத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பியுள்ளது.

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்று புரியவில்லை. இனவாத அமைப்புக்களை அரசு ஊக்குவிக்கின்றது. வரிச்சுமை மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. அதனால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அன்றாடம் தமக்கான உணவைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் மக்கள் வறுமையில் வாழ்ந்து வருகின்றனர்-என்றார். (ச)



அனகொண்டா

# அனகொண்டா பாம்புகள் இந்தியாவுக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு.ஏப்.11

விலங்கு பரிமாற்று நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தெஹிவளை மிருகக் காட்சிசாலையிலிருந்து ஏழு அனகொண்டா பாம்புகள் இந்தியாவிலுள்ள திருவனந்தபுரம் நகர மிருகக்காட்சிசாலைக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மிருகக் காட்சிசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

சென்னையில் தென் பிராந்திய விலங்கு சோதனைத் தடுப்பு மைய அதிகாரிகள் இந்தப் பாம்புகளை மேற்பார்வை செய்யவுள்ளனர்.

பாம்புகளின் ஆரோக்கியம் சார்ந்த மருத்துவ அறிக்கைகள் சென்னை நகர மிருகக் காட்சிச் சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று வில்ங்கியல் பூங்கா மிருக வைத்தியர் ஜேகப் அலக்ஸான்டர் தெரிவித்தார். (ச)

# தேர்தல் முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள்

கொழும்பு.ஏப்.11

அண்மையில் நடைபெற்று முடிந்த மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களின் போது, முன்வைக்கப்பட்ட தேர்தல் முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

11 முறைப்பாடுகளுக்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஆணைக்குழுவின் சட்ட செயலர் நிமல் புஞ்ஜிஹேவா தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராகவே அனைத்து முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்த விசாரணைகள் தொடர்பான அறிக்கை விரைவில்வெளியிடப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



பெல்வத்தை, செவனகலை சீனித் தொழிற்சாலைகளில் கிடைத்த வருமானத்தில் 297 மில்லியன் ரூபா ஊழியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊழியர் ஒருவருக்கு இலாப நிதிக் கொடுப்பனவை வழங்குகிறார். (ச)

# சமிக்ஞை செயலிழந்ததால் ரயில் சேவையில் தாமதம்

கொழும்பு.ஏப்.11

கோட்டை ரயில்வே நிலையத்தில் சமிக்ஞை விளக்குகள் செயலிழந்ததால் கோட்டைக்கும் வெள்ளவத்தைக்கும் இடையிலான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டது என்று ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

செயலிழந்த சமிக்ஞை விளக்குகள் திருத்தம் மேற்கொள்ளப்படும் வரை அனைத்து ரயில் சேவைகளும் குறைந்த பட்சம் 15 நிமிடங்கள் தாமதமாகின என்று ரயில்வே கட்டுப்பாட்டு அறை கூறியுள்ளது. (ச)

# போலியான ஆவணங்கள் தயாரித்த 9 பேர் கைது

கொழும்பு.ஏப்.11

போலி ஆவணங்கள் தயாரித்து 80 லட்சம் ரூபா நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் 9 சந்தேகநபர்கள் கல்கிஸை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை விசேட குற்ற விசாரணை பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 102 இறப்பர் முத்திரைகள், ஆட்பதிவு திணைக்களம் என்ப் பொறிக்கப்பட்ட 10 போலி அட்டைகள், போலி அடையாள அட்டைகள் 4, மடிக்கணினி மற்றும் கார் ஆகியவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கல்கிஸை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டபோது அவர்களை 16 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)

# சிறுவர் துஷ்பிரயோக வழக்கை விசாரிக்க விசேட நீதிமன்றங்கள்

## ஒவ்வொரு மாகாணங்களிலும் அமைக்கப்படும் என்கிறார் நீதி அமைச்சர்

கொழும்பு.ஏப்.11

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான வழக்குகளைத் துரிதமாக விசாரிக்கும் வகையில் ஒவ்வொரு மாகாணங்களுக்கும் என்று விசேட நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்பொழுது கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் இத்தகைய விசேட நீதிமன்றங்கள் செயற்படுவதுடன் கண்டி மற்றும் குருநாகலிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்க வாய் மூல



ரவூப் ஹக்கீம்

விடைக்காக எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேசமயம் இது போன்ற வழக்குகளின் இரகசிய தன்மைகளைப் பாதுகாக்கும் வகையில் பிரத்தியேக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

பொதுவாக வழக்குகள் தொடர்பாகச் சந்தேகநபர்கள் மற்றும் குற்றவாளிகள் வழக்குகள் என்று புள்ளி விவரங்கள் பேணப்படுகின்ற போதிலும், ஒவ்வொரு தவறுக்காகவும் புள்ளி விவரங்கள் பேணப்படுவதில்லை என்று அவர் கூறினார். அதனால் சிறுவர் துஷ்பிரயோகம், வன்புணர்வுச் சம்பவங்கள் தொடர்பான குற்றவாளிகள் தொடர்பில் புள்ளிவிவரங்கள் பெறமுடியாதுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# போலியோ நோயை கட்டுப்படுத்திய இலங்கைக்கு கிடைத்தது சான்றிதழ்

## சுகாதார அமைச்சரிடம் கையளிப்பு

*கொழும்பு.ஏப்.11*

*போலியோ நோயை முழுமையாகக் கட்டுப்படுத்தியதற்கான சான்றிதழை இலங்கைக்கு உலக சுகாதார நிறுவனம் வழங்கியுள்ளது.*

*தெற்காசிய நாடுகளில் 11 நாடுகள் உள்ளடங்கிய பிரதேசத்தை போலியோ நோய் வைரஸ் முற்றாக ஒழிக்கப்பட்ட வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.*

*வலயத்திலுள்ள ஏனைய நாடுகள் போலியோவை ஒழிக்க காலதாமதம் ஏற்பட்டதாலே இலங்கைக்கான சான்றிதழ் தாமதமாக வழங்கப்பட்டது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பான சான்றிதழை உலக சுகாதார நிறுவன இலங்கைப் பிரதிநிதி பிர்நெளஸி ருஸ்டம் மெஹதா சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார். (ச)*

வலயத்திலுள்ள ஏனைய நாடுகள் போலி யோவை ஒழிக்க காலதாமதம் ஏற்பட்டதாலே இலங்கைக்கான சான்றிதழ் தாமதமாக வழங்கப்பட்டது

# பௌத்த மதகுருமாரின் ஆசியை எதிர்பார்க்கும் ஒருவர் ஜனாதிபதி

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.11

இலங்கையின் அபிவிருத்திகளுக்காக பௌத்த மதகுருமார் உட்பட அனைத்து மத குருமாரின் ஆசிகளையும் ஆலோசனைகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்பார்க்கும் ஒருவர் என்று பொருளாதாரத்துறை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.



பஸில் ராஜபக்ஷ

சுதந்திரத்துக்குப் பின்னர் தற்போது நாடு அதீத அபிவிருத்திகளை அடைந்து வருகிறது என்று அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகள் அபிவிருத்திகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றன. எனினும் அந்தக் கட்சிகளில் உள்ள பலர் அரசின் வேலைத்திட்டங்களை கண்டு பொறாமைப்படுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லிணக்கத்துக்கு கைதுகள் வழியல்ல

பல நூற்றுக்கணக்கில் இலங்கையின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தொடர்ந்து விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைகளுக்கு இடையே, மேலும் 65 பேர் கடந்த இரு மாதங்களில் அரசியல் கைதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல் வெளியிட்டுள்ளார் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஓர் அங்கமாக தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும்படி, போர் முடிந்த, கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் சட்ட திட்டங்களைக் காரணங்காட்டி அதனை இன்னமும் நடைமுறைப்படுத்தாமல் தட்டிக்கழித்து வருகிறது இலங்கை அரசு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடந்த அமைதிப் பேச்சுக்களின் போதும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை முக்கியமான பேசுபொருளாக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த இரு தரப்புப் பேச்சு செல்லாக் காசாகிப்போனது போலவே, அரசியல் கைதிகளின் விடுதலையும் சாத்தியமின்றிப்போனது.

இந்த இடைப்பட்ட காலத்துக்குள் அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிமலரூபன், டெல்றொக்சன் ஆகியோர் சிறையில் கொல்லப்பட்டனர். அவர்கள் தாக்கப்பட்டதாலேயே உயிரிழந்தனர் என்று மனித உரிமைக் குழுக்கள் திட்டவட்டமாகச் சொல்கின்றன. இவர்கள் தவிர வேறுசிலரும் அரசியல் கைதிகளாகச் சிறையில் இருந்த போது உயிரிழந்திருக்கின்றனர். இப்படிச் சிறைக்குச் சென்ற பலருக்கும் அதுவே இறுதிப் புகலிடமாக கடந்த காலங்களில் மாறிப்போயிருக்கிறது.

குட்டிமணி, தங்கத்துரையில் ஆரம்பித்து இலங்கையின் சிறைகளில் உயிரைவிட்ட தமிழ் அரசியல் கைதிகள் பலர். இவ்வாறு இலங்கைச் சிறைகள் தமிழ் அரசியல் கைதிகளுக்குக் கொலைக்களங்களாக இருக்கின்றபோதும், அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்வதற்கு இந்த நாட்டுத் தலைவர்களுக்கு இன்னமும் மன மிரங்கவில்லை.

அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பலருக்கு எதிராக பல ஆண்டுகளாகியும் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை என்பது மிக மோசமான மனித உரிமை மீறல். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே இவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுகிறார்கள். புதியவர்களும் அந்தச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் ஏதுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும்படி இலங்கைக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் நவிப்பிள்ளை இலங்கை அரசிடம் வலியுறுத்தி இருந்தார். மனித உரிமை அமைப்புகள் பலவும் நீண்டகாலமாவே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றன. எனினும் அவை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே அரசிடம் செல்லுபடியற்றதாகி விட்டன. இந்தத் தடைச் சட்டத்தை வைத்துக் கொண்டே ஏற்கனவே இருக்கும் அரசியல் கைதிகளைத் தொடர்ந்தும் தடுத்துவைத்திருப்பதுடன், இப்போது புதியவர்களையும் கைது செய்கிறது அரசு.

பயங்கரவாதிகள் என்று அரசே கூறிய முன்னாள் புலிகளின் தளபதிகளை அரசியல்வாதிகளாகவும் அமைச்சர்களாகவும் ஆக்கி அழகு பார்க்கும் மஹிந்த ராஜபக்ஷ அரசு, போராட்டக்களத்தில் நின்ற முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு என்ற பெயரில் சில வருடங்கள் தடுத்து வைத்திருந்துவிட்டு விடுவிக்கும் இந்த அரசு, அப்படிப்பட்டவர்களுக்கு உதவினார்கள், சாப்பாடு கொடுத்தார்கள், அப்படிப்பட்டவர்கள் பற்றிய தகவலை கொடுக்கா திருந்தார்கள் என்பன போன்ற குற்றச்சாட்டுக்களுக்காகத் தங்களை மட்டும் விசாரணைகளும் இன்றி மிக நீண்டகாலம் தடுத்து வைத்திருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்று கைதிகள் கேட்பதில் உண்மை இருக்கவே செய்கிறது.

அவர்களின் அந்த நியாயமான கேள்வி அப்படியே இருக்க, பயங்கரவாதம் என்ற பெயரால் மீண்டும் அடுக்கடுக்காகத் தமிழர்கள் கைது செய்யப்பட்டு நீதி விசாரணை இன்றித் தடுத்துவைக்கப்பட்டிருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கும் செயல். இது இனங்கள் இடையே நல்லிணக்கம் ஏற்பட ஒருபோதும் உதவாது. அரசு சொல்வது போல அவர்கள் உண்மையிலேயே குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்களாக இருந்தால் அவர்களை சாதாரண சட்டங்களின் கீழேயே விசாரணை செய்து தண்டனை கொடுக்க முடியும். அரசு ஒன்றில் அதனைச் செய்ய வேண்டும் அல்லது எல்லா அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

# இலங்கையின் போக்கை நாடி பிடிக்கிறது அமெ.

சிங்கள மூலம்– மவ்பிம
தமிழில்– வீஎஸ்ரீ

மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் கடந்த வாரத்தில் ஒருநாள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கண்டிக்குச் சென்று மகாநாயக்க தேரர்களைச் சந்தித்திருந்தார்.

இவ்விரு மாகாண சபைத் தேர்தலுக்கான முடிவுகள் வெளியான வேளையில் அலரி மாளிகைக்கு முன்புறமுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் அமெரிக்கத் தூதுவர் மிசெலினது மேசைமீது இருந்த ஆவணங்களில் ஜனாதிபதி மஹிந்தவின் கடைசித் தேர்தல் பரப்புரைக் கூட்டப் பேச்சுக் குறித்த அறிக்கை இருந்திருக்காதிருந்தால் அது ஆச்சரியத்துக்கு உரியதொன்றே. அந்த அளவுக்கு அமெரிக்கத் தூதரகம் இலங்கை அரசியலின் அன்றன்றைய நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானிக்கத் தவறுவதில்லை.

ஜெனிவா மனித உரிமைகள் சபை எந்த முடிவை எடுத்தாலும், நாம் இந்த நாட்டின் பொது மக்களது கருத்துக்களுக்கே தலை சாய்ப்போம். எம் மீதான நம்பிக்கையை எமது மக்கள் தமது முடிவின் மூலம் உலகத்துக்கு வெளிப்படுத்துவர் என்று ஜனாதிபதி மாகாண சபைகளுக்கான தமது கடைசித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார். அந்த வகையில் அண்மைய மாகாண சபைகளுக்கான தேர்தலில் 65 வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகள் அரசதரப்புக்குக் கிட்டுமென ஜனாதிபதி கணக்குப் போட்டிருக்கக்கூடும்.

இந்தத் தேர்தலில் அரசுக்கு 65 முதல் 67 சதவீத வாக்குகள் ஆறு மாவட்டங்களிலும் கிடைக்கும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் பத்திரிகையாளர் மாநாட்டின் போது பெருமெடுப்பில் தெரிவித்திருந்தார். இதன் மூலம் அரசுக்கான பொது மக்களது ஆதரவு முன்னரைவிட அதிகரித்திருக்கின்றதேயொழிய வீழ்ச்சியடையவில்லை என உலகத்துக்குக் காட்ட மஹிந்த அரசு முயன்றிருக்கக் கூடும். ஆனால் அண்மைய இரு மாகாண சபைகளுக்கான தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் மேல் மாகாணத்தில் 53.35 சதவீத வாக்குகளையும், தென் மாகாணத்தில் 58.06 சதவீத வாக்குகளையுமே மஹிந்த அரசால் ஈட்ட முடிந்திருந்தது.

அரசின் எதிர்பார்ப்பு இவ்விதம் தப்பாகிப் போனதேன் என்பதற்கு நாட்டின் அரசியல் வரலாற்றிலேயே பதிலுண்டு. 1983 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை ஐ.தே.கட்சி அரசும், 1994 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான அரசும் போரை எவ்விதம் தமது இருப்புக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனவோ, அதே போன்றுதான் இன்றைய மஹிந்த அரசும் தனது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள ஜெனிவா மனித உரிமைகள் சபையின் செயற்பாடுகளைப் பயன்படுத்தி வருகிறது.

1983 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை ஐ.தே.க.அரசு சகல தேர்தல்களின் போதும், போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை முன்னேற்ற ஐ.தே.கட்சிக்கே வாக்களிக்குமாறு வாக்காளர்களைக் கோரி வந்தது. அந்தக் கால இடைவெளியில் அத்தகைய பரப்புரைகளை நம்பி மக்களும் ஐ.தே.கட்சிக்கே வாக்களித்து அதனைப் பதவியில் அமர்த்தினர். ஆனால் 1993 இல் ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலையையடுத்து ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவின் ஆட்சியில் பூநகரி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியுற்றதையடுத்து மக்கள் ஐ.தே.கட்சியின் வாக்குறுதிகளைப் புறம் தள்ள ஆரம்பித்தனர்.

அந்த வேளையில் சந்திரிகாவோ தம்மைப் பதவியில் அமர்த்தினால் பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டு சமாதான வழியில் பிரச்சினைக்குத் தம்மால் தீர்வு காண முடியுமெனத் தெரிவித்தார். ஐ.தே.கட்சி, சந்திரிகாவுக்குப் புலி முத்திரை குத்திய போதிலும், சந்திரிகா தரப்பின் விளம்பரப் பதாகைகளில் சந்திரிகாவின் படத்துக்கு நெற்றியில் சிவப்பு நிறப் பொட்டிட்டு குளறுபடி செய்த போதிலும், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காமினி திஸநாயகாவை விடுதலைப் புலிகள் படுகொலை செய்த நிலையில் பிரபாகரனுடன் சந்திரிகா தொடர்பு பேணி வந்ததை பொதுமக்கள் பொருட்படுத்தினார்களில்லை. ஏனெனில் அந்த வேளையில் சிங்கள மக்களுக்கு போர் குறித்து கடும் வெறுப்புணர்வே ஏற்பட்டிருந்தது. போரில் வெற்றியீட்ட வேண்டியது அவசியமென சிங்கள மக்கள் கருதிய போதிலும், அது இயலாது போகுமானால், நாட்டை அழிவினின்றும் காப்பாற்ற பிரபாகரனுடன் சமாதான வழியில் பேச்சு நடத்தித் தீர்வு காண்பது தவறல்ல என்ற மனநிலை சிங்கள மக்கள் மத்தியில் அந்த வேளையில் நிலவி வந்தது. இதனாலேயே சந்திரிகாவால் 1994 இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்ட முடிந்தது.

இதற்குச் சற்றும் மாறுபாடற்ற விதத்திலேயே 2001 இல் ரணிலாலும், பிரதமர் பதவியைக் கைப்பற்ற முடிந்தது. 1999 இல் ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் சந்திரிகா மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் பிரபாகரனுக்கும் ரணிலுக்கும் இடையிலான இரகசிய ஒப்பந்தம் காரணமாகவே மேற்கொள்ளப்பட்டதென சந்திரிகாவின் தரப்பு பரப்புரை செய்தபோது சிங்கள மக்கள் அதனை நம்பினர். ஆனால் வடபகுதியில் இராணுவ முகாம்கள் ஒவ்வொன்றாக விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த வேளையிலும், கட்டுநாயக்கா விமான நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் பெரிய தாக்குதலை மேற்கொண்டு பெருநாசம் ஏற்படுத்திய வேளையிலும் நாட்டுக்கும் சிங்கள இனத்துக்கும் பெருநாசம் விளையப் போகிறதென சிங்கள மக்கள் பேரச்சம் கொள்ளத் தலைப்பட்டனர். அந்த வேளையிலேயே தாம் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக ரணில் சிங்கள மக்களுக்கு நம்பிக்கை ஊட்டினார். இதனாலேயே 'எந்தப் பேயுடன் பேசியாவது சிங்கள இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்தட்டும்' என்ற மன உணர்வில் நாம் ரணிலுக்கே வாக்களிப்போம் என்று சிங்கள மக்கள் முடிவு செய்தனர். தமது அத்தகைய வாக்குறுதி காரணமாகவே ரணிலால் அந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று அரசமைக்க முடிந்தது.

1994 ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சி அரசுக்கும், 2001 ஆம் ஆண்டில் சந்திரிகாவின் அரசுக்கும் ஏற்பட்ட நிலைமையே இன்று மஹிந்தவின் அரசுக்கும் ஏற்பட்டுள்ளது. ஜெனிவாப் பிரச்சினை ஆரம்பித்து தற்போது ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. கடந்த ஐந்தாண்டுகளாக எதிர்க் கட்சிகளுக்கும், ஜெனிவாவிலுள்ள புலம்பெயர் புலிகள் ஆதரவாளர்களுக்குமிடையே நாட்டைப் பிரிப்பது தொடர்பாக இரகசிய ஒப்பந்தம் இருப்பதாக மஹிந்த அரசு தெரிவித்து வருகிறது. இப்படிச் சொல்லிச் சொல்லியே கடந்த ஐந்தாண்டுகளாக தேர்தல்களில் அரசு வெற்றியீட்டி வருகிறது. இத்தகைய சதியை முறியடிக்க நாட்டு மக்களது ஆதரவைக் கோரி வருகிறது. சிங்கள மக்களும் அத்தகைய சதியைத் தோற்கடிப்பதற்காக மஹிந்த அரசைத் தேர்தல்களில் வெற்றி பெற வைத்து வருகின்றனர். ஆனால் 2012, 2013 மற்றும் இந்த ஆண்டிலும் இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன. அவற்றில் அரசு தோல்வியைத் தழுவியுள்ளது. இதனை 1983 முதல் 1994 வரை ஐ.தே.கட்சி அரசும் , 1994 முதல் 2001 வரை சந்திரிகாவின் அரசும் போரை வெற்றிகொள்ள சிங்கள மக்களின் வாக்குகளைக் கோரிய விதத்திலான செயற்பாடாகவே சிங்கள மக்கள் நோக்குகின்றனர்; உணர்கின்ற னர். அரச தரப்பினர் ஜெனிவாவில் தாம் வெற்றி பெற்றுவிட்டதாக 'பைலா' பாடுகிறார்கள். ஆனால் இலங்கை உலக நாடுகளால் ஓரங்கட்டப்படுகின்றது. இது போன்றதொரு இக்கட்டு நிலை இந்த நாட்டுக்கு முன்னெப்போதும் ஏற்பட்டதில்லை என்று சிங்கள மக்கள் இன்று எண்ணுகின்றனர்.

> அரசுக்கு 65 முதல் 67 சதவீத வாக்குகள் ஆறு மாவட்டங்களிலும் கிடைக்கும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் பத்திரிகையாளர் மாநாட்டின்போது பெருமெடுப்பில் தெரிவித்திருந்தார்.

இதனாலேயே அண்மைய இரு மாகாண சபைத் தேர்தல்களில் அரசு எதிர்பார்த்த 65 மற்றும் 67 சதவீத வாக்குகளை அந்த மக்கள் அரசுக்கு வழங்காது விட்டுள்ளனர். மின்சாரக் கதிரைக்குக் கொண்டு சென்றால், அதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற அரசுக்கு வழி தெரிந்திருக்க வேண்டுமல்லவா? எங்களால் அதற்கு எதுவும் செய்ய இயலாதல்லவா? என்று அந்த மக்கள் தற்போது கூறிக் கொள்கின்றனர்.

நடந்து முடிந்த மாகாண சபைகளுக்கான தேர்தல் மூலம் நாட்டு மக்கள் இன்றைய அரசுக்கு என்ன சமிக்ஞை வழங்கியுள்ளனர் என்பது குறித்து அமெரிக்கா நன்றாகவே தெரிந்து வைத்துள்ளது. இப்போது இலங்கை மீது பொருளாதாரத் தடை விதித்தால் நாட்டு மக்கள் 1994 இலிலும் 2001 இலிலும் அனுபவித்த பின்னடைவைப் போன்ற நிலைக்கு உட்படுவர் என்பதையும் அமெரிக்கா நன்குணர்ந்துள்ளது.

அமெரிக்கா எமது நாட்டுடன் வைராக்கியத்துடன் செயற்படுகிறது. அமெரிக்காவுடன் மோதி எம்மால் வெற்றி காண முடியாதல்லவா? அமெரிக்காவுடன் இணக்கமாகச் செயற்பட்டு நாட்டை அழிவிலிருந்து காப்பாற்றக்கூடிய மனிதரொருவருக்கு வாக்களித்து அதிகாரத்தில் இருத்துவோம் என இந்த நாட்டின் சிங்கள மக்கள் தீர்மானிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதையும் கூட அமெரிக்கா நன்கறிந்துள்ளது.

# ஒட்டுசுட்டானுக்கு வளம் சேர்க்கும் முத்துஐயன்கட்டுக்குளம்



தனம்

நீர்வளமும் நிலவளமும் செறிந்த ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்களுடைய வாழ்வாதாரத் தொழிலான விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்துடன் கூடிய முத்துஐயன்கட்டுக்குளம் விளங்குகிறது. இந்தக் குளத்தினது பெயரைப் பலரும் பலவாறு கூறுவர். முத்தையன்கட்டுக்குளம் எனப் பிரதேச மக்கள் கூறுவர். நீர்ப்பாசனத் திணைக்களத்தை சேர்ந்தவர்களும் சில அரச உத்தியோகத்தர்களும் முத்தரையன் கட்டுக்குளம் என அழைப்பர். சோழப் பேரரசு நிலவிய காலத்திலிருந்து இராஜராஜசோழனது மைந்தனான இராசேந்திர சோழன் ஈழ நாட்டைக் கைப்பற்றி ஆண்டகாலத்தில் சோழர் அரச படைகள் இந்த நாட்டில் தங்கி நின்றனர். இவர்கள் சிறு ஊர்களைத் தலை நகரமாகக் கொண்டு சிற்றரசர்களாக அல்லது பிரதானிகளாக அதிகாரம் செலுத்தி வந்தனர். சோழப் பேரரசின் எழுச்சிக்கும் சிறப்புக்கும் காரணர்களாக விளங்கியவர்கள் முத்தரையர்கள் ஆவர். இந்த முத்தரையர்களும் பழுவேட்டையர்களைப் போன்று படைத் தலைவர்களாகவும் சேனாதிபதிகளுமாக விளங்கினர். இவர்களுள் வன்னிப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக இருந்த படைத் தலைவராக விளங்கிய முத்தரையன் என்பவரது திட்டத்தின் பிரகாரம் பேராற்றினை மறித்துக் கட்டி இந்தக் குளம் அமைக்கப்பட்டது.

இதனால் குளம் இவரது பெயரால் அழைக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



இந்தப் பெயர் மருவி பொதுமக்கள் மத்தியில் முத்தையன் கட்டுக்குளம் என நிலவி வருகிறது.

1950 களில் இந்தக் குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் புனரமைக்கப்பட்ட போது முத்தையன்கட்டுக்குளம் என அழைக்கப்பட்டது. இதுவே நின்று நிலைத்து அரச ஆவணங்களில் முத்தையன்கட்டுக் குளம் என வழங்கப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பேராசிரியர் சுந்தரலிங்கம் வன்னியின் மூலை முடுக்கெல்லாம் சுற்றுப் பயணம் செய்து மக்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் அறிந்து கொண்டார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்து நீர்ப்பாசனக் குளங்களையும் அவற்றின் நிலைமைகளையும் அறிந்து கொண்டார். அடிநிலைமையில் உள்ள விவசாயிகளை மேம்படுத்துவதே அவரின் தலையாய நோக்கமாக இருந்தது. இதனை நிறைவேற்றக் கூடிய உதவி அரச அதிபர் ஒருவரைத் தேடினார். அந்தக் காலத்தில் மாவட்டங்களுக்குப் பொறுப்பாக உதவி அரச அதிபரும் மாகாணங்களுக்குப் பொறுப்பாக அரச அதிபர்களும் விளங்கினர். எனவே பதுளையில் உதவி அரச அதிபராக இருந்த மாணிக்கஇடைக்காடரே இதற்குப் பொருத்தமானவர் என இனங் கண்டார். 1948 ஆம் ஆண்டு மே மாதம் மாணிக்கஇடைக்காடர் வவுனியா மாவட்டத்துக்கு மாற்றம் பெற்று அந்த மாவட்டத்தின் பிரச்சினைகளை அறிந்து கொண்டார்.

இவர் சிறு விவசாய அபிவிருத்தித் திட்டங்களையும் வரைந்தார்.

இதனால் நெற்செய்கை மட்டுமல்ல மேட்டு நிலப் பயிர்ச் செய்கையையும் மேற்கொள்ளக் கூடிய நிலை உருவாகியது.

முத்துஐயன்கட்டுத் திட்டமானது முழுக்க முழுக்க உப உணவுப் பயிர்ச் செய்கைக்கே பயன்படுத்த வேண்டுமென உருவாக்கப்பட்டதாகும். இந்தக் குளத்தின் கீழ் பயறு, உழுந்து, வெங்காயம், மிளகாய், கத்தரி, நிலக்கடலை, சோளம், பூசணி போன்ற பல பணப் பயிர்களை மக்கள் ஊக்கத்துடன் மேற்கொண்டனர். விசேட பயிற்சி பெற்ற பலர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இங்கு வந்து காணி பெற்று உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இதனைப் பின்பற்றி வன்னி மக்கள் உப உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தனர். இந்தக் குளத்திலிருந்து பாயும் நீரானது அதைச் சூழவுள்ள சில குளங்களையும் நிரப்புகின்றது. மேலும் நீர் வாய்க்கால்களில் சென்றும் அந்தப் பிரதேசங்களை செழிப்படைய வைக்கின்றது. இந்தக் குளத்தினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் மத்திய பகுதி மிகுந்த பயன்பாடுடையதாக விளங்குகின்றது. வேளாண்மை மட்டுமே தமது ஜீவனோபாயத்துக்குரிய ஒரேயொரு வழி என நம்பி முன்னேற்றங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்ந்த மக்களைப் பணப் பயிர்ச் செய்கையில் ஆர்வங்கொண்டு ஈடுபட வைத்தது முத்தையன்கட்டுக்குளமேயெனில் மிகையாகாது. நீர்ப்பாசனப் பொறியியலாளரான ஆறுமுகம் மற்றும் திட்ட முகாமையாளராகக் கடமையாற்றிய த.கனகரத்தினம் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையே இங்குள்ள நிலங்கள் செழிப்புறக் காரணமாக அமைந்தன.

ஒதியமலை பெரியகுளம் தொடக்கம் மாங்குளம் திருமுறிகண்டி வரை பரந்த இந்தப் பிரதேசத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் குளங்கள் உள்ளன. அவை அனைத்துப் பயிர்ச் செய்கைக்கும் உட்படுத்தப்பட்டு நெல் உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றன. இதனால் இந்தப் பிரதேசத்தின் அரிசித் தேவை தன்னிறைவு காணக் கூடியதாக உள்ளது.

மேலும் இந்தப் பிரதேசம் பேராறு, குருவிச்சை ஆறு, கனகராயன் ஆறு ஆகிய ஆறுகளால் வளமூட்டப்படுகின்றது. குருவிச்சி நாச்சியின் பெயர் கொண்டமைந்த குருவிச்சை ஆறு பனைநின்றான் குளத்திலிருந்தும் வாவெட்டி மலை அடிவாரத்திலிருந்தும் ஆரம்பமாகி வருகின்றது. அத்துடன் ஏனைய குளங்களிலே உள்ள நீர் எல்லாம் ஓடி பேராற்றில் சங்கமமாகின்றது. கனகராயன் ஆறு வவுனியா மாவட்டத்திலுள்ள சேமமடுவில் ஆரம்பமாகி ஒட்டுசுட்டான் பிரதேசத்தை வளமாக்கிச் சென்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுக்குளத்தில் சங்கமமாகின்றது.

இவ்வாறு இயற்கையான ஆறுகளாலும் செயற்கையான குளங்களாலும் நீர்வளம் பேணப்பட்டு நிலத்துக்கு வளமூட்டி பிரதேசத்தின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வளமான பூமியைக் கொண்ட பிரதேசமாக ஒட்டுசுட்டான் விளங்குகிறது.

> முத்துஐயன்கட்டுத் திட்டமானது முழுக்க முழுக்க உப உணவுப் பயிர்ச் செய்கைக்கே பயன்படுத்த வேண்டுமென உருவாக் கப்பட்டதாகும். இந்தக் குளத்தின் கீழ் பயறு, உழுந்து, வெங்காயம், மிளகாய், கத்தரி, நிலக் கடலை, சோளம், பூசணி போன்ற பல பணப் பயிர் களை மக்கள் ஊக்கத் துடன் மேற்கொண்டனர். விசேட பயிற்சிபெற்ற பலர் யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து இங்கு வந்து காணி பெற்று உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இதனைப் பின்பற்றி வன்னி மக்களும் உப உணவுப் பொருள்களை உற் பத்தி செய்தனர். இந்தக் குளத்திலிருந்து பாயும் நீரானது அதைச் சூழவுள்ள சில குளங்களையும் நிரப்புகின்றது.

## தவக்காலச் சிந்தனை



## தெய்வம் இருப்பது எங்கே?

இறைவா நீ எங்கே? என் குரல் கேட்கவில்லையா? உம் பிரசன்னத்தை எப்போது காண்பேன்? எனக் காத்துக் கிடந்தான் ஒருவன்.

ஒரு நாள் ஒரு குரல் "மகனே நீ என்னைக் காண விரும்புகிறாயா?" என்று ஒலித்தது. "ஆம் ஆண்டவரே அதற்காகத்தான் இத்தனை காலமும் உம்முன்னிலையில் தவமிருக்கிறேன்" என்றான். அப்போது ஆண்டவர் நான் உனது சமூகத்தில், சுற்றாடலில், வீட்டில் பலமுறை வந்தேன். நீ என்னைக் காணவில்லையா? என "எப்போது வந்தீர். உம்மைக் கண்டால் எத்துணை மகிழ்வடைந்திருப்பேன்" என்றான். "நான் பசியாய் இருந்தேன் நீ எனக்கு உணவு கொடுக்கவில்லை, தாகமாய் இருந்தேன் தாகம் தீர்க்கவில்லை, அந்நியனாக அடிமையாக இருந்தேன். என்னை ஏற்று உரிமை கொடுக்கவில்லை. ஆடையின்றி, நோயுற்று, சிறைப்பட்டு பல வடிவங்களில் இருந்தேன். நீ என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை" என்று கூறினார். *(மத் 25:40)*

## மாநகர சபை கவனிக்குமா?

வாசகர்

யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் வீதியும், பி.ஏ.தம்பி ஒழுங்கையும் சந்திக்கும் பகுதியில் மக்கள் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. இந்தப் பகுதியில் கொட்டப்பட்டும், வீசப்பட்டும் காணப்படும் கழிவுகளே இதற்கான காரணமாகும்.

இங்கு பல்வேறு தரப்பினரும் குப்பைகளைக் கொட்டிவிட்டுச் சென்று விடுகின்றனர். இதனால் இந்தப் பகுதி கழிவுகளைக் கொட்டும் இடமெனக் கருதிப் பலரும் கழிவுப் பொருள்களையும், மிருகங்களின் எச்சங்களையும் வீசிவிட்டுச் செல்கின்றனர். இதனால் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கின்றது. இதனால் இந்தப் பகுதியைக் கடந்து செல்பவர்கள் மூக்கையும், கண்களையும் பொத்திக் கொண்டு செல்ல வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது. அத்துடன் சிலர் அவ்விடத்தில் வாந்தியெடுப்பதையும் அவதானிக்க முடிகின்றது. மேலும் கழிவுகளுக்குச் சண்டையிடும் நாய்களின் தொல்லையும் சகிக்க முடியாததாய் உள்ளது. இந்த நிலை தொடருமேயானால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கான ஏதுநிலை தோன்றுமென இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த இடம் மாநகர சபையால் குப்பைகள் போடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட இடமா எனப் பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் இனியும் கண்ணை மூடிக் கொண்டிராது இந்தப் பகுதியின் அவலநிலையைப் போக்க வேண்டுமென்பது இந்தப் பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

குறிப்பாக யாழ்.மாநகர மேயர் இதில் கூடிய அக்கறை எடுக்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகவும் காணப்படுகின்றது.

***இ.குமார்-மக்கள் சார்பாக***
***வண்ணார்பண்ணை***
***பி.ஏ.தம்பிலேன்.***



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: வேலை மாற்றம் சம்பந்தப்பட்ட விடயங்கள் அனுகூலமாகும். ஊதிய உயர்வுடன் கூடிய பணி மாற்றம் உண்டு. வெளி நாட்டில் பணிபுரியும் அன்பர்களுக்கு அரச அனுகூலம் உண்டு.



**இடபம்**: சக ஊழியர்களுடன் ஒத்துப் போவீர்கள். உற்பத்தி சார்ந்த தொழிற்றுறையாளர்களுக்கு தொய்வு இன்றி தொழில் நடைபெறும். வாகனங்கள், மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்தும்போது கவனம் தேவை.



**மிதுனம்**: கலைத்துறையினருக்குப் பகீரதப் பிரயத்தனம் செய்வதன் மூலமாகவே நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிறிது முயற்சி செய்வதன் மூலம் சிறந்த வாய்ப்புகள் கைகூடும். மேலும் உங்கள் கௌரவம் அதிகரிக்கும்.



**கடகம்**: புத்துணர்ச்சியுடன் எதையும் எதிர் கொள்வீர்கள். நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளையும் மிகச் சாதுர்யமாகக் கையாளுவீர்கள்.



**சிங்கம்**: உங்களது யோசனைகளை மற்றவர்கள் கேட்டும் அனுசரித்தும் செல்வார்கள். உங்களை உதாசீனப்படுத்தியவர்கள் மீண்டும் திரும்பி வருவார்கள். எதையும் ஆலோசனை செய்து முடிவெடுங்கள்.



**கன்னி**: உங்களது செயற்பாட்டால் உங்கள் குடும்பத்துக்கு நன்மை ஏற்படும். நிலம், வீடு, மனை ஆகியவற்றில் இருந்த சிக்கல்கள் விலகி நன்மையுண்டாகும்.



**துலாம்**:குடியிருக்கும் வீட்டை மாற்றவும் சிலருக்கு வாய்ப்புண்டு. பணவரவு திருப்திகரமாகஇருக்கும். ஆனால் தொழில் ஸ்தானத்தைச் சனி பார்ப்பதால் அதை உரியதாக்ச் செலவழிப்பதில்தான் உங்கள் திறமை இருக்கிறது



**விருச்சிகம்**: இரக்கப்பட்டு செய்த உதவி கூட ஏன் செய்தோம் என்று எண்ண வைக்கும். சுபகாரிய விடயங்கள் தாமதம் இல்லாமல் நடக்கும். வேலை இழந்தவர்கள் மீண்டும் பணியில் சேரப் பொன்னான நாளிது.



**தனுசு**: மேலிடத்தில் உள்ள அதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வார்கள். வேலை செய்யும் இடத்தில் உள்ள பிரச்சினைகளை நிதானமான அணுகுமுறையுடன் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.



**மகரம்**: தொழிற்றுறையாளர்களுக்கு நாள் நன்றாக இருக்கும். ஊழியர்கள் அமைதியாகச் செயற்படுவர். வரவேண்டிய மிகுதிகள் கைக்கு வரும்.



**கும்பம்**: கலைத்துறையினருக்கு நற்பெயரும் கீர்த்தியும் வந்து சேரும். பொருளாதார வசதிகள் பெருகிடவும் வாய்ப்பான நாளிது. சிலருக்குப் புதிய சொத்துக்கள் வாங்கவும் பாக்கியம் ஏற்படும்.



**மீனம்**: தடைப்பட்டிருந்த அனைத்துக் காரியங்களும் அடுத்தடுத்து நடைபெறப் போகின்றன. வெள்ளை உள்ளத்துடன் உலவும் உங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் அனைத்தும் விலகி நன்மைகள் உண்டாகும் நாளிது.

## நாளை

**பங்குனி-29 சனிக்கிழமை | 12.04.2014**

திதி: துவாதசி மு.ப.11.55 வரை
நட்சத்திரம்: பூரம்
மு.இ.08.31 வரை

சுபநேரம்: 03.06-04.36 வரை
இராகுகாலம்:.09.06-10.36 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



## கடவுளன்பு


முதல் யூனிட்டேரியன் சர்ச்சில் நேற்றிரவு விவேகானந்தரின் சொற்பொழிவைக் கேட்பதற்கு மக்கள் திரண்டிருந்தார்கள். அவர்களுள் ஜெபர்ஸன் அவினியூவிலிருந்தும் உட்வார்டு அவினியூவின் மேல் பகுதியிலிருந்தும் வந்தவர்களும் இருந்தார்கள். பெரும்பாலும் பெண்களே. அவர்கள் பிராமணப் பேச்சாளரின் சொற்பொழிவில் மிகவும் ஈடுபட்டு, பலமுறை மிகுந்த உற்சாகத்துடன் கைதட்டினார்கள்.

அவர் கூறிய அன்பு, ஆத்திரத்துடன் கூடியதன்று; இந்தியாவில் கடவுளிடம் செலுத்தும் தூய, தெய்வீக அன்பே. அவர் சொற்பொழிவில் பேச எடுத்துக் கொண்ட பொருள், 'இந்தியன் தன் கடவுளிடம் செலுத்தும் அன்பு' என்பதென ஆரம்பத்தில் தெரிவித்தார். ஆனால், அதைப் பற்றியே முழுவதும் பேசவில்லை; கிறிஸ்தவ மதத்தைத் தாக்கியே பெரும்பாலும் பேசினார். இந்தியாவின் மதமும் அங்கே உள்ள தெய்வ பக்தியும் சொற்பொழிவின் சிறிய பகுதியாயிற்று. சொற்பொழிவின் கருத்துகளுக்கு எடுத்துக்காட்டாக சரித்திரப் புகழ் பெற்று பலரது வாழ்விலிருந்து பல நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினார். அந்த நிகழ்ச்சிகள் யாவும் அவரது நாட்டில் புகழுடன் விளங்கிய மொகலாயச் சக்கரவர்த்திகளைப் பற்றியனவே; இந்து அரசர்களைப் பற்றியவை அல்ல.

சொற்பொழிவாளர் மதச் சார்புடையவர்களை ஞான நெறியைப் பின்பற்றுபவர்கள் எனவும், பக்தி நெறியைப் பின்பற்றுபவர்கள் எனவும் இரு பிரிவினர்களாக வகுத்தார். ஞான நெறியினரின் வாழ்க்கைக் குறிக்கோள் அனுபவம். பக்தி நெறியினரின் குறிக்கோள் அன்பு.

அன்பு ஒரு தியாகமே என்றார் அவர். அது ஒரு போதும் எதையும் ஏற்றுக் கொள்ளாது, எப்போதுமே கொடுக்கிறது. இந்து ஒரு போதும் ஆண்டவனிடம் எதையும் வேண்டுவதில்லை; முக்திக்காகவோ மறு உலகில் இன்பமாக இருக்கவோ வேண்டிக் கொள்ளாமல், தன்னை மறந்த அன்பு நிலையில் முழு ஆன்மாவையும் கடவுளிடம் ஒப்படைக்கிறான். இறைவனுக்காகத் தாங்க வொண்ணாத ஏக்கம் எழாமல் ஒருவரும் சிறந்த அந்த நிலையை எய்த முடியாது. அப்போதே கடவுள் தமது பூரணப் பொலிவுடன் பக்தனிடம் வருகிறார்.

# மே முதலாம் திகதி 'கோச்சடையான்' திரைக்கு




சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்துள்ள கோச்சடையான் திரைப்படம் மே முதலாம் திகதி வெளியிடவுள்ளது. 3 ஆயிரத்து 850 தியேட்டர்களில் இந்தப்படம் திரையிடப்படவுள்ளது

கோச்சடையான் ஏப்ரல் 11 ஆம் திகதி வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலாலும், ஏனைய படங்களுக்கு வழி விடும் நோக்கோடும் வெளியாகும் திகதி பிற்போடப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகள் வெளியாகும் மே 16 ஆம் திகதி அன்று 'கோச்சடையான்' படத்தை வெளியிடலாமா என்ற குழப்பம் இருந்த நிலையில், மே முதலாம் திகதியே வெளியிடலாம் என்று இறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ், இந்தி, தெலுங்கு, ஆங்கிலம், குஜராத்தி, பஞ்சாபி, ஒரியா ஆகிய மொழிகளில் இப்படம் வெளிவருகிறது. ஜப்பானிய மொழியி லும் டப்பிங் செய்து வெளியிடுகின்றனர். உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் 3 ஆயிரத்து 850 தியேட்டர்களில் இப்படத் தைத் திரையிடுகின்றனர். கோச்சடையான் வெளியாகும் நாள் குறித்த அறிவிப்பை நாளை பத்திரிகை விளம்பரங்கள் மூலம் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

நடிகர் ரஜினிகாந்த், தீபிகா படுகோன், சரத்குமார், ஷோபனா, ஆதி, ருக்மணி உள்ளிட்ட பலர் நடிப்பில், மோஷன் கேப்சர் தொழில் நுட்பத்தில் தயாராகி இருக்கி றது 'கோச்சடை யான்'. சவுந்தர்யா ரஜினிகாந்த் இயக்க, ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்து இருக்கிறார். மீடியா ஒன் நிறுவனம் தயாரித்திருக்கும் இந்தப் படத்தை ஈராஸ் நிறுவனம் வெளியிடுகிறது. இந்தப்படத்துக்கு சென்சார் அதிகாரிகள் 'யூ' சான்றிதழ் அளித்திருந்தாலும் படத்தின் முதல் பிரதியை தயார் செய்ய இயக்குநர் சவுந்தர்யா சீனா சென்றமை குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 1 | | 3 | 7 | | | |
| 3 | | | | | 4 | 7 | | 9 |
| | 9 | 7 | 1 | 2 | | | | |
| | | 4 | 7 | 6 | 2 | | | |
| | 6 | | | 8 | | | 7 | |
| | | | 5 | 4 | 9 | 8 | | |
| | | | | 1 | 5 | 4 | 8 | |
| 6 | | 8 | 4 | | | | | 7 |
| | | | 6 | 7 | | 5 | | 3 |


### நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 3 | 6 | 4 | 9 | 2 | 1 | 8 |
| 4 | 1 | 6 | 3 | 8 | 2 | 5 | 9 | 7 |
| 8 | 9 | 2 | 7 | 5 | 1 | 3 | 4 | 6 |
| 1 | 6 | 5 | 4 | 3 | 8 | 9 | 7 | 2 |
| 2 | 7 | 9 | 1 | 6 | 5 | 8 | 3 | 4 |
| 3 | 4 | 8 | 9 | 2 | 7 | 1 | 6 | 5 |
| 6 | 2 | 1 | 8 | 9 | 4 | 7 | 5 | 3 |
| 9 | 8 | 4 | 5 | 7 | 3 | 6 | 2 | 1 |
| 5 | 3 | 7 | 2 | 1 | 6 | 4 | 8 | 9 |






# தெரிந்து கொள்வோம் (Router Technology)



இணையத்தை இயக்குவதில் முக்கிய பங்கு எப்போதும் Router ஐ மட்டுமே சேரும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

**தொழில்நுட்பச் சுருக்கம்:**

இணையத்தை இயக்கத் தெரிந்த எமக்கு அதன் செயற்பாடுகளைப் புரிந்து கொள்ள கடினமாகவே உள்ளது.

எமக்குக் கிடைக்கும் இணையச் சேவையானது routing என்னும் முறையை பயன்படுத்தி ISP(Internet service provider) மூலமாக எம்மை வந்தடைகிறது.

இதன் வாயிலாகப் பெறப்படும் சேவை பல பயனாளிகளைச் சென்றடைவதற்காக switching என்னும் முறை பயன்படுத்தப்படுகிறது.

**செயற்படும் விதம்:**


வேறு networkகிலிருந்து ISP மூலமாக பெறப்படும் தகவல் packet என்னும் பெயரில் router ஐ வந்தடைகிறது. இந்த packet ல் தகவல் யாரிடம் இருந்து பெறப்பட்டது. யாரிடம் சென்று சேர வேண்டும் என்று தகவல்கள் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். Router அந்த packet ஐ தனது வழியில் பாதுகாப்பு வழிமுறைகள் ஏதும் உள்ளதா என்று சோதனையிட்டு அனுமதிக்கும்.


பெறப்படும் மற்றும் சென்றடையும் தகவல்கள் அனைத்தும் protocols மூலமாக தனது செயல்முறையை ஆரம்பிக்கின்றன.

தகவல் பரிமாற்றத்தின் வேகத்துக்கு ஏற்றவாறு இவற்றில் பல வகைகள் உள்ளன.

இதன் செயற்பாடுகள் அனைத்தும் ஐ.எஸ்.ஓ. (ISO (International Organization for Standardization) வகுத்துள்ள அதன் கட்டுப்பாடான 7 layers முறைப்படியே நடைபெறுகிறது.

இதன் தொழில்நுட்பத் திறனில் பல நிறுவனங்கள் இருந்தாலும் cisco என்னும் நிறுவனம்தான் நீண்ட காலமாக நிலைத்து நின்று சிறந்து விளங்குகிறது.




# ஸ்மார்ட் கைக்கடிகார உலகில் இரு புதிய வரவுகள்

ஸ்மார்ட் கைபேசிகளைத் தொடர்ந்து தற்போது ஸ்மார்ட் கைக்கடிகாரங்களும் பிரபல்யம் அடைந்து வருகின்றன.

இதனால் பல்வேறு நிறுவனங்களும் ஸ்மார்ட் கைக் கடிகார உற்பத்தியில் முனைப்புக் காட்டி வருகின்றன.

இப்போது தோம் தோம் (TomTom) நிறுவனமும் இரு வகை ஸ்மார்ட் கைக் கடிகாரங்களை உற்பத்தி செய்து அறிமுகம் செய்துள்ளது.


TomTom MultidSport Cardio கடிகாரத்தில் இதயத்துடிப்பு வீதத்தை அறிந்து கொள்ளும் வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் தோம்தோம் றண்ணர் கார்டியோ கடிகாரத்தின் விலை 249.99 பவுண்ட்களாகவும், தோம் தோம் மல்ற்டி ஸ்பொட் கார்டி யோ கடிகாரத்தின் விலை 279.99 பவுண்ட்களாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

# குறைந்த விலையில் மடிக்கணினிகளை உருவாக்க கைகொடுக்கும்



புதிய தொழில்நுட்பம்




கணினிகளின் மூளையாகக் கருதப்படும் சிபியு வடிவமைப்பில் முன்னணியில் திகழும் நிறுவனமாக இன்ரெல் காணப்படுகின்றது.

இந்தநிறுவனம் தற்போது நவீன தொழில்நுட்பத்தில் புதிய சிபியு ஒன்றை உருவாக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

Intel Braswell CPU என்று அழைக்கப்படும் இந்தத் துணைச் சாதனம் குறைந்த மின் பாவனையைக் கொண்டுள்ளதுடன், விலையும் மிகக் குறைவாக இருக்கின்றது. சீனாவைத் தளமாகக் கொண்டு செயற்படும் இன்ரெல் நிறுவனத்தின் வடிவமைப்பாளர்கள் குழுவே இத் தகவலை வெளியிட்டுள்ளது. அன்ரோயிட், விண்டோஸ் இயங்கு தளங்களுக்கும் ஒத்திசைவாக்கம் கொண்ட இதன் பெறுமதி 99 டொலர்களாகும்.

# Seagate அறிமுகப்படுத்தும் உலகின் வேகம் கூடிய 6TB Hard Disk




Seagate நிறுவனம் உலகின் வேகம் கூடிய நான்காம் தலைமுறை வன்தட்டை அறிமுகம் செய்துள்ளது. 3.5 அங்குல அளவுடைய இவ்வன் தட்டு 6ரி.பி. சேமிப்பு கொள்ளளவை உடையதாகவும் 7200rpm உடையதாகவும் காணப்படுவதுடன், இது ஏனைய 6 ரி.பி. வன்தட்டுக்களுடன் ஒப்பிடுகையில் 25 சதவீதம் வேகம் கூடியதாகவும் காணப்படு கின்றது. இவற்றில் 12 Gb/s அல்லது 6 Gb/s வேகம் கொண்ட பதிப்புக்கள் கிடைக்கப்பெறுவதுடன் தரவுப்பரிமாற்ற வேகம் செக்கனுக்கு 226 Mb ஆகவும் அமைந்துள்ளது.

# கைதுகள், சித்திரவதைகளை தடுப்பதற்கு சர்வதேச சமூகம் உடன் முன்வர வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

வடக்கில் தொடரும் கைதுகள் அதன் பின்னரான சித்திர வதைகளைத் தடுப்பதற்கு, சர்வதேச சமூகமும் மனித உரிமை அமைப்புகளும் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச வன்முறைகளினால் ஏற்பட்டுள்ள அபாயகரமானதும், அவலமானதுமான சூழலில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கும், தமிழர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதை நிறுத்துவதற்கும் சர்வதேச சமூகமும் மனித உரிமை அமைப்புகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கில் ஐம்பதுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகவும், அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவலை அறிய முடியாமல் இருக்கும் பாதகமான நிலைமை தொடர்பிலும் அரசைக் கண்டித்து அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

போர் நிறைவு பெற்று ஐந்து ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், வடக்கில் எத்தகைய ஆயுத மோதல்களும் அசம்பாவிதங்களும் இடம்பெறாத சூழலில், அமைதியைக் குலைத்து மக்கள் மத்தியில் மீண்டுமொரு அச்சமும் பதற்றமும் நிறைந்த சூழலை சம காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசு வலிந்து தோற்றுவித்துள்ளது. வன்னியில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் அரச படைகளின் தீவிர சோதனைக் கெடுபிடிகள், சுற்றி வளைப்பு நடவடிக்கைகளால் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அமைதிக்குப் பங்கம் விளைவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அரச படைகளின் திடீர் சுற்றி வளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளினால் இது வரையில் 50 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று அவர்கள் மீது நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளை அரசு கூறுகின்றது.

**வன்னியில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் அரச படைகளின் தீவிர சோத னைக் கெடுபிடிகள், சுற்றி வளைப்பு நடவடிக்கைகளால் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது**

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பலர் ஏற்கெனவே சிறைகளில் இருந்து நீதிமன்ற தீர்ப்புகளுக்கமையவே விடுதலையாகியிருந்தனர் என்பதும், அரசின் புனர்வாழ்வு முகாம்களிலிருந்து வெளியேறியவர்கள் என்பதும் கவனத்துக்குரியவை. மீண்டும் இவர்களைக் கைது செய்தல் என்பது அரசின் மீள் இணைப்பு சமூக மயப்படுத்தல்களை கேள்விக்குட்படுத்தியிருக்கிறது.

தொடரும் கைது மற்றும் சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் பெரியளவில் அச்சத்தையும் பதற்றத்தையும் உருவாக்கியுள்ளது. சிவில் சமூக பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் இத்தகைய இராணுவ அழுத்தங்களால் தமது அன்றாட வாழ்வியல் நடைமுறைகளை முன்னெடுப்பதில் மக்கள் பல்வேறு தாக்கங்களைச் சந்தித்துள்ளனர்.

அரச பயங்கரவாத நடவடிக்கைகளிலிருந்து தம்மை தற்காத்துக் கொள்வதற்காக இளைஞர்களும் யுவதிகளும் தமது உயிரைப் பணயம் வைத்து ஆபத்தான கடல்வழிப்பயணங்கள் ஊடாகவோ, மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணங்கள் மூலமாகவோ நாட்டைவிட்டுப் பெயர்க்கப்படும் அல்லது நிரந்தரமாகவே துரத்தப்படும் நிலை காரணமாகத் தமிழர் இனப் பரம்பல் மிகுந்தோ சாரத்தில் நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல்தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

வள்ளிபுனத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவருடைய மனைவி தனது மன வருத்தத்தைக் கூறுகையில்:

எனது கணவர் ஏற்கெனவே இரண்டு வருடங்கள் புனர்வாழ்வு பெற்றிருந்த நிலையில் விடுதலையாகியிருந்தார். அவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளமை எமது குடும்பத்தை மீண்டும் நெருக்கடி நிலைக்குள் தள்ளியுள்ளது. முள்ளிவாய்க்காலில் நாங்கள் அனைவரும் இறந்திருக்கலாம் என்ற எண்ணமே வருகிறது. துயரமும் அவலமும் நிறைந்த நாளாந்த வாழ்க்கையையே சுமக்க வேண்டிய நிலையில் நாம் அல்லல்படுகின்றோம் என்று தெரிவித்தார்.

பொது அமைதி வாழ்வுக்கு எவர் ஊறு செய்கிறார்களோ, இன்னல் விளைவிக்கிறார்களோ அவர்கள் குற்றவாளிகளே. அந்த வகையில் மஹிந்த ராஜபக்ஷ அரசு மிகப் பெரிய குற்றவாளி அரசாகும். சர்வ தேச நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மீண்டும் விடுதலைப் புலிகள் என்றதொரு மாயையை ஏற்படுத்தி, அப்பாவி இளைஞர்களினதும், குடும்பஸ்தர் களினதும் இயல்பு வாழ்க் கையைச் சிதைத்து மிக மோசமான மனித உரிமை மீறல்களில் இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது.

இத்தகைய அவலமான சூழலில் இருந்து எமது மக் களை மீட்டெடுப்பதற்கும், எமது மக்கள் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டுத்தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதை நிறுத்துவதற்கும் சர்வதேச சமூகமும் மனித உரிமை அமைப்புகளும் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (க)

## வாராந்த ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, ஏப்.11

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை பிரதி வாரம் தோறும் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முருகன் அடியார்களின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறும் இன்னிசைக் கச்சேரியில் பக்திப் பாடல்கள் இசைக்கப் படவுள்ளன. (வ-173)

## சிலுவைப் பாதைப் பேரணி

கொழும்புத்துறை, ஏப்.11

தவக்காலத்தையொட்டி திருச்சிலுவைப் பாதைப் பேரணி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து மணியம் தோட்டம் கர்த்தர் ஆலயம் வரை இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

பாஷையூர் அந்தோனியார் ஆலயத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும். திருச்சிலுவைப்பாதைப்பேரணி கடற்கரை வீதி, துண்டி வீதி, கொழும்புத்துறைவீதிவழியாக மணியம்தோட்டம் கர்த்தர் ஆலயத்தைச் சென்றடையும். குறித்த பாதைகளில் பல இடங்களில் தரித்து நின்று சிலுவைத் தியான வழிபாடுகள் நடத்தப் பட்டு கர்த்தர் ஆலயத்தைச் சென்றடைந்து திருப்பலியுடன் பேரணி நிறைவடையுமெனபங்குத்தந்தை அருட்திரு. ஜோய் பேடினன் அடிகள் தெரிவித்தார். (க-135)

## ஏழாம் ஆண்டில் நிழலாடும் நினைவுகள்




ஆண்டவன் நிழலில்:- 28.03.2007 திதி:11.04.2014:- (வளர்பிறை ஏகாதசி)

**அமரர் வைரமுத்து சிவகணேசதாசன் (பப்பாயி)**

**திருமதி சறோஜினி சிவகணேசதாசன்**

(உரும்பிராய் சந்தி, சர்மிளா றேடேர்ஸ் மற்றும் கபிலன் றான்ஸ்போர்ட் நிறுவனங்களின் முன்னாள் உரிமையாளர்கள்)

எம் அன்புத் தெய்வங்களே!
அனைத்திட ஆயிரம் சொந்தங்கள் இருந்தாலும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமோ?
எக் கணமும் எம்மை
மனதிலும் நினைவிலும் சுமந்திருந்து
வழிகாட்டி வளர்த்தெடுத்தீர்
இத்தனை நாள்கள் ஓடி மறைந்தாலும் எம் நெஞ்சில்
உங்கள் நினைவுகள்தான் பூரணமாய்
நிறைந்து நிற்கிறதே
மீண்டும் பிறப்பெடுத்து எம்முடன் நீவிர்
இணைந்திடவே அருளட்டும் எம் ஈசன்.

இன்று (11.04.2014)வெள்ளிக்கிழமை எமது அன்புப் பெற்றோரின் நினைவாக சென்னையிலுள்ள எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மேற்கொள்கின்றோம். எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மாக்கள் சாந்திபெற அருளுமாறு ஆண்டவனைப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டிக் கொள்கின்றோம்.

சர்மிளா (மகள் - 0091 9710417399
சர்வானந்தன் (மகன் - 0044 7405094455)

(C/7167)(2.6.7)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மருத்துவர்கள் நியமனம்

வடமராட்சி, ஏப்.11

பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனைக்கு புதிதாக ஆறு மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனத்தை அடுத்து நீண்ட காலம் பணி புரிந்த தென் பகுதியைச் சேர்ந்த 2 மருத்துவ அதிகாரிகளும்தென்பகுதிக்கே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்ற மருத்துவ அதிகாரிகள் 6 பேரும் தென் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் இருவர் வெளிநோயாளர் பிரிவிலும், இருவர் விடுதிகளிலும், மற்றைய ஒருவர் இரத்த வங்கியிலும் பணியாற்றி வருகின்றார்கள். எஞ்சிய ஒருவர் சட்ட மருத்துவ அதிகாரியாகப் பணி புரிவதற்காக ஒரு மாத காலப் பயிற்சியை கொழும்பில் பெற்று வருகின்றார். பயிற்சி நிறைவுற்றதும் இதே வைத்தியசாலையில் சட்ட மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றுவார் எனப் பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகர் மருத்திவர் ரி.விநோதன் தெரிவித்தார். (க-173)

## நினைவுகள் அழியா!



அமரர்

**கார்த்திகேசு நிருபன்**

(ஆசிரியர்,
வ/நேரியகுளம்
அல்ஹாமியா முஸ்லிம்
மகா வித்தியாலயம்)

ஆசிரியத் தொழிலுக்கே உன்னை அர்ப்பணித்த
நேசா! நிருபா! நின் நினைவுகள் அழியா!

யாழ். இந்து பழைய மாணவர்.
(1994 உயர்தரம்)

(33496)(3.6.4)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
05 * 04 * 1941



விண்ணில்
24 * 03 * 2013

**திருமதி சிவபாக்கியம் தாமோதரம்பிள்ளை**

எங்கள் அம்மாவே,
நித்திலம் விட்டு நீங்கள் நித்தியத் துயில்
கொண்டு ஆண்டு ஒன்று
ஆனதம்மா, எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகளைச்
சுமந்தபடியே நாம் வாழ்வோம்.

(46666)
(7.6.3)

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

குடும்பத்தினர்.

# சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஏப்.11

2013 டிசெம்பர் மாதம் நடை பெற்ற ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த வியாழக்கிழமை வெளியாகின. இந்தப் பரீட்சையைல் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**மன்/பெரிய பண்டிவிரிச்சான் ம.வி**

க.சஜித்தா-3ஏ4சிஎஸ், அ.வினுஸ்ராபீரிஸ்- 2ஏ2பி3சிஎஸ், ம.சுசிகரன்-2ஏ3பிசி2எஸ், ச.சரண்ராஜ்-2ஏ4பி2சி, ம.டெமோன்-2ஏசி4எஸ், அ.மைக்கல் ஜக்ஷன் குரூஸ்-ஏ3பி 4சி, ம.துஷ்யந்தன்-ஏ2பி4சிஎஸ், ச.நிலக்சன்-ஏ2பி3சி2எஸ், க.கார்த்தீபன்-ஏபி2சி4எஸ், ப.சுரேந்தர்-ஏ2பி5எஸ், தி.தியாசன்-பி2சி4எஸ்.

**அம்பன் அ.மி.த.க.பாடசாலை**

இ.மஞ்சிகா-6ஏ2பிசி, தி.நிசாந்தன்-5ஏ2பிசிஎஸ், த.தயாளுபன்-3ஏ3பி2சி, க.சுதனா-3ஏபி4சிஎஸ், தி.சரூபிகா-3ஏ2பி 3சிஎஸ், க.சிந்துயா-2ஏ2பி2சி2எஸ், சி.யாசோதா-2ஏ3சி 4எஸ், ஜெ.தேவதாஸ்-ஏபி3சி3எஸ், ர.ஜெயகரன்-ஏ2பி4சி2 எஸ், ப.டனுஜா-ஏபி3சிஎஸ், கே.தர்சிகா-ஏபிசி4எஸ், இ.மதுசனா- ஏ2பி3 சி2எஸ், ம.சுவிதா-2பி3சி2எஸ், லோ.குமணன் - ஏபி2சி4எஸ், து.கிருஸ்ணபவான்-ஏபிசி5எஸ்.

**கரணவாய் மகா வித்தியாலயம்**

எஸ்.காயத்திரி-4ஏபிசி3எஸ், கே.மிதுனுகா-ஏபி4சி3எஸ், ஆர்.ஆரணி-5ஏ3பிசி, எஸ்.செல்வரூபி-ஏ4பி3சி, பி.லாவண்யா-2ஏ2பி 2சி3எஸ், எஸ்.மதுசாலினி- ஏ5பிசிஎஸ், ரி.தனுசிகா-8ஏபி, எஸ்.ஹிரோவன்சா-6ஏ2பிசி, பி.கயூரி- 4ஏ4சி, கே.சரண்யா-ஏபி3சி3எஸ், ஆர்.ஆர்த்தி-ஏ4சி3எஸ், கே.பானுகோபன்-ஏ4சி3எஸ், எம்.கஜன்-2ஏபி4சி, ஆர்.அனன்கன்-8ஏபி, கே.சுதர்சன்-ஏ4சி3எஸ், எம்.சாந்தன்-2ஏபி3சி 3எஸ், என்.விதுஷன்-ஏ2பிசி5எஸ், என்.வினோஷன் - ஏபி4சி3எஸ், கே.கிருஷாந் தன்-2ஏ2பி2சி2எஸ், கே.சிவகிருசன்-ஏ4சி2எஸ், வி.கவிவர் மன்-ஏபி2சி4எஸ்.

**மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை**

ச.சுலோசனா -8ஏசி, சு.டயானி -6ஏ2பிசி, செ.லோஜனா -6ஏ2பிசி, அமரசிங்கம் அனுராகவன் -6ஏபிசி, வி.கயல் விழி-5ஏ3பிசி, பத்மராசா கஜகோகுலன் -4ஏ3பிசிஎஸ், தமிழ்ச் செல்வன் கிஷாந்தன் -4ஏ4பிசி, மங்களராஜ் குகன் ராஜ் -3ஏசி5எஸ், செந்தில்குமார் சரணிதன்- 2ஏபி4சி2எஸ்.

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

நி.அபிராமி -8ஏபி, ஸ்ரீ.வேதிகா -8ஏபி, தே.உமையாளினி - 8ஏசி, இ.இனோசா -7ஏபிசி, கோ.தேனுகா-7ஏபிஎஸ், மோ.பானு ஜன் - 5ஏ3பிசி, க.தனுசிகா - 4ஏ3பி2சி, ச.நிருசா-4ஏ2பி3சி, வா.துஸ்யந்தி-4ஏபி4சி, த.வவீனா- 4ஏ2பி 2சிஎஸ்.

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

ப.காண்டீபன் - 8ஏபி, ஆ.கோகுலன் -7ஏபிசி, ச.சஞ்சீவனா -7ஏபிசி, வி.கீர்த்தனா -7ஏபிசி, ஸ்ரீ.சஜீவன்-6ஏ2பிசி, வா.சுபா - 6ஏ2பிசி, ஜெ.கீர்த்தனா -6ஏ2பிசி, கே.கெனிஸ்ரன் -5ஏ2பிசிஎஸ், வே.மிதுசான்- 3ஏ4பி 2சி,அ.யூட் -3ஏ4பி2சி, ஜெ.ஜோயல் ஜெய பிரகாஸ் -3ஏபி3 சி2எஸ், கோ.பிர தீபன் - 2ஏ3பி4சிஎஸ், சி.றெனேசன் -2ஏ3 பி4சி, தி.தாட்சாயினி -2ஏ2பி4சி, சி.டசிந்தா -2ஏ2பி4சி, சி.சஜித்தன் -2ஏபி5சிஎஸ், ம.நந்தினி -2ஏ4சி2எஸ், க.நிஜிதா-2ஏ4சி2எஸ். (வ-173)

## நீடித்தநேர சேவைக்கு வேண்டுகோள்

வர்த்தகர்கள், பொதுமக்களின் வசதி கருதி நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையை மாலை 6 மணி வரை திறந்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு நெல்லியடி வர்த்தகர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.அகிலதாஸ் இலங்கை வங்கியின் சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் எச்.எம்.முதியான்சேயிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் ஏனைய நகரப் பகுதிகளில் மாலை 6 மணிவரை இலங்கை வங்கி செயற்படுவதைப் போல நெல்லியடி, இலங்கை வங்கிக் கிளையும் செயற்பட ஆவனசெய்ய வேண்டும் என அவர் விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-173)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய அதிபர்
**ச.வாமதேவன்**
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி சரஸ்வதி நடராசா**
அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஆசிரியர் கழகம்,
யா/கோண்டாவில்
இராமகிருஷ்ண
மகாவித்தியாலயம்,
கோண்டாவில். (சி13479) (12.6)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
02.07.1943
மறைவு
12.03.2014

**அமரர் சின்னத்தம்பி பாக்கியநாதன்**

எண்ணத்திற்கெட்டாத இதயதீபம் - எம் அப்பா
நீங்கள் விண்ணிற்குள் உறைந்திட்ட விடிவெள்ளி
எம் எல்லோரின் வாழ்விற்கும் வழிகாட்டி - நீங்கள்
விண்ணக வாழ்விற்குச் சென்றதேனோ?
இதமான அரவணைப்பில் எமை வளர்த்தீர் - எம்மை
சீராக வாழ்கவென அறிவுரைப்பீர்
புண்பட எதையுமே பேசமாட்டீர்
அன்புக்கு இலக்கணமானவரே
அம்மாவை நினைத்து வருந்த வேண்டாம் - எம்,கண்போல
அவரையும் நாம் காப்போம்
உம் வழியில் மேன்மையாய் நாம் வாழ்வோம் - உங்கள்
ஆசிக்கு நாள்தோறும் ஏங்குகின்றோம்.

எம் அன்புத் தந்தையின் மரணச் செய்தி கேட்டு அவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர்கள். கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்கள் மற்றும் வேறு வகையில் எமக்கு ஆறுதல் கூறியவர்கள், பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(46675)(2.6)

அளவெட்டி தெற்கு. குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

ஏழாலை முத்தமிழ் மன்றத்தின் அங்கத்தவரும் சிறந்த நாடக கலைஞருமாகிய நாகேந்திரம் சிங்கராசா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நாகரத்தினம் நாகேந்திரம்**

அவர்கள் 12.03.2014 இல் சிவபதமடைந்தார். அவர்களை இன்றைய நாளில் நினைவு கூர்ந்து எமது அஞ்சலியை செலுத்துவதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி.

(46674)(7.6) ஏழாலை முத்தமிழ் மன்ற சமூகம்

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்குமாரு சத்தியராசன்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும், தற்போது 188, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சத்தியராசன் 30.03.2014 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் முத்துக்குமாரு-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பவானந்தன் (வட்டக்கச்சி), ஞானாம்பிகை (கனடா), சிவபாக்கியம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா (கனடா), காந்திமதி (வட்டக்கச்சி), தியாகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரு மாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 09.04.2014 புதன்கிழமை கொழும்பு கல்கிசை மண்டபத்தில் நடைபெற்றது. துயர் பகிர்வு 10.04.2014 அன்று வட்டக்கச்சி பவானந்தன் காந்திமதி இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

188, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

தகவல் : **பவானந்தன் காந்திமதி** (அண்ணி)

(43434)(7.6)

## திருமதி இராஜேஸ்வரி திருநாவுக்கரசு



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், இளவாலை, 8ஆம் கட்டை, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி திருநாவுக்கரசு 08.04.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் நாகேஸ்வரன் (லண்டன்), மகேஸ்வரிதேவி, கமலாதேவி, சந்திராதேவி, சிவசுந்தரம், உருக்குமணி தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினி தேவி, சண்முகமலர், கணேசலிங்கம், அருளாநந்த சிவம், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் ஜெயராணி, திருஞானசம்பந்தர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மயூரன் - நாகநந்தினி, சிவகாமி -ஜெயக்குமார், ரமேஷ் - சிவாஜினி, பிரகதீஸ் - சைலஜா, சசிகேஷ், அஜெந்தன் - நாகரஞ்சனா, சுசித்திரா - முருகதாஸ், நிரோசன், திவாகரன் - பிரமிளா, உவர்ணா, பாரதி - ரெஜினோல்ட், சஞ்சீவன், சலஜன், யாமினி ஆகியோரின் பேர்த்தியும், சின்மயி, கார்த்திகேயன், கௌசலியா, கணதீபன், பிரியதர்சினி, கானுஜன், மதுசாயினி, சந்தோஷ், சுலக்ஷனா, லக்ஸ்மிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2014) வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் கட்டை,
மல்லாகம்.

(46668)(12)(3.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் **நல்லதம்பி குமாரசாமி** திருமதி **பரிமளதேவி குமாரசாமி**

கடந்த 23.02.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தாய் அமரர் **பரிமளதேவி குமாரசாமி** அவர்களினதும் கடந்த 13.03.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது தந்தை **அமரர் நல்லதம்பி குமாரசாமி** அவர்களினதும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (12.04.2014) சனிக்கிழமை எங்களது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னார்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சாந்தி பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாய், தந்தை ஆகியோரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் நேரடியாக வந்து ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/13488)(2.6)

சுகந்தநிலா,
கோண்டாவில் கிழக்கு.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

## சமய சந்நிதிகளில்...


வடமராட்சி, ஏப்.11
கரவெட்டி வியாகுல அன்னையின் செபத் திருவிழா இன்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. பங்குத் தந்தை அருட்திரு. எமில்போல் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (க-173)

* * *

வடமராட்சி, ஏப்.11
மேலைப் புலோலி வாணர் குடியிருப்பு, சொக்கன்கலட்டி அருள்மிகு ஸ்ரீ முத் துமாரி அம்மன் கோயில் வருடாந்தப் பொங்கல் விழா இன்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். நாளையதினம் சனிக் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு விசேட பூசை இடம்பெற்று பிற்பகல் 1.30 மணிக்கு விழா நிறைவுபெறும். (க-173)

* * *

வட்டுக்கோட்டை அருள்மிகு பங்குரு கந்தசுவாமி ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற வுள்ளது. (க-400)



கைதடி கற்பகப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர். (வ-9)

## மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம்

நெல்லியடி சனசமூக நிலையத்தின் (N.C.C) கனடாக் கிளையினர் நெல்லியடி மத்திய கல்லூரியில் கல்விபயிலும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்கள் 11 பேருக்கு கல்வி ஊக்குவிப்பாக மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கி வருகின்றனர்.
மேலும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி கல்வி பயிலும் இரு மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டு வருகின்றது.
இந்த ஊக்குவிப்பு உதவிப் பணம் நெல்லியடி சனசமூக நிலையம் ஊடாகவே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-35)

## கணினிப் பயிற்சி

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் பிரதேச முன்பள்ளி ஆசிரியைகளுக்கு கணினிப் பயிற்சியை இலவசமாக வழங்கி வருகின்றது.
இந்தப் பயிற்சிக்கென முதற்கட்டமாக 20 ஆசிரியைகள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சியில் இணைக்கப் பட்டுள்ளனர். இந்தப்பயிற்சி ஆரம்ப நிகழ்வில் வடமராட்சி வலய முன் பள்ளி உதவிக் கல் விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டார். (க-173)


**L.P.T. 407 கன்ரர் ரக வாகனம் விற்பனைக்கு**

யாழ் மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான L.P.T. 407 கன்ரர் ரக வாகனம் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் அலுவலக கடமை நேரத்தில் சமாச பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிட்டு கேள்விப் பத்திரங்களை 22.04.2014ஆம் திகதிக்கு முன்னராக கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்/பொதுமுகாமையாளர்,
யாழ் மாவட்ட கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல.87, பலாலி வீதி, திருநெல்வேலி. (சி/13484)(7.6)







## நெடுந்தீவில் சிறப்பாக நடைபெற்ற வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை

யாழ்ப்பாணம்,ஏப்.11
நெடுந்தீவு, பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி புது வருடத்துக்கான புத்தாண்டுச் சந்தை கடந்த செவ்வாய்க் கிழமை நெடுந்தீவு சந்தைப் பகுதியில் ஆரம்பமாகி இரு தினங்கள் நடைபெற்றது.
சமுர்த்திப் பயனாளிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இந்தச் சந்தையில் பொது மக்களும் வெளியிடங்களைச் சேர்ந்த பெருமளவி லான அரச ஊழியர்களும் கொள்வனவு செய்ததைக் காணமுடிந்தது.
முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன், யாழ். சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரன், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எஸ்.பி.அருளப்பு மற்றும் கடற்படைப் பொறுப்பதிகாரி ஆகியோர் புத்தாண்டுச் சந்தையை திறந்து வைத்தனர்.



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன், யாழ். சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரன், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எஸ்.பி.அருளப்பு மற்றும் கடற்படைப் பொறுப்பதிகாரி ஆகியோர் புத்தாண்டுச் சந்தையைத் திறந்து வைத்தனர்.

உள்ளூர் உற்பத்திகளான பனம் உணவுப் பொருள்கள் மற்றும் கூடைகள், கடல் உணவு வகைகள், கீரை மற்றும் காய் கறிவகைகள் சந்தையில் அதிகமாகக் காணப்பட்டன.
கடல் உணவுப் பொருள்கள் ஏனைய இடங்களில் உள்ள விலைகளிலும் கணிசமான அளவு குறைந்த விலையிலேயே விற்பனையாகின. பெருமளவு மக்கள் இதில் கலந்து கொண்டனர். (வ-7)

## மோ. சைக்கிள்கள் விபத்து இருவர் படுகாயம்

வலி. வடக்கு, ஏப். 11
இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர் படுகாயமுற்றதுடன், தமது மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து வந்தவரை கைவிட்டு மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் தப்பி ஓடியுள்ள சம்பவம் செவ்வாய்க் கிழமை மாலை சுன்னாகம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.
சுன்னாகம் புன்னாலைக் கட்டுவன் வீதியில் உள்ள மின்சார நிலையச் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக் கொண்டன.
இந்த விபத்தில் சுன்னாகம் மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த இரத்தினம் சிவரூபன் (வயது -35) கை மற்றும் காலில் காயங்களுடனும் மற்றும் மடு, பெரிய பண்டி விரிச்சானில் இருந்து வந்து சில்லாலையில் உள்ள உறவினருடைய வீட்டில் தங்கியிருந்த வேளையில் உறவினருடன் சுன்னாகத்துக்கு மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து வந்த இம்மானுவேல் குணசிங்கம் (வயது-52) என்பவர் கால் முறிந்த நிலையிலும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
குணசிங்கம் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (வ-86)

## நூல் வெளியீட்டு

யாழ்ப்பாணம், ஏப்.11
அல்வாய் வடக்கு பழைய வேதக் கோயில் அமைந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு கந்தமுருகஞானி உருவாக்கிய 'பழைய வேதக் கோவில்' நூல் வெளியீட்டு விழா 12 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை கலாநிதி செ.திரு நாவுக்கரசு, பிரதேச செயலர் த.ஜெயசீலன், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் வே.பாலசுப்பிர மணியம் , வே.இளையகுட்டி ஆகியோர் நிகழ்த்துவர். நூலின் வெளியீட்டுரையை கோகுலராகவன் மற்றும் சு.குணேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்துவர். (க-9)






## அருளுரை

யாழ்ப்பாணம், ஏப்.11
இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இரவு 7 மணியிலிருந்து 7.30 மணி வரை 'சரணாகதி' என்ற கருப்பொருளிலான அருளுரையும் 15 நிமிடங்களுக்கு அது தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமும் யாழ்ப்பாண சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா சுவாமிகள் அவர்களால் நடத்தப்படவுள்ளது. (க)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.11
வடமாகாண கட்டட நிர்மாணிகள் சங்கத்தின் நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.
இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் மேலதிக கல்விப் பணிப்பாளர் யூ.ஜி.வை. அபயசுந்தரவும், தேசிய கட்டட நிர்மாணிகள் சங்க தலைமைப் பணிமனைத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் நடப்பு ஆண்டின் தலைவராக எம்.மங்களராஜா தெரிவு செய்யப்பட்டதுடன் புதிய நிர் வாக சபை யும் தெரிவு செய்யப்பட்டது.
சங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றகரமான திட்டங்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசிக் கப்பட்டது. (க)

## திருமுறை மனனப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.11
வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம், சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.
இந்தப் போட்டி தரம் 1,2 பாலர் பிரிவிலும், தரம் 3,4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளன. பாலர் பிரிவுக்கு "மாசில் வீணையும் மாலை மதியமும்", "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" ஆகிய இரு திருமுறைகளும், கீழ்ப் பிரிவுக்கு "கூற்றாயினவாறு விலக்ககிலீர்", "நின்பெறுமாறெண்ணுதி யேல்" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.
திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவு எதிர்வரும் 12 ஆம் திகதியாகும். பரிசில்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.
மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப.3 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ)

## கலாசாலையில் பயிற்சி முடிப்போரின் இடமாற்றம்; வடக்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்குக

### இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்துகொண்டு வெளியேறும் ஆசிரியர்களை உடனடியாக வன்னிப் பெருநிலப் பரப்பு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதைத் தவிர்த்து அதற்காக இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பு செய்த பின்னர் பொருத்தமான இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இடமாற்றம் செய்வதற்கு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குப் பொருத்தமான இடமாற்றக் கொள்கையை பகிரங்கமாக அறிவிக்கப்பட வேண்டும்- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
ஆசிரிய கலாசாலை ஆசிரியர்களின் மாற்றம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் தகவல் தெரிவிக்கையில்;
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை முடித்துக்கொண்டு மே 15ஆம் திகதி வெளியேறும் ஆசிரியர்கள் தங்களை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டாம். பொருத்தமான இடமாற்றுக் கொள்கைக்கு அமைவாக இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்த பின்னர் இடமாற்றம் செய்யுமாறு கோரியிருப்பதை மனிதாபிமான அடிப்படையில் பரிசீலனை செய்ய வேண்டும்.
தற்போது பயிற்சிபெறும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா உதவு தொகை அவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று கடமையாற்றுவதற்கு ஏற்புடையது அல்ல.
வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் பொருத்த மான முறையில் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையையோ அல்லது வடக்கு மாகாணத்துக்கு ஏற்புடைய இடமாற்றக் கொள்கையையோ உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தயங்குகின்றது.
யாழ். மாவட்டப் பாடசாலைகளில் வெளிமாவட்டப் பாடசாலை சேவை மற்றும் கஷ்டப் பிரதேச பாடசாலை சேவை, அதி கஷ்டப் பிரதேச பாடசாலைச் சேவையைப் பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் கணிசமான தொகையினர் வசதியான பாடசாலைகளில் எந்த வித மான இடமாற்றத்துக்கும் உள்ளாகாமல் தொடர்ந்து கடமை புரிகின்றனர். அவர்களை கல்வி அதிகாரிகள் பாதுகாக்கின்றனர். அவர்களை இடமாற்றம் செய்யாமல் வசதி குறைவான, செல்வாக்கு செலுத்த முடியாதவர்களையே இடமாற்றம் செய்கின்றனர். இதனால் ஆசிரியர்கள் உளப் பாதிப்புக்கும் மனக்குழப்பத்துக்கும் உள்ளாகின்றனர்.
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆசிரியர் இடமாற்ற விடயத்தில் பொருத்தமான கொள்கைகளையோ கோட்பாடுகளையோ பின்பற்றாமல் அதிகாரிகளின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அமைய நடந்து கொள்கின்றது- என்றார். (வ-11)

## உயிரியல் பிரிவு மாணவர்களுக்கு நடைபெற்று வரும் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஏப்.11
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உயிரியல் பிரிவில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு கிளிநொச்சியில் நடைபெற்று வருகின்றது.
கிளிநொச்சி நெல் ஆராய்ச்சி திணைக்களத்தில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் உயிரியல் பாடத்தில் நெல் பீடைகள் என்ற பாட அலகுக்கான செயல்முறையையும் கற்றலையும் நோக்காகக் கொண்டு இந்தக் கருத்தரங்கு நடைபெறுகின்றது. நேற்று முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ளனர்.
நெல் ஆராய்ச்சியாளர் சோ.சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் வளவாளர்களாக ஆராய்ச்சி உதவியாளர் எஸ்.இராஜேஸ்வரன், ஆசிரியர் எஸ்.அல்போன்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் கருத்தரங்கில் மாணவர்கள் நெல் பீடைகள் குறித்தும் பல்வேறு விடயங்களையும் அறிந்து கொண்டனர். (வ-18)

## சைவமும் தமிழும் ஒருங்கிணைந்து முன்னெடுக்க தோற்றம் பெற்றவைதான் சைவப்பிரகாச வித்தி.

வரணி.ஏப்.11
"சைவமும் தமிழும் ஒருங்கிணைந்த வகையில் ஒரு கால கட்டத்தில் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
இதன் ஓர் அங்கமாகவே சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் எமது பிரதேசங்களில் பல பாடசாலைகள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.
இந்தச் சிறுவர் பாடசாலையும் "சைவப்பிரகாச வித்தியாசாலையும் ஒரே பெயரில் இயங்குகின்றமை வரலாற்றுச் சிறப்பாகும்" என்றார் தென்மராட்சி கல்வி வலய ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன்.
வரணி வடக்கு கௌரிபாலன் சைவப்பிரகாச முன்பள்ளி சமூகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை மைதானத்தில் அதன் முகாமைத்துவப் பொறுப்பாளர் வீ.பாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.
இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் தொடர்ந்து கூறுகையில்;
இந்தப் பாடசாலையில்தான் எனது முதலாவது ஆசிரியப் பணி ஆரம்பமானது.
இங்கு பெற்ற கல்வி சார்ந்த பட்டறிவு தான் எனது இன்றைய பதவி உயர்ச்சிக்கு வழி கோலியது. இதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்.
இந்த முன்பள்ளி சைவப் பிரகாச வித்தியாலயத்துடன் இணைந்ததாக நிறுவப்பட்டுள்ளமை பெருமைப்பட வேண்டியது.
இந்த முன்பள்ளிக்கு பல வழிகளிலும் இந்தப் பாடசாலைச் சமூகம் ஒத்துழைப்பு வழங்கி வருவதை இங்கு காண முடிகின்றது.
இந்தப் பாடசாலை அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் சமூகம் நிகழ்வில் கல்ந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குவதைப் பாராட்டுகின்றேன்" என்றார்.
இந்த நிகழ்வில் குறித்த பாடசாலையின் முன்னாள் அதிபரும், நலன் விரும்பியு மான திருமதி ப.இராசரத்தினம், கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கொத்தணி முகாமையாளர் க.அருட் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-122)

## மாணவரின் கல்வி வளர்ச்சி பெற்றோரின் பங்களிப்பிலும் தங்கியுள்ளது

### *சென்.ஜேம்ஸ் வித்தியாலய ஆசிரியர் கருத்து*

குருநகர், ஏப்.11
பாடசாலையின் கல்வி வளர்ச்சி அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் பங்களிப்பில் மட்டுமல்ல அவர்களின் பெற்றோர்களது பங்களிப்பிலும் தங்கியுள்ளது. இவ்வாறு கூறினார் குருநகர் பேகன்- ஒஸ்லோ அமைப்பு குருநகர் கலாசார மண்டபத்தில் நடத்திய பெற்றோருடனான சந்திப்பில் உரை நிகழ்த்திய யாழ்.சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் வண.பிதா ஆர். ஜி.வி ஜின்ரஸ் அடிகளார்.
குறித்த அமைப்பின் தலைவர் கி.சிலுவைதாசன் தலைமையில் இந்தச் சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது.
இதன் போது உரை நிகழ்த்திய [illegible]ம் கூறுகையில்;
இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர்கள் தேவையான வசதிகளை வழங்க வேண்டும். அவர்களது கல்விச் செயற்பாட்டுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். குருநகர் மாணவ- மாணவிகள் கல்வி கற்பதற்கென யாழ்.சென் ஜேமஸ் ஆண்கள் பாடசாலை, சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆகியவை பெரும் சொத்தாக உள்ளன.
இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள் உயர்ந்த பதவிகளில் உள்ளனர். ஆங்கில பாடத்திலும் மாணவ -மாணவியர் சிறப்படைந்து வருகின்றனர். எனினும் இந்தப் பகுதியிலுள்ள பலர் இந்தப் பாடசாலைகளை புறம்தள்ளி விட்டு தூர இடங்களிலுள்ள பெரிய பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டி வருவதால் இங்குள்ள பாடசாலைகளில் மாணவர்களின் தொகை குறைவடைந்து வருகிறது. குருநகரில் இயங்கும் பல பொது அமைப்புகள் இவ்விரு பாடசாலைகளின் கல்வி, விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு ஆர்வத்துடன் உதவி வருகின்றன. எனவே பெற்றோர்கள் இவ்விரு பாடசாலைகளிலும் தமது பிள்ளைகளை சேர்த்து அவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஊக்கம் வழங்க வேண்டியது அவசியம் - என்றார். (வ-51)


கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்கள்

## பயிற்சி வகுப்புக்கு விண்ணப்பங்கள்

சைவசித்தாந்த, திருமுறை நேர்முகப் பயிற்சி வகுப்புக்களில் புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
சைவ சித்தாந்த திருமுறை நேர்முகப் பயிற்சி வகுப்புக்கள் திருவாவடுதுறை ஆதீன நேர்முகப் பயிற்சி மையத்தினால் இணுவில் கந்த சுவாமி கோயில் இளம் தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. பயிற்சி வகுப்புகளில் புதிதாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பப் படிவங்களை பயிற்சி மைய யாழ்ப்பாண இணைப்பாளர் மா.ந. பரமேஸ்வரன், கந்தசுவாமி கோயிலடி, இணுவில் என்னும் முக வரியில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தீபம் நிறுவனத்தால் 15 வறிய மாணவர்களுக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஏப் .11
யாழ்.திருநெல்வேலி தீபம் நிறுவனம், யாழ்.மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 15 வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் 1,000 ரூபா வீதம் கல்வி மேம்பாட்டு நிதியாக வழங்கி வருகின்றது.
தீபம் நிறுவன இயக்குநர் சபை அங்கத்தவர்களின் தீர்மானத்துக்கு அமையவே 15 மாணவர்களுக்கான கொடுப்பனவு முதற் தடவையாக இம்மாதம் முதல் வழங்கப்பட்டு வருகின்றது.
கல்வி மேம்பாட்டு நிதி ஆயிரம் ரூபா வீதம் மூன்று வருடங்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளது. (வ-50)


**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**பணிப்பெண் தேவை**
இரண்டு பேர் கொண்ட குடும்பத்தில் வீட்டில் நிரந்தரமாக தங்கி நின்று பணியாற்றக்கூடிய 27 வயதுக்குட்பட்ட, திருமணமாகாத பணிப்பெண் உடன் பணிக்குத் தேவை.
சம்பந்தப்பட்ட பணிப்பெண் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 021 226 0277 (46681)(7.6)

**வேலைவாய்ப்பு**
கொழும்பை அண்மித்தப் பகுதிகளில் Tea, Paint, Tin, Plastic bag, கோழியிறைச்சி, Battery, Brush போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல் பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18-48 வரையான ஆண் பெண் இருபாலாருக்கும் 18000/= - 25000/= சம்பளத்துடன் உணவு தங்குமிட வசதியுடன் நிரந்தர வேலைவாய்ப்பு.
தொடர்புகளுக்கு: 076 699 1993 (46705)(10)

**தேவை**
யாழ். இணுவிலில் அமைந்துள்ள அரைக்கும் ஆலைக்கு அரைப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
077 472 3121 077 643 2617
தூர இடத்திலிருந்து வருபவர்களுக்கு உணவு. தங்குமிடம் வழங்கப்படும். (46704)(10)


**காணவில்லை**



உடுவிலைச் சேர்ந்த பஞ்சரட்ணம் மதிவண்ணன் என்பவரை நேற்று முன்தினம் (09.04.2014) இல் இருந்து கொக்குவில் வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் வீட்டிற்கு திரும்பவில்லை இவரது அடையாளங்களாக விவேகம் குறைந்தவர் ,உயரம் 5 அடி, மண் நிற நீளக்காற்சட்டையும், கறுப்பும் சாம்பல் நிறத்திலுமான செக்சேட்டும் அணிந்திருந்தார். தற்பொழுது தலை மொட்டை அடித்துள்ளார். இவர் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் தகவல் தந்துதவவும்
தொடர்பு : 077 6264145, 077 7117080, 077 8448969



பூட்டான் தூதர் குழுவினர் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடினர்.

# பூட்டான் தூதர் குழு சபாநாயகர் சந்திப்பு

இலங்கைக்கு வருகை தந்துள்ள பூட்டான் விசேட தூதர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்தில் சந்தித்தனர்.

சபாநாயகரைச் சந்தித்த இந்தக் குழுவினர் பின்னர் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் டினேஷ்குணவர்த்தனவையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (ச)

# சர்வதேச ஆபத்துக்களை கேட்டு வாங்கியது அரசு

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு.ஏப்.11

அரசே சர்வதேச ரீதியான ஆபத்தை நாட்டுக்கு வரவழைத்துக் கொண்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து உள்நாட்டு விசாரணைகளை நடத்தியிருக்கலாம். அதற்கான சந்தர்ப்பம் இருந்தது.

அரசு, தான் நியமித்த, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவில்லை. அரசின் தவறு காரணமாகவே அரசு தனக்குத் தானே ஆபத்தைத் தேடிக் கொண்டுள்ளது.



கயந்த கருணாதிலக்க

அரசின் தவறைச் சர்வதேசம் தனக்கு சாதமாகப் பயன்படுத்திக் கொண்டது.

போர் குறித்து மட்டுமல்ல, ரத்துபஸ்வல மக்கள் குடிதண்ணீர் கோரிநடத்திய ஆர்ப்பாட்டம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான அறிக்கையையும் வெளியிடுமாறு ஜெனிவா யோசனையில் கோரப்பட்டுள்ளது.

எனினும் நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எதனையும் அரசு விரும்பாது. சர்வதேசத்திடம் அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதன் காரணமாகவே நாட்டுக்குத் தலைகுனிவு ஏற்பட்டுள்ளது.

நாட்டையும், நாட்டு மக்களின் வயிற்றையும் பாதுகாக்க வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வர வேண்டும்.

சர்வதேசத்தை ராஜதந்திர ரீதியில் முகாமைத்துவம் செய்ய அரசு தவறியதால், நாடு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளது-என்றார். (ச)

# சிறுபான்மை இனமாக சிங்களவர் மாறுவர்

## பொது பல சேனா கூறுகிறது

கொழும்பு.ஏப்.10

சிங்கள இனம் சிறுபான்மை இனமாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.



கலபொடத்தே ஞானசாரதேரர்

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறிய குடும்பம் பொன்னானது என்ற கொள்கையால் பல சிங்களப் பெண்கள் குடும்பக் கட்டுபாடு செய்து கொண்டனர். அதனால் எதிர்காலத்தில் சிங்களப்பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனமாக மாற்றமடையும். கொழும்பு, கண்டி, மாத்தளை போன்ற நகரங்களின் முக்கிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களாக முஸ்லிம்கள் திகழ்கின்றனர்.

அதுமட்டுமன்றி சிங்கள மக்களின் கிராமங்களையும் முஸ்லிம் மக்கள் கைப்பற்றி வருகின்றனர்-என்றார். (ச)



பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரிகள் குழுவின் தலைவர் ஜெனரல் ரஷாட் மஹ்மூத், இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் ஜகத் ஜயசூரியவை நேற்றுமுன்தினம் புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு தரப்பு உறவுகள் குறித்து இருவரும் விரிவாகக் கலந்துரையாடியதுடன், நினைவுச் சின்னங்களையும் பரிமாறிக் கொண்டனர்.

# மோ.சைக்கிள் லொறி மோதி இருவர் சாவு

கொழும்பு.ஏப்.11

ஹெக்கிராவ, மடாடுகம் என்னும் இடத்தில் மோட்டார் சைக்கிளொன்றும் லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் உயிழந்தவர்கள் தாயும், மகனும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தையடுத்து நிறுத்தாது தப்பிச் சென்ற லொறியை, தம்புள்ளையில்வைத்துப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இலங்கைப் பாதுகாப்பு நிலைமைகள் படுமோசம்

## ஆஸி. நபர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு.ஏப்.11

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் மோசமாகக் காணப்படுகின்றன என்று ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

அதனால் இலங்கைக்குப் பயணம் செய்யும் நபர்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று ஆஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது.

ஏனையவர்கள் மீதான தாக்குதல்களுக்கு இடையில் ஆஸ்திரேலிய நபர்கள் சிக்கிவிடக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களில் ஆஸ்திரேலியர்கள் பங்கேற்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

> **போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்கு ஆஸ்திரேலியா நபர்கள் பயணம் செய்ய வேண்டாம்.**

கலகங்களை அடக்குவதற்குக் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

அதனால் போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்கு ஆஸ்திரேலிய நபர்கள் பயணம் செய்ய வேண்டாம் என்று கோரப்பட்டுள்ளனர். (ச)

# ஆஸி. பயண எச்சரிக்கை தகவல் கிடைக்கவில்லை

## இலங்கை அரசு அறிவிப்பு

*கொழும்பு.ஏப்.11*

*ஆஸ்திரேலிய அரசால் வெளியிடப்பட்டுள்ள பயண எச்சரிக்கை பற்றிய தகவல்கள் எதுவும் தனக்குக் கிடைக்க்வில்லை என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.*

*பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அது குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*பயண எச்சரிக்கை தொடர்பில் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதரகத்துக்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வமாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் உரிய பதில்கள் வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்தார். (ச)*

# ரயில்வே குறுக்கு வீதிகளில் புதிதாக 200 கடவைகள்

கொழும்பு.ஏப்.11

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளிலுள்ள ரயில்வே குறுக்கு வீதிகளில் புதிதாக 200 ரயில்வே கடவைகளை நிர்மாணிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளால் அதிகளவு வீதி விபத்துக்கள் ஏற்படுவதால் போக்குவரத்து அமைச்சு நாடு முழுவதும் தற்காலிக ரயில்வே கடவைகளை நிர்மாணித்துள்ளது.

நிரந்தர ரயில்வே கடவைகளை நிர்மாணிப்பதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டது.

உத்தியோகத்தர்கள் எவரையும் பணியில் ஈடுபடுத்தாது மணி அடிக்கும் தன்னிக்க ரயில் கடவைகளை நிர்மாணிக்க இதனூடாக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முன்னுரிமை வழங்க வேண்டிய ரயில் குறுக்கு வீதிகளில் புதிய தன்னியக்க ரயில் கடவைகள் நிர்மாணிக்கும் பணிகளை விரைவில் ஆரம்பிக்க போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது. (ச)

# சைக்கிள்களில் ஒளிரும் ஸ்ரிக்கர்களை ஒட்டும் செயற்றிட்டம் ஆரம்பம்

## போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை

கொழும்பு.ஏப்.11

வீதி விபத்துக்களால் கடந்த 10 வருட காலத்தில் 2691 சைக்கிளோட்டிகள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடத்தில் மாத்திரம் 258 சைக்கிளோட்டிகள் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் வீதி விபத்துக்களினால் சைக்கிளோட்டிகள் உயிரிழப்பதைத் தடுப்பதற்காக சைக்கிள்களில் ஒளிரும் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் தேசிய திட்டத்தை முன்னெடுக்க போக்குவரத்து அமைச்சு வீதிப் பாதுகாப்பு தேசிய மன்றத்துடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான தேசிய நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் தலைமையில் களுத்துறை, வாத்துவ பகுதியில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் முதல் கட்டமாக 40 ஆயிரம் சைக்கிள்களுக்கு இலவசமாக பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் வழங்கப்பட உள்ளன என்று வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத் தலைவர் சட்டத்தரணி காமினி ஏகநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தேசிய திட்டம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

> **சைக்கிள்களில் ஒளிரும் ஸ்ரிக்கர்களை ஒட்டி விபத்துக்களை மட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதனூடாக விபத்துக்களைக் குறைக்க முடியும்.**

சைக்கிள்களில் ஒளிரும் ஸ்ரிக்கர்களை ஒட்டி விபத்துக்களை மட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதனூடாக விபத்துக்களைக் குறைக்க முடியும் என்று அவர் கூறினார். (ச)

# குற்றவாளிகளைப் பாதுகாக்கும் இந்தியாவின் பிரதான கட்சிகள்

## குற்றஞ்சாட்டுகின்றார் இயக்குநர் சீமான்

யாழ்ப்பாணம், ஏப் 11

இலங்கையில் நடைபெற்ற தமிழர் படுகொலையை மறைத்து குற்றவாளிகளைப் பாதுகாக்க இந்தியாவின் பிரதான இரண்டு கட்சி கள் முனைகின்றன என்று தெரிவித்துள்ளார் இயக்குநர் சீமான்.

இராமேஸ்வரத்தில் கடந்த 2008ஆம்ஆண்டு திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் நடிகர்கள் இணைந்து உள்நாட்டுப் போரை நிறுத்தக் கோரி உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது இயக்குநர் சீமான் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக கீயூ பிரிவு பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று இராமேஸ்வரம் நீதி மன்றில் விசாரனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



நீதிமன்றத்தின் வெளியே ஆதரவாளர்களுடன் இயக்குனர் சீமான்

வழக்கு விசாரணைகளின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் தமிழ் அப்பாவி மக்களைகொன்றுகுவித்த மஹிந்த அரசுக்கு ஆதரவு அளித்து கொலையாளிகளை பாதுகாக்க பாரதிய ஜனதா கட்சி மற்றும் காங்கிரஸ்கட்சிகள் முனைகின்றன. இத்தகைய கட்சிகளுக்கு மக்கள் தேர்தலில் ஆதரவு வழங்கத் தேவையில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-14)

# பொது பல சேனா தொடர்பில் மௌனம் காக்கின்றது அரசு

## குற்றஞ்சாட்டுகின்றார் கபீர் ஹசீம்

கொழும்பு, ஏப்.11

பொது பல சேனா அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாக அரசு இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில், நேற்றுமுன்தினம் ஜாதிக பல சேனா அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மத நல்லிணக்கம் தொடர்பான ஊடகசந்திப்பில் பொதுபல சேனா அமைப்பினர் நடந்து கொண்ட முறை தொடர்பாகக் கேள்விஎழுப்பப்பட்டபோதேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுபல சேனா அமைப்பு நேற்றுமுன்தினம் நடந்து கொண்ட அராஜகமான நடவடிக்கை தொடர்பில் அரசு இதுவரை வாய்த்திறக்கவில்லை. ஜாதிக பல சேனா அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது இடைநடுவே புகுந்த பொதுபல சேனா அமைப்பினர் அதனை குழப்பினர். இந்த சம்பவத்துக்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் இரத்தம் சிந்தும் சூழ்நிலைகளை உருவாக்கும். பயங்கரவாதத்தில் இருந்து விடுதலை செய்த நாட்டிற்குள் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் வளர்ந்து வரும் நிலையில், மீண்டும் இனவாதத்திற்கு பாதை அமைக்கும் இப்படியான சம்பவங்களை அனுமதிக்க முடியாது.

பொதுபல சேனா இதற்கு முன்னரும் பல முறை இவ்வாறு நடந்து கொண்டது. மேற்படி சம்பவம் தொடர்பில் அரசில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் செயற்படும் விதத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

முஸ்லிம் அமைச்சர்கள் அரசின் சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொண்டு, இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண முயற்சிப்பதில்லை. தீர்வை காண முயற்சிக்காதமுஸ்லிம்அமைச்சர்கள், பிரச்சினையைவைத்து அரசியல் செய்ய முயன்று வருகின்றனர்"- என்று தெரிவித்தார். (ற)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஆஸியில்

திருப்பி அனுப்பப்படுவார் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்தே அவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று அவரது நண்பர் கூறுகின்றார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள தமிழ் அகதிகள் அமைப்பின் பேச்சாளர் அரன் மைல்மக்ஸம், ஆஸ்திரேலிய அரசின் அகதிகள் மற்றும் புகலிடம் கோருவோர் கொள்கையானது அகதிகள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்துகின்றது என்பதற்கு இது ஒரு உதாரணம் - என்று தெரிவத்துள்ளார். (ப)

### பிரபாகரன்

தொடர்பாக குற்றப்புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுப் புதன்கிழமை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறை தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையின் போது, குறித்த மாநாட்டில் இரா.சம்பந்தன் ஆற்றிய உரையின் நகல்கள் தற்போது இலங்கை அரசால் தடை செய்யப்பட்டுள்ள அமைப்புகளின் மின்னஞ்சல்முகவரிகளுக்கு அனுப்பட்டுள்ளமை தொடர்பிலேயே குற்றப் புலனாய்வுத் துறையினர் அதிக கவனம் செலுத்தினர் என்று தெரியவருகின்றது. குறித்த அமைப்புகளுக்கு ஏன் அவை அனுப்பப்பட்டன?, அவற்றுடனான தொடர்புகள் என்ன? என்பவை தொடர்பாகவும் விசாரணை செய்யப்பட்டது என்று கூறப்படுகின்றது.

அத்துடன், குறித்த உரை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன், மாவீரர் நாள் இறுதி நாளன்று ஆற்றுகின்ற உரையின் உரைநடையில் அமைந்துள்ளது என்று கூறி, அது குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரியவருகின்றது. (ற-5)

### தாயும்

ரோகண தெரிவித்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த சசிகரன் தங்கமலர் (வயது 52) மற்றும் அவரது மகளான சசிகரன் யதுர்சினி (வயது 16) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் என்று கூறப்படும் தேவியன் என்பவர் வவுனியாவில் குறித்த வீட்டில் தங்கியிருந்தார் என்று கூறப்படுகின்றது. அது தொடர்பாகவே குறித்த தாயும் மகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட இருவரும் தற்போது வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சியில் ஜெயக்குமாரி மற்றும் அவரது மகளான விபூசிகா ஆகியோர் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், ஜெயக்குமாரி பூஸா முகாமிலும் சிறுமி விபூசிகா கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ற-4)

### விபூசிகா

பட்டுள்ளது. விபூசிகாவுக்காக ஒரு முறைப்பாடும், அவரது தாயுக்காக மற்றொரு முறைப்பாடும் ஆணைக்குழுவில் நேற்றுப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட விபூசிகா மற்றும் ஜெயக்குமாரி இருவரும் ஒருநாள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், தாயார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபூசிகாவின் எதிர்கால வாழ்க்கை கருதி அவரை, அவரது தாயாருடன் இணைந்து வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று விபூசிகா சார்பில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொய்யான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவரது தயாரான ஜெயக்குமாரியை விடுவிக்க வேண்டும் என்று கோரி மற்றொரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரத்தில் கடந்த மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தை அடுத்து 13 வயதான விபூசிகா மற்றும் அவரது தாயார் ஜெயக்குமாரி இருவரும் பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ற-5)

### ஒரு

வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அந்தக் கைதுடன், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் கைது நடவடிக்கைகள் வடக்கில் ஆரம்பமாகின. இதனைத் தொடர்ந்து 13 ஆம் திகதி, கிளிநொச்சி தருமபுரத்தில் பொலிஸார் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து நிலைமை தீவிரமாகியிருந்தது. வடக்கு - கிழக்கில் பாதுகாப்புக் கெடுபிடிகளும் அதிகரித்திருந்தது. தினமும் கொழும்பிலிருந்து வந்த விசேட பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் பலர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிடுகையில், "இதுவரையில் 65 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 5 பேரை மீளவும் விடுவித்துள்ளோம். தடுத்து வைக்கப்பட்டுள்ள 60 பேரில், 50 பேர் ஆண்கள், 10 பேர் பெண்கள். பத்து பெண்களில் இருவர் வவுனியாவில் தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 8 பேரும் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 50 ஆண்களில் 6 பேர் மாத்திரம் கொழும்பு நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகின்றனர். எஞ்சிய 44 பேரும் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கத்தை தடுக்கும் வகையில் தொடர்ந்தும் வடக்கில் கைது நடவ டிக்கைகள் தொடரும்" என்று தெரிவித்தார். (ற-5)

### கமலின்

கட்சியின் சார்பில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று மாகாண சபைக்குத் தெரிவாகியவர் கந்தசாமி கமலேந்திரன். சபையில் அவர் எதிர்க் கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். இவர் தற்போது நெடுந்தீவுப் பிரதேச சபையின் தவிசாளரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த வழக்கில் கமலேந்திரன் கைது செய்யப்பட்டவுடன் அவரை கட்சியை விட்டு நீக்குவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சி அறிவித்தது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டார் என்று அதன் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜெயந்த அறிவித்தார்.

இது தொடர்பிலான கடிதம் கந்தசாமி கமலேந்திரனுக்கும், மாகாணசபையின் செயலாளருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. குறித்த கடிதம் அனுப்பப்பட்ட பெப்ரவரி 7 ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள், அதாவது மார்ச் 7 ஆம் திகதி வரையிலான ஒரு மாத காலத்தினுள் தான் முன்னணியில் இருந்து நீக்கப்பட்டமைக்குக் கமலேந்திரன் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. அதனை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபை சட்டங்களின் படி அவர் மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும், அதற்குப் புதியவர் ஒருவரை நியமிக்குமாறும் கோரி, வடக்கு மாகாணசபையின் செயலாளர், யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரைக் கோரியிருந்தார்.

குறித்த விடயம் தேர்தல்கள் ஆணையாளருக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணையாளர் கட்சியின் செயலாளரிடம் புதியவர் ஒருவரை நியமிக்குமாறு கோரியிருந்தார். அதனையடுத்து வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் விருப்பு வாக்குளில் மூன்றாம் இடம்பெற்ற சி.தவராசாவின் பெயரை கட்சியின் செயலாளர் பரிந்துரைத்திருந்தார்.

குறித்த பரிந்துரையை அடுத்து தேர்தல்கள் ஆணையாளர், வடக்கு மாகாணசபையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, சி.தவராசாவை நியமிப்பதாகத் தெரிவித்து வர்த்தமானிப் பத்திரம் வெளியிட்டுள்ளார். இதற்கமைய எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறும் வடக்கு மாகாணசபை அமர்வில் சி.தவராசா கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-5)

### கவனிப்பாரற்று

வடக்கு மாகாணசபையின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் இந்த ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் நான்கு பேருக்கும் 5 மில்லியனும், முதலமைச்சருக்கு 6 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிதி இந்த ஆண்டுக்குள் பயன்படுத்தி முடிக்கப்பட வேண்டும். குறித்த நிதி பயன்படுத்துவதற்குரிய திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டாலே நிதி விடுவிக்கப்படும். இந்த நிலையில் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்குரிய ஒதுக்கீட்டு நிதியில் அரைவாசிக்கு மேற்பட்ட நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் உறுப்பினர்களால் எந்தவொரு திட்ட முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியும் வழங்கப்படவில்லை. குறித்த நிதியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு விளக்க கலந்துரையாடல் நடத்துவதற்கு வடக்கு மாகாணசபை முதலமைச்சரினால் இதுவரையில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ற-5)

### வவுனியாவில்

ருந்தனர். அவர்கள் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்று யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். பதில் நீதிவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. அதில் சந்தேக நபர்கள் உட்பட 40 பேர் நிறுத்தப்பட்டிருந்தனர். அதன் போது உரும்பிராயில் சுமார் 20 பவுண் நிறையுடைய நகைகளைப் பறிகொடுத்தவர்கள் இருவரை அடையாளங்காட்டினர். அதையடுத்து சந்தேகநபர்களுக்கு மீண்டும் 14 நாள்கள் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் உரும்பிராயில் சொகுசுக் காரில் ஆயுதங்களுடன் வந்த குழு வீடு புகுந்து கொள்ளையடித்தது. அதில் பெருமளவு நகைகள் கொள்ளையிடப்பட்டன. இந்தச் சம்பவம் நடந்து ஒருவாரம் கழிந்த நிலையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த சொகுசுக் கார் ஒன்றை வவுனியாப் பொலிஸார் எதேச்சையாகச் சோதனையிட்டனர். அந்தக் காரில் போலியான துப்பாக்கிகள், வாகன இலக்கத்தகடுகள் மற்றும் கையுறைகள் காணப்பட்டதை அடுத்து அதிலிருந்த, 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவரே தற்போது அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்டப்பட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனையில் மெடிக்கல் சென்ரர் ஒன்றை இயக்கி வருபவரான பாலசிங்கம், அதே இடத்தைச் சேர்ந்த வர்களான இராஜேந்திரன் தம்பிராசா, ஆனந்தராசா, விஸ்வநாதன் ஆகியோரும், யாழ்ப்பாணம் வேலணை யைச் சேர்ந்த அன்னலிங்கம் அகிலன் ஆகிய 5 பேருமே கைது செய்யப்பட்டவர்களாவர். (ற-4)

### நல்லூரில்

தலைமைத் தளபதியும் அவரது குழுவினரும் அங்கு வந்திருந்த பிரமுகர்களுடன் உரை யாடியதுடன், ஆலயம் குறித்த தகவல்களையும் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதனிடம் கேட்டறிந்து கொண்டனர்.

ஆலயத்தில் அர்ச்சளை செய்வதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் தலைமைத் தளபதி அவசரமாகச் செல்ல வேண்டி இருந்தமையால் அர்ச்சனை வழிபாடுகள் நடைபெறவில்லை. (ற-17-101)

## விளையாட்டு விழா இன்று

வலி வடக்கு ஏப் 11
வலி. தெற்கு பிரதேச இளைஞர்கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழககங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எஸ்.விஜிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், கௌரவ விருந்தினர்களாக வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் தியாகராசா பிரகாஸ், யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ஐ.தபேந்திரன்,தொழில் அதிபர் எ.கிருபாகரன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (கு-86)

## சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் உதைப்பந்து



சண்டிலிப்பாய்,ஏப் 11
வலி.தென்மேற்குப் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
கடந்த வருட தேசிய மட்ட உதைபந்தாட்டத்தில் வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் அணி இரண்டாமிடம் பெற்ற நிலையில் இம்முறை இளைஞர் மத்தியில் அதிக எதிர்பார்ப்பைஏற்படுத்தியுள்ளது.
இப் போட்டிகளுக்கான போட்டி அட்டவணை நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தயார் செய்யப்படுமென்பதால் குறித்த நேரத்துக்கு முன்பாக பங்குபற்றும் அணிகள் மைதானத்துக்கு சமூகமளிக்கவேண்டுமெனவும் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ரம்மிய ராகுலன் தெரிவித்தார். (த)

## இன்றைய ஆட்டம்



*யாழ்ப்பாணம், ஏப். 11*
*வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்ச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியாநகர சபை மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.*
*அதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)*



## கார்மேல் போய்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.11
95 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வட மகாண ரீதியாக நடத்தப்பட்ட 6பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமற்றத்தைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்தவாரம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.
இதில் 'பிளக் கப்' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி 4.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் தேசிகன் 16 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றார்.
பந்து வீச்சில் 'பிளக் கப்' விளையாட்டுக்கழக அணி சார்பில் றொசன் 2 இலக்கினை வீழ்த்தினார்.
30 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய 'பிளக் கப்' விளை யாட்டுக்கழக அணியினர் 4.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில்சகல இலக்கினையும் இழந்து 26 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வி அடைந்தது.
இதில் றொசன் 8 ஓட்டங்களை தமதுஅணி சார்பாக பெற்றார்.
பந்த வீச்சில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் செல்ரன்,றெக்கி ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.
ஆட்டநாயகனாக குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் தேசிகன் தெரிவானார்.
தொடர் ஆட்ட நாயகனாக 'பிளக் கப்' விளையாட்டுக்கழக அணி வீரன் றொசன் தெரிவானார். (த-23)



பிரன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் ஒவ்வொரு வருடமும் நடத்தும் விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு கடந்த 5ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெற்றது.
பிரன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் செயலாளருமான கு.சஜிக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத் தலைவரும்,முன்னாள் நகரசபை உறுப்பினருமான தேசமான்ய சு.குமாரசாமி கலந்துகொண்டார். (த)

## திருமலை பற்றிமா முதலிடம்

திருகோணமலை, ஏப். 11
திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுவிழா கடந்த வாரம் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.
இதில் திருகோணமலை பற்றிமா விளையாட்டுக்கழகம் 60 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், திருகோணமலை விக்ரேறி விளையாட்டுக்கழகம் 32 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடதையும் பெற்றுக் கொண்டன. (த-23)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஏப். 11
பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான குழு நிலைப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**வலைப்பந்தாட்டப் போட்டி**
***முதலாம்இடம்*** - நக்கீரன் விளையாட்டுக்கழகம், ***இரண்டாம் இடம்***- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

**எல்லே-ஆண்கள்**
முதலாம் இடம் - பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், இரண்டாம் இடம் - வீனஸ் விளையாட்டுக் கழகம்.

**எல்லே - பெண்கள்**
முதலாம் இடம் - சென். தோமஸ் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் - நக்கீரன் விளையாட்டுக்கழகம்

**கரப்பந்து - ஆண்கள்**
முதலாம் இடம் - வல்வை விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் - விவேகானந்த விளையாட்டுக்கழகம்.

**கரப்பந்து - பெண்கள்**
முதலாம் இடம் - பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், இரண்டாம் இடம் - வல்வைவிளையாட்டுக்கழகம்.

**கிரிக்கெட் - ஆண்கள்**
முதலாம் இடம் - கழுகுகள் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் - வீனஸ் விளையாட்டுக்கழகம்.

**கிரிக்கெட் - பெண்கள்**
முதலாம் இடம் - கழுகுகள் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் - சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம்.


**உதைபந்து - ஆண்கள்**
முதலாம் இடம் - திக்கம் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் - வல்வை விளையாட்டுக்கழகம்.

**உதைபந்து - பெண்கள்**
முதலாம் இடம் - சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் - வல்வை விளையாட்டுக்கழகம்.

**கபடி - ஆண்கள்**
முதலாம் இடம் - சென். தோமஸ் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம் - பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

**கபடி - பெண்கள்**
முதலாம் இடம் - சென். தோமஸ் விளையாட்டுக்கழகம். (த-23)

## வென்றது சென்.மேரிஸ்



யாழ்ப்பாணம், ஏப். 11
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் வட மாகண ரீதியாக நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.
இதில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
ஆட்டம் வெற்றிதோல்வி காண்பதற்காக 5சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

> **நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது.**

## அரையிறுதிக்கு சண்சைசன்



வவுனியா, ஏப். 11
வவுனியா உதைபந்தாட்டலீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள்வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.
இதில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற 3ஆவது காலிறுதியாட்டத்தில் சண்சையின் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்கிஜ்ரா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டன.
இதில் சண்சையின் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (த-23)

## யாழ்.பல்கலை அணியை வீழ்த்தியது யூனியன் வி.க.



95 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடைபெற்ற பெண்களுக்கான வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.
இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டன.
இதில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணி 24:22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

> **தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி 24:22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி**

# ஐ.பி.எல். விருந்தில் தீபிகா,மாதுரி நடனம்?



ஐ.பி.எல். 7வது தொடரின் தொடக்க விழா விருந்தில் தீபிகா படுகோனே, மாதுரி தீட்சித் ஆகியோரின் நடனங்கள் அரங்கேறப்போவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் எதிர்வரும் 16ஆம் திகதி தொடங்குகிறது.

அபுதாபியில் நடக்கும் ஆரம்ப ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் மும்பை இந்தியன்ஸ். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன. அதற்கு முந்தைய நாள் இரவு அபுதாபியில் ஐ.பி.எல். கொண்டாட்டங் கள் நடக்கவிருக்கின்றன.

இந்தமுறைகோலாகலமானதொடக்க விழா கிடையாது என்று இந்திய கிரிக்கெட் வாரிய நிர்வாக அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறியுள்ளார். அதற்குப் பதிலாக 15ஆம் திகதி இரவு எமிரேட்ஸ் பேலஸ் ஹோட்டலில் கேலா டின்னர் விருந்துக் கொண்டாட்டங்கள் அரங்கேறவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் இந்தி நடிகைகள் தீபிகா படுகோனே, மாதுரி தீட்சித் ஆகியோர் நடனம் ஆட இருப்பதாகக் கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

நடிகர் ஷாரூக்கான் தொடர்ந்து படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தாலும், முதல் நாள் விழாவில் கலந்து கொள்வார் என்று செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

# அரை இறுதிக்கு செல்ஸி, ரியல்மட்ரிட்

சம்பியன் லீக் உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிகளில் செல்ஸி, ரியல் மட்ரிட் அணிகள் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன.

செல்ஸி அணி தங்கள் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியை 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. பரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியின் மைதானத்தில் நடை பெற்ற போட்டியில் செல்சி அணி 1-2 என்ற கணக்கில் தோல்வியடைந்தது. இரு அணிகளினதும் மொத்த கோல்கள் 3-3 என அமைந்த போதும் வெளி மைதானத்தில் செல்ஸி கூடுதலான கோல்களை பெற்றமையினால் அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

பொரிசியா டோர்ட்மன்ட் அணி, ரியல்மட்ரிட் அணியை தங்கள் மைதானத்தில் வைத்து 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. முதல் சுற்றில் ரியல் மட்ரிட் அணி 3-0 என்ற கணக்கில் பொரிசியா டொர்ட்மன்ட் அணியை தங்கள் மைதானத்தில் வைத்து வெற்றி பெற்றது. மொத்த கோல் களின் அடிப்படையில் ரியல் மட்ரிட் அணி 3-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்று அரை இறுதிப் போட்டிக் குத் தெரிவாகியது. (த)

# ஆட்ட நிர்ணயச் சதி மூன்று பேர் சிக்கினர்

பங்காளதேஷில் நடைபெற்ற 20/20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றுச் சம்பியன் பட்டத் தைச் சுவீகரித்தது.

இந்தப் போட்டி தொடர்பாக ஆட்ட நிர்ணயச் சதி மேற்கொள்ளப்பட்டமை குறித்து நேற்று முன் தினம் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மும்பை வால்கேஷ்வர் பகுதியில் உள்ள அக்ருதி குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டில் தரகர்களான ராஜேஷ் மேத்தா, நிலேஷ் ஷா, நரேஷ் ஷா ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மூன்று கைத் தொலைபேசிகள், ஒன்பது நிலையான தொலைபேசிகள், மடிக் கணினிகள், ஐபாட்கள், அச்சுக் கருவிகள் ஆகியவை கைப்பற்றப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் நரேஷ் என்பவர் மார்புவலி ஏற்பட்டுள்ளதாக தெரிவித்ததை அடுத்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)



# கோஹ்லிக்கு சங்கா கூறியது என்ன?

20/20 உலக கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது. மைதானத்தில் இலங்கை அணி வீரர்கள் வெற்றிக் களிப்புடன் வலம் வந்து கொண்டிருந்தபோது இலங்கை அணியின் நட்சத்திர வீரர் குமார் சங்கக்கார விராட் கோஹ்லிக்கு ஏதோ கூறிக்கொண்டிருப்பதையும் கோஹ்லி சங்கக்காரவைத் தழுவுவதையும் காணொளியில் காண முடிந்தது.

இந்தக் காட்சியானது கிரிக்கெட் ரசிகர்கள் பலராலும் முணுமுணுக்கப்பட்டது. அதாவது இந்திய அணியின் இளம் வீரர் விராட் கோஹ்லி உணர்ச்சி வசப் படக்கூடிய வீரர். களத்தில் இருக்கும் போது அடிக்கடி கோபப்படுவதும் ஆவேசமாகச் செயற்படுவதும் உண்டு. எனவே இதனைக் கருத்திற்கொண்டு சங்கக்கார விராட் கோஹ்லிக்கு ஏதாவது அறிவுரை கூறியிருப்பார் எனப் பரவலாகப் பேசப்பட்டது.

ஆனால் உண்மையில் என்ன நடந்தது என்பதை நாடு திரும்பியுள்ள இலங்கை அணியின் சாதனை நாயகன் குமார் சங்கக்கார தெளிவுப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தேசிய வானொலியொன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்திருப்பதாவது. விராட் கோஹ்லி ஒரு சிறந்த வீரர். இந்திய அணியில் கடந்த இரு வருடங்களாகப் பேசப்படும் முக்கிய வீரரும் ஆவார். இந்தியாவுக்கு எதிரான இறுதிப்போட்டியில் நான் அரைச் சதத்தைக் கடந்தேன். இதன்போது இந்திய அணி தோல்வியடையும் நிலையில் இருந்தது. ஆனால் விராட் கோஹ்லியோ என்னிடம் ஓடி வந்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துச் சென்றார். போட்டி முடிவடைந்ததும் அவர் எனக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இதன்போது நான் அவருக்கு எந்தவொரு அறிவுரையும் கூறவில்லை. உண்மையில் கோஹ்லிக்கு என்னுடைய வாழ்த்துக்களையே தெரிவித்தேன் என்றார். (த)

# பாகிஸ்தானின் சுப்பர் 20/20

சுப்பர் 20/20 கிரிக்கெட் போட்டித் தொடரை நடத்தப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்தப் போட்டிகளை நடத்த உத்தேசித்திருப்பதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டித் தொடரில் வெளிநாட்டுக் கிரிக்கெட் வீரர்களும் பங்கு கொள்வார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த 2012ஆம் ஆண்டு உள்ளூரில் இவ்வாறான போட்டித் தொடர் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தபோதும், சர்வதேச கிரிக்கெட் சபை அதற்கான அனுமதியை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# சர்ச்சையில் அப்ரிடி, அக்மல்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்கள் சாகித் அப்ரிடியும், உமர் அக்மலும் புதிய சர்ச்சையில் சிக்கியுள்ளனர்.

பங்களாதேஷில் நடந்து முடிந்த 20/20 உலகக்கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் முறையாக அரையிறுதி வாய்ப்பை இழந்து சுப்பர் 10 சுற்றோடு வெளியேறியது.

பாகிஸ்தான் அணி தாயகம் திரும்பிய போது விமான நிலையத்தில் பேட்டி அளித்த பாகிஸ்தான் வீரர் அப்ரிடி, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் சிறந்த மன நிலையுடன் பாகிஸ்தான் அணி விளையாடவில்லை. இதுவே தோல்விக்குக் காரணமாக அமைந்தது.

எனவே அணித்தலைவர் பதவியை எனக்கு வழங்கினால், அந்தச் சவாலை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் எனக் கூறியிருந்தார்.

போட்டித் தொடரில் பங்கேற்று வரும் அணி தொடர்பாக அணித் தலைவர் மற்றும் குறிப்பிட்ட அணி நிர்வாகிகள் மட்டுமே ஊடகங்களிடம் பேசவேண்டும் என்ற கட்டுப்பாட்டை மீறி ஊடகங்களிடம் பேசியதற்காக விளக்கம் கேட்டு அப்ரிடிக்குப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடிதம் அனுப்பியுள்ளது.

பாகிஸ்தான் அணியின் சகவீரரான உமர் அக்மலும் சர்ச்சையில் சிக்குவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் லாகூரில் காரில் சென்றபோது, போக்குவரத்து விதிகளை மீறியதாக வழி மறித்த போக்குவரத்து அதிகாரிகளுடன் கைகலப்பில் ஈடுபட்டுள்ளார். இதனால் அவர் கைது செய்யப்பட்டு ஒரு நாள் காவலில் வைக்கப்பட்டார். பிறகு மன்னிப்புக் கேட்டதால் இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் தனது திருமணத்துக்கு அழைப்பிதழ் கொடுப்பதற்காக லாகூர் கடாபி ஸ்ரேடியத்தில் உள்ள கிரிக்கெட் சபை அலுவலகத்துக்குக் காரில் சென்றபோது அவரைப் பாதுகாவலர் அடையாளம் தெரியாமல் தடுத்தார். இதனால் எரிச்சல் அடைந்த உமர் அக்மல் அவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார். இந்த விவகாரங்கள் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை நடத்த முடிவு செய்துள்ளது. (த)



பொது சன நூலகம்
ஏழாலை

**A/L வரலாறு 2016**
மாவட்ட, தேசிய மட்டங்களில்
உயர் பெறுபேற்றிற்கு வழிகாட்டும்
உங்கள் ஆசான்
M. பத்மன் M.A(History)
ஆரம்பம் : 12.04.2014 சனிக்கிழமை
கற்பிக்கும் இடங்கள்:
DMI ஆரியகுளம் சந்தி
புகழ் கல்வி நிலையம் மானிப்பாய்
உயர் கலைக் கல்லூரி குளப்பிட்டி
(46648) (7.6)


**DCM** A/L 2016
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
வர்த்தகப் பிரிவு
பொருளியல் - S.வரதராஜன்
கணக்கீடு - P.பகீரதன்
வணிகக் கல்வி - V.முரளி
ஆரம்பம் : 12 - 04 - 2014
சனி 9.00 am

**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
A/L 2016 கலை, வர்த்தக, தொழில்நுட்ப
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
12.04.2014 சனி காலை 9 மணி

மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய
பயிற்சி நெறி
**HND in PHARMACY**
வயதெல்லை கிடையாது
பகுதிநேரமாகப் படிக்கலாம்
LAVA HOSPITALS (46677) (12.6)
120, Temple Road, Jaffna.
(Tel - 077 316 4617/021 222 4333)

Hurry Up! New Year Special Classes
புதுவருடத்தினை முன்னிட்டும், பாடசாலை விடுமுறையினை பயனுள்ளதாக்குவதற்கும் விசேட கட்டணக் கழிவில் துரித வகுப்புகள்
**Quick Learning Course**
**Spoken English With Grammar**
உரையாடற் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.
G.C.E (O/L) பெறுபேறுகளின் பின்னர் உங்களின் அடுத்த கட்டம்? முடிவா? ஆரம்பமா?
**Diploma In English** (Speaking, Reading, Listening, Writing)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
கிழமை, வார இறுதி நாள் வகுப்புகள்
BCHS BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel: 021 2224550 Hotlines: 0777585913, 0777222422, 0714299935
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Valavarpulliam Kulam Vavuniya. Tel: 024 3245287
வகுப்புகள் ஆரம்பம்
16/04/2014@9.00am
19/04/2014@9.00am
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே தாங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

# விஸ்டன் சஞ்சிகை சச்சினுக்கு கௌரவம்




கிரிக்கெட்டின் பைபிள் என கூறப்படும் விஸ்டன் சஞ்சிகை தமது 151ஆவது பதிப்பில் ஓய்வு பெற்ற கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கரின் புகைப்படத்தை அட்டைப்படத்தில் வெளியிட்டு அவரை கௌரவப்படுத்தியுள்ளது. இந்தியா சார்பாக இவ்வாறான கௌரவம் வழங்கப்பட்ட முதல் வீரர் சச்சின் என்பது குறிப்பிடத் தக்கது. கடந்த வருடம் சச்சின் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையிலேயே இந்த கௌரவம் சச்சினுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டின் சிறந்த 5 கிரிக்கெட் வீரர்களை விஸ்டன் சஞ்சிகை பட்டியலிட்டுள்ளது. இந்திய அணியின் ஷிகார் தவான், ஆஸ்திரேலியா அணியின் ரயன் ஹரிஸ் மற்றும் க்றிஸ் ரொஜெர்ஸ், இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் இங்கிலாந்து மகளிர் அணியின் சார்லெட் எட்வேர்ட்ஸ் ஆகியோர் ,பட்டியலிடப்பட்டுள்ளனர். இதேவேளை தென்னாபிரிக்க அணியின் டேல் ஸ்ரெய்ன் கடந்த வருடத்தின் முன்னணி கிரிக்கெட் வீரராக பெயரிடப்பட்டுள்ளார்.

விஸ்டன் சஞ்சிகையின் விருதுகள் உயரிய விருதுகளாக வீரர்களாலும், மக்களாலும் மதிக்கப்படுகின்றன.1889 ஆம் ஆண்டு சிறந்த வீரர்களுக்கான விருதுகளை விஸ்டன் பெயரிட்டது. இதேவேளை 2000 ஆம் ஆண்டு நூற்றாண்டின் சிறந்த வீரர்களாக சேர் டொனால்ட் பிரட்மன், சேர் காபில்ட் சோபர்ஸ், சேர் ஜக் ஹோப்ஷ், ஷேன் வோர்ன், சேர்விவியன் ரிச்சட்ஸ் ஆகியோர் அறிவிக்கப்பட்டனர். (த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**யாழ் மண்ணில்**
**மெற்றோ மீண்டும் புதிய பிரிவு**
தொழில்நுட்பக்கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்
(பொருளியற்கல்லூரியின் இணைநிறுவனம்)
வடபுலத்தில் இப்பிரிவுக்கென ஒரு தனித்துவமான நிறுவனம்
A/L 2016 சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
தொழில்நுட்பப்பிரிவு. இத்துறை சார்ந்த உயர் தொழில்நுட்ப விரிவுரையாளர்களும், பிரபல பாடசாலை ஆசிரியர்களும் இணைந்து கற்பிக்கின்றனர்.
* உங்கள் அனுமதி பொருளியற்கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
* A/L 2015 சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறுகின்றன.

**பொருளியற் கல்லூரி**
நாவலர்றோட், யாழ்ப்பாணம் | கே.கே.எஸ் றோட், இணுவில்
(இரு இடங்களிலும்)
A/L 2016
கலை வர்த்தகப்பிரிவு
மீண்டும் புதிய பிரிவு
நாளை - 12.04.2014 சனி
Note:
எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணி அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
* உங்கள் அனுமதிகளை நீங்கள் விரும்பிய இடத்தில்பெற்றுக்கொள்ளவும்

**DCM** யாழ்.நகர் **A/L 2016**
கலை, வர்த்தக,தொழில் நுட்ப புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 12.04.2014 காலை 9 மணி

**A/L 2016**
கலை, வர்த்தகம்
ஆரம்பம்
சனி 7.00am
யூனிவேர்சல் கந்தர்மடம்

புதிய பட்டப்படிப்புக் கல்லூரி
NEW DEGREE COLLEGE
மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக
A/L 2016 கலை, வர்த்தகம்
ஆரம்பம் : 12.04.2014
சனி : 12.00p.m (46684) (7,6,3)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
நிர்வாகி T.P : 077 968 2884

**A/L - 2016**
தொழில்நுட்பப் பிரிவு
புதியபிரிவு ஆரம்பம் சனி(12/04) மு.ப.10.00மணி
2015,2016பிரிவுகள் ஒழுங்காக நடைபெறும் ஒரே இடம்
D.M.I
ஆரியகுளம் சந்தி

**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -**
Only Official FRENCH Centre
af பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு af Alliance Française de Jaffna
FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITWZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில்...
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

கணக்காளர் சேவை
கணக்காய்வாளர்
போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புக்கள்
சனி, ஞாயிறு
11.00-04.00மணிவரை
நடைபெறுகின்றன.
T.P:075 416 4564
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி), கொமர்ஷல் வங்கியருகில்.
(சி13477)(12.3.6)

**Piano Tuning and Repair**
Mr. Joy Perera, (Piano Tuner/ Repairer) will be in Jaffna on the 11th and 12th of April, 2014.
Contact No :
077 536 4643
(46672)(7.6)

Rotary
உதயன்
யாழ்.றோட்டறிக் கழகத்தின் 73 ஆவது அகவை நிறைவில்
உதயன் குழுமத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள
சாதனையாளர் சிறப்புரை நிகழ்வில்
அமெரிக்காவில் அதியுயர் விருது பெற்ற
தமிழ் விஞ்ஞானி - பௌதிகவியல் பேராசிரியர்
சிவா. சிவானந்தன்
அவர்கள்
கலந்து கருத்துரை வழங்கவிருக்கின்றார்



காலம் : 15.04.2014,
செவ்வாய்க்கிழமை
நேரம் : பி.ப 3.00 மணி
இடம் : யாழ்.இந்துக்கல்லூரி,
குமாரசுவாமி மண்டபம்
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்
தலைவர், செயலாளர், மற்றும் அங்கத்தவர்கள்
யாழ்ப்பாண றோட்டறிக்கழகம்,
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.